
# நாம் விசுவாசிப்பது



# நாம் விசுவாசிப்பது

ICI Nearest Centre
ICI UNIVERSITY
1ST FLOOR, 1/62/14 RAVI COLONY, ST. THOMAS MOUNT, CHENNAI - 600016
PHONE : +91-44-4351 9774
Email : iciuniversitymdrs@gmail.com

© 1985 All Rights Reserved

ICI Nearest Centre
ICI UNIVERSITY
1ST FLOOR, 1/62/14 RAVI COLONY, ST. THOMAS
MOUNT, CHENNAI - 600016
PHONE : +91-44-4351 9774
Email : iciuniversitymdrs@gmail.com

## பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| | முதலாவதாக, நாம் சற்று உரையாடுவோம் .... | 5 |
| பாடம் | | |
| 1. | வேதாகமம் .... | 9 |
| 2. | தேவன் .... | 14 |
| 3. | மனிதன் .... | 21 |
| 4. | பாவம் .... | 28 |
| 5. | இயேசு கிறிஸ்து .... | 36 |
| 6. | இரட்சிப்பு .... | 47 |
| 7. | பரிசுத்தாவியானவர் .... | 59 |
| 8. | சபை .... | 64 |
| 9. | ஆவியின் உலகம் .... | 71 |
| 10. | வருங்காலம் .... | 78 |
| 11. | தேவனுடைய நியாயப் பிரமாணம் .... | 86 |
| 12. | தேவனோடுள்ள நமது ஐக்கியம் .... | 96 |
| 13. | மற்றவர்களோடுள்ள நமது ஐக்கியம் .... | 103 |
| 14. | ஒரு கிறிஸ்தவனும் தனது வாழ்க்கையும் .... | 112 |
| 15. | கிறிஸ்தவ ஜீவியம் .... | 120 |
| 16. | ஆவியினால் நிரப்பப்பட்ட ஜீவியம் .... | 132 |
| * | இறுதி வினாத்தாள் | |

# முதலாவதாக, நாம் சற்று உரையாடுவோம்

கிறிஸ்தவர்கள் எதை விசுவாசிக்கின்றனர் என்னும்கேள்வி எப்பொழுதாகிலும் உங்கள் மனதில் உதித்ததுண்டா? நீங்கள் இவ்வாறு விசுவாசிப்பதின் காரணம் என்ன என்று கேட்ட நண்பர்களுக்கு சரியான பதில் கொடுக்க இயலாமல் தவித்த சந்தர்ப்பங்கள் உங்கள் வாழ்வில் ஏற்பட்டதுண்டா? அப்படியானல் இப்புத்தகம் உங்களுக்காகவே எழுதப் பட்டது.

இப்பாடத்திட்டத்தில் வேதாகமத்தின் முக்கிய உபதேசங்கள் அடங்கியுள்ளது. அதனை நாம் அடிப்படை உபதேசங்கள் என அழைக்கிறேம். நீங்கள் இவைகளை படிப்பதின் நோக்கம் கேள்விகளுக்கு பதில் அளிப்பது மட்டுமன்றி, உங்கள் வாழ்க்கையில் ஏற்பட கூடிய பல காரியங்களை குறித்து தேவன் என்ன சொல்கிருர் என்பதை அறிந்து, கொள்ளுவதுமாக இருக்க வேண்டும்.

நீங்கள் படிக்கும், மனப்பாடம் செய்யும் வேத வசனங்கள் உங்களை ஆவிக்குரிய முறையில் வளரச் செய்யும். அவைகள் உங்கள் தனிப்பட்ட தியானத்திற்கும், மற்றவர்களோடு சுவிசேஷத்தை அறிவிப்பதிலும், மற்றவர்களுக்கு வேதாகமத்தை கற்று கொடுக்கவும் உதவிசெய்யும். வசனத்தை அறியும் அறிவு விசுவாசத்தை அதிகரிக்கச் செய்யும்.

நாம் விசுவாசிப்பது என்னும் புத்தகம், நீங்கள் எங்கும் எடுத்துச் சென்று நேரம் கிடைக்கும்போதெல்லாம் படிக்கக் கூடிய முறையில் சிறிய புத்தகமாக அமைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொருநாளும் அதனை படிக்க நேரத்தை ஒதுக்கி வைக்கவும்.

ஒவ்வொரு பாடத்தின் ஆரம்பத்திலும் அப்பாடத்தின் நோக்கம் குறிப்பிடப்பட்டுள்ளது. இப்பாடத்திலிருந்து நீங்கள் எதிர்ப்பார்ப்பது என்ன என்பதை நோக்கம் என்னும் வார்த்தை குறிப்பிடுகிறது. நோக்கம் என்று நாம் சொல்லும் போது இலக்கு அல்லது உத்தேசம் என்று பொருள் படும். நோக்கங்களை மனதில் வைத்து படிப்பீர்களெனில் சிறந்த முறையில் இப்புத்தகத்தை படிப்பீர்கள்.

ஒவ்வொரு பாடத்தின் முதல் இரண்டு பக்கங்களை மிக கவனமாய் வாசிக்கவும். தொடர்ந்து வரும் பகுதிகளுக்கென இது உங்கள் மனதை ஆயத்தமாக்கும். அடுத்த படியாக பாடத்தின் ஒவ்வொரு பிரிவுகளையும் கவனமாக வாசித்து நீங்கள் செய்ய வேண்டியது என்னும் பகுதிகளில் குறிப்பிட்டுள்ளவைகளை பின் பற்றவும். இப்புத்தகத்தை நீங்கள் ஒரு குழுவாக படிக்கிறீர்களெனில் அக்குழு தலைவரின் குறிப்புகளை கவனிக்கவும்.

## கேள்விகளுக்கு பதில் அளிப்பது எங்கனம்?

இப்பாடங்களில் பல முறையில் காணப்படும் கேள்விகள் உள்ளன. கீழே சில மதிரி பரிசோதனைகள் கொடுக்கப்பட்டுள்ளன. அவைகளை கவனிக்கவும்.

மாதிரி 1. வேதாகமத்தில் மொத்தம் அடங்கியுள்ள புத்தகங்கள்.

a) 100.

b) 66.

c) 27.

சரியான விடை b) 66 புத்தகங்கள். உங்கள் விடையில் b-ஐ சுற்றி ஒரு வட்டமிடவும்.

1. வேதாகமத்தில் மொத்தம் அடங்கியுள்ள புத்தகங்கள்.

a) 100.

(b) 66.

c) 77

சில இடங்களில் ஒன்றிற்கும் அதிகமான விடைகள் சரியாய் காணப்படும். அங்கெனமெனில் அவைகளுக்கு முன் காணப்படும் எழுத்துக்களை சுற்றி வட்டமிடவும்

மாதிரி 2. கீழ்காண்பவற்றுள் சரியான விடைகளைகுறிப் பிடவும்

a. வேதாகமத்தில் மொத்தம் 120 புத்தகங்கள் அடங் கியுள்ளன.

b. வேதாகமத்தில் இன்றும் விசுவாசிகளுக்குரியசெய்தி யடங்கியுள்ளது.

c. வேதாகம எழுத்தாளர்கள் அனைவரும் எபிரேய மொழியில் எழுதினர்.

d. வேதாகம எழுத்தாளர்கள் பரிசுத்தாவியினால் ஏவப் பட்டனர்.

இவைகளுள் b-யும், d-யும் சரியான வாக்குமூலங்கள் ஆதலால் அவைகளை சுற்றி வட்டமிடவும்.

ஒன்ருேடொன்றை இணைக்கவும் என்னும் கேள்வி பகுதி யில் உள்ள பெயர்களோடு அதை குறித்த விளக்கம் வேதா கமத்தில் எந்த புத்தகத்தில் அப்பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது என்பவற்றை குறிப்பிடுவதாகும்.

மாதிரி 3. எந்த தலைவன் என்ன காரியத்தை செய்தான் என்பதை சரியாய் இணைக்கவும்.

........ a. சீனாய் மலையில் நியாய
பிரமாணத்தை பெற்றவன். 1. மோசே.

........ b. இஸ்ரவேலரை யோர்தான்
கடக்க செய்தவன் 2. யோசுவா.

........ c எரிகோவை சுற்றியவன்.

........ d. பார்வோனின் அரண்மனையில்
வசித்தவன்.

பதில் a- யும், d–யும்மோசேயை குறிப்பிடுகின்றன

b- யும், c-யும் யோசுவாவை குறிப்பிடுகின்றன

பாடம் 1

# வேதாகமம்

கப்பல் பிரயாணிகள் அனைவரும் பயந்து நடுங்கினர். கடலில் பயங்கர காற்று அடித்தபடியால் அவர்களுள் சிலர் கடலில் மூழ்கினர். அவர்கள் நஷ்டப்பட்டவர்களாய், அவர் களுள் பல விடை காண முடியா கேள்விகள் எழும்பின. தாங்கள் போவது எங்கே? இந்த பிரயாணம் எதுவரை நீடிக்கும்? தாங்கள் எப்பொழுதாகிலும் தங்கள் வீட்டை வந்தடைவார்களா?

இதுவே 1492-ல் கப்பற்தலைவன் கிறிஸ்டோபெர் கொலம்பஸிற்கு நேராய் எழும்பின கேள்விகள். இந்தியாவை காணும் படி அட்லான்டிக் மகா சமூத்திரம் வழியாக அவன் அவர்களை, மாலுமிகளின் வரை படமின்றி கொண்டு வந்த வருகையாகும். அனால்அவர்கள் அமெரிக்காவை அடுத்துள்ள சில தீவுகளை அடைந்து தாகத்திற்கு தேவையான தண்ணீரை பருகி தங்கள் ஜீவனை காத்து கொண்டனர்.

இதை போன்ற ஒரு சம்பவம் இன்று சம்பவிக்காது. சரியான வரை படம் மற்றும் விஞ்ஞான கருவிகளை வைத்து கப்பற்தலைவர் தாங்கள் சேர வேண்டிய இடத்தை அடைவர்.

ஆனால் இன்று கரையில் உள்ள அனேகர், கடலின் அலைகளால் அடிக்கப் பட்டவர்கள் போன்று காணப்படுகின் றனர். அவர்கள் தங்களுக்குள்ளே பல கேள்விகளை கேட்கின் றனர். நான் எங்கு செல்கிறேன்? நான் நஷ்டபட்டவனாய் காணப் படுகின்றேனா? நான் எப்பொழுதாகிலும் சரியான பாதையை கண்டு கொள்வேனா? இதை போன்ற நமது எல்லா கேள்விகளையும் தேவன் அறிந்து, நம்மை சரியான பாதையில் நடத்தும் படியாக தேவன் நமக்கு ஒரு புத்தகத்தை தந்துள்ளார்.

விடைகளை ஆராய்வதற்கு முன் நாம் ஒருமித்து அப்புத்தகத்தை சற்று பார்ப்போம். அது எவ்வாறு எழுதபட்டது என்றும், எங்ஙனம் நமக்கு அருளப்பட்டது என்றும் சற்று பார்ப்போம்.

**இந்த பாடத்தில் நீங்கள் படிப்பது ........**

வேதாகமத்தின் ஆரம்பமும், அமைப்பும்.
வேதாகமத்தின் நோக்கம்.

**இந்த பாடம் உங்களுக்கு ........**

* வேதாகமத்தின் ஆரம்பத்தையும், அமைப்பையும் விளக்கி காட்டும்.
* வேதாகமம் எவ்வாறு, எதற்காக அருளப்பட்டது என்பதை அறியச் செய்யும்.

## வேதாகமத்தின் ஆரம்பமும் அமைப்பும்.

நோக்கம் 1. வேதாகமத்தின் ஆரம்பத்தையும் அடிப்படை அமைப்பையும் விளக்குதல்.

66 புத்தகங்களை கொண்டுள்ள பரிசுத்த வேதாகமம், தேவன் நமக்கு தந்தருளிய ஒர் சிறிய நூல் நிலையமாகும். அதன் முதல் பாகமாகிய - பழைய ஏற்பாடு 39 புத்தகங்களை கொண்டுள்ளது. இரண்டாம் பாகம் - புதிய ஏற்பாடு – 27 புத்தகங்களை கொண்டுள்ளது.

1600 வருடங்களுள் சுமார் 40 மனிதர்கள் இப்புத்தகங்களை எழுதுவதில் ஈடுபட்டிருந்தனர். இவர்கள் அனைவரும் பரிசுத்த வாழ்க்கை நடத்தின தேவமனிதர்கள் என வேதாகமம் கூறுகிறது. அவர்கள் சிலர் இராஜாக்கள் , உழவர்கள்' கவிஞர்கள், வியாபாரிகள், இராணுவர் மற்றும் மதத்தலைவர்களாகவும் காணப்பட்டனர். அவர்கள் வித்தியாசமான

குடும்ப பாரம்பரியமுடையவர்களாகவும், பல பட்டண வாசிகளாகவும், பல விருப்பங்களையுடையவர்களாகவும் காணப்பட்டனர்.

சரித்திரம், தீர்க்கதரிசனம் மற்றும் கவிதை போன்ற பல விஷயங்கள் வேதாகமத்தினுள் அடங்கியுள்ளது. அதனுள் சங்கீதங்களும், நீதிமொழிகளும் அடங்கியுள்ளது. சிறியோர் பெரியோர் யாவருக்கும் உற்சாகமளிக்கும் கதைகளும் அதனுள் அடங்கியுள்ளது. ஆயினும் இவை அனைத்தும் ஒரே மையப் பொருளை கொண்டுள்ளது. அதுவே – தேவனுக்கும் மனிதனுக்குமிடையே உள்ள உறவு.

## நீங்கள் செய்ய வேண்டியது

நீங்கள் செய்ய வேண்டியது என்னுமிடத்தில் காணப்படும் கேள்விகள், நீங்கள் படித்தவைகளை மீண்டும் ஞாபகத்திற்கு கொண்டு வரவும். அவைகளை அனுதின வாழ்க்கையில் கடைபிடிக்கவும் உதவி செய்யும்.

1. கோடிட்ட இடங்களை பூர்த்தி செய்யவும்.

a. பல குடும்ப பாரம்பரியமுள்ள..................................

மனிதர்களால் எழுதப்பட்ட வேதாகமம்......... ...... புத்தகங்களை கொண்டுள்ளது.

b. வேதாகமம்.............. வருடங்களுள் எழுதப்பட்டது.

c. முதலாம் பாகமாகிய ..................... ஏற்பாட்டில்

.................. புத்தகங்களும்

இரண்டாம் பாகமாகிய ............... ஏற்பாட்டில்

.................. புத்தகங்களும் அடங்கியுள்ளது.

கடைசி பாகத்தில் கொடுக்கப்பட்டுள்ள விடையோடு உங்கள் விடைகளை ஒப்பிட்டு பார்க்கவும்.

நோக்கம் 2. தெய்வீக ஏவுதலின் நிலையை அங்கீகரித்தல்

முதல் பாகத்தில் நீங்கள் ஓர் குழப்பத்தை கவனித்திருக்கலாம். அங்கு நாம் காண்பதென்னவெனில் வேதாகமத்தை தேவன் தாமே அருளினர் என்றும் மேலும், மனிதர்கள் அவைகளை எழுதினர் என்றும் பார்க்கிறோம். இது எங்கனமாகும்?

வேதாகமத்தை எழுதின நாற்பது மனிதர்களும் தேவனால் ஏவப்பட்டனர் இதன் பொருள் யாதெனில், தாங்கள் எதை எழுத வேண்டுமென தேவன் விரும்பினரே அவைகளை பரிசுத்தாவியானவர் அவர்கள் மூலம் எழுதச் செய்தார். II தீமொத்தேயு 3:16- ல்''வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது'' என நாம் பார்க்கிறோம். மேலும் வேதாகமம் உபதேசத்திற்கும், கடிந்து கொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதியை படிப்பிக்குதலுக்கும் கொடுக்கப்பட்டது என நாம் காண்கிறோம்.

நமது சிறந்த நன்மையை தேவன் விரும்புகிறபடியால், நாம் நன் முறையில் வாழ தேவையான உபதேசங்களைஅவர் நமக்கு அளித்துள்ளார். நாம் அவருடைய நியமத்தின் படி நடக்காவிட்டால் நாம் நம்மை தாமே தண்டிக்கிறவர்களாயிருப்போம் என்பதை அவர் அறிவார். நமது மனதும், சரீரமும் விசேஷமாக ஆத்துமாவும் துன்பம் அனுபவிக்கும். இதனை தவிர்க்க கூடிய சிறந்த முறை, அவருடைய வசனத்தின் படி நடத்தலாகும். அதன் மூலம் அவரை தனிப்பட்ட முறையில் அறிய கூடும். அவருடைய வழிகள் நாம் பின்பற்ற சிறந்தது என்பதை நாம் அறிவோம்.

நம் வாழ்க்கையில் நமக்கு உதவி செய்யவும், நமக்கு தேவையான பெலனை அளிக்கவுமே வேதாகமம் எழுதப்பட்டது. எப்பொழுதும் நம் வாழ்க்கையில் அவருடைய

தனிப்பட்ட உபதேசங்களை அறிந்து கொள்வது எத்தனை ஆச்சிரியமான காரியம் ?

## நீங்கள் செய்ய வேண்டியது

சரியான விடையின் முன் காணப்படும் எழுத்தை சுற்றி வட்டமிடவும்.

2. வேதாகமம் தெய்வீக ஏவுதல் என்கையில், அதை நாம் புரிந்து கொள்வது?

   a) அது தேவனை பற்றி கூறுவதாக.
   b) தேவன் தாமே அதை எழுதினவர்களுக்கு எதை எழுத வேண்டும் என உரைத்ததாக.
   c) அதனுள் விலையேறப் பெற்ற மத சம்பந்தமான சரித்திரம் அடங்கியுள்ளதாக

3. எழுத்தாளர்கள் அனைவரும் ஒரே விஷயத்தை எழுதின போதிலும் அவர்கள் எழுதினவைகள் ஒன்றோடொன்று முரண்படாததின் காரணம்

   a) தேவன் தாமே உண்மை ஆசிரியராயிருந்து தமது ஆலோசனைகளை எழுத்தாளருக்கு கொடுத்தார்.
   b) பின் தொடர்ந்து வருபவர்களுக்கென ஒவ்வொரு வரும் தங்கள் ஆலோசனைகளை வைத்து போயினர்.

4. தேவன் வேதாகமத்தை அளித்ததின் உண்மை காரணத்தின் முன் காணப்படும் எழுத்தை சுற்றி வட்டமிடவும்.

   a) நமது சிறந்த நன்மையை அவர் விரும்பினபடியால்
   b) சரியான வாழ்க்கை நடத்த தேவையான உபதேசங்களை நமக்கு தர விரும்பினபடியால்.
   c) அவர் நமது அறிவுக்கெட்டாதவர் எனநாம் அறிந்து கொள்ளும்படியாக.
   d) அவர் நம்மோடு ஐக்கியம் கொண்டு அவர் எப்படி பட்டவர் என்பதை சொல்ல விரும்பினபடியால்.

பாடம் 2

# தேவன்

நான் ஒரு சிறுவனுயிருக்கையில் என் தாய், எனக்கு புயல்காற்றை கண்டு சந்தோஷிப்பது எங்கனம் என கற்று தந்தாள். லாட்டின் அமெரிக்காவிலுள்ள எங்கள் வீட்டின் ஜனலினருகே அவள் தனது கரங்களை என் தோளில் போட்டு கொண்டிருந்தாள். அவ்வமயம் எங்கள் வாழை தோட்டங் களினூடாய் விரைந்து செல்லும் காற்றை நாங்கள் கவனிப் பதுண்டு. மழையோடு சேர்ந்து வரும் காற்றும் மின்னலும் மிக அழகாகவும், வியக்கதக்க முறையிலும் அன்று காணப் பட்டது. அன்று கேட்ட இடிமுழக்கமானது, அந்த மழையை புல் மற்றும் பூக்கள் எவ்வாறு அனுபவித்தன என சொல்லும் முறையில் காணப்பட்டது.

மக்கள் தாங்கள் எங்கனம் புயலை பற்றி கற்று கொடுக் கப்பட்டுள்ளனரோ அங்கனமே அவர்கள் ஒன்றில் புயலை கேட்டு பயமுறுவர் அல்லது சந்தோஷிப்பர். மேலும் அப் புயல் எப்படிப்பட்டது — பிரயோஜனமுள்ளதா அல்லது அழிக்க கூடியதா என்பதும் அறிவது முக்கியமாகும்.

நீங்கள் புயலை எவ்வாறு அறிந்து கொள்ள இயலும்? காற்று, மழை மற்றும் மின்னலின் உருவம் எப்படிப் பட்டது? நீங்கள் புயலை ஒரு குப்பிக்குள் (Bottle) அடைத்து வைக்க இயலுமா? ஒருகாலும் இயலாது. புயலின் பல பகுதிகளை குறித்து நாம் படிக்கும்போது அதனை குறித்து விளங்கிக் கொள்ள இயலும். உதாரணமாக : குளிர்ந்த காற்று உஷ்ண காற்றோடு இணைதல். அதன் பலாபலன்களை குறித்தும் நாம் படிக்கலாம் அது நிலத்திற்கு அல்லது சமுத்திரத்திற்கு என்ன விளைவிக்கிறது.

ஒரு விதத்தில் தேவனை புயலோடு ஒப்பிடலாம். சிலர் அவரை குறித்து பயப்படுவர். சிலர் அவரில் அன்பு கூருவர். இவ்விரண்டும் தாங்கள் அவரை குறித்து எங்கனம் கேள்வி பட்டுள்ளனரோ, அதை சார்ந்திருக்கும்.

நீங்கள் தேவனை காண இயலாது, ஆனால் அவரை குறித்து படிக்க இயலும். முதலாம் பாடத்தில் அவருடைய தன்மைகளை குறித்தும் அவர் மனுகுலத்தோடு எவ்வாறு இடைபடுகிறார் என்பதை பற்றி வேதாகமம் உரைப்பதாக நாம் படித்தோம். இப்பாடத்தில் நாம் வேதாகமத்தை இன்னும் ஆராய்ச்சி செய்து தேவனை குறித்த அநேக காரி யங்களில் சிலவற்றை கவனிப்போம்.

## இந்த பாடத்தில் நீங்கள் படிப்பவை

நம்மோடுள்ள தேவனுடைய உறவு

தேவனோடுள்ள நமது உறவு

இந்த பாடம் உங்களுக்கு செய்யும் உதவி

* தேவனுடைய பல இயல்புகளை பெயர் குறித்தல்:
* தேவனோடுள்ள உங்கள் மனப்பான்மை எவ்விதம் காணப் கிறது என்பதை விளக்குதல்.

## நம்மோடுள்ள தேவனுடைய உறவு

நோக்கம் 1. *தேவனுடைய ஐந்து இயல்புகளையாவது பெயர் குறித்தல்.*

வேதாகமத்தில், யோவான் 4:24-ல் தேவன் ஆவியா யிருக்கிறார் என குறிப்பிட்டிருப்பதை நாம் காண்கிறோம். ஜீவனை கொடுக்க இன்றியாமையாத காரியம் ஆவியே என நிகண்டில் (Dictionary) நாம் காணமுடியும்.

தேவன் சிருஷ்டிகராய் இருப்பதால் அவரே அனைத்து சிருஷ்டிக்கும் ஜீவனை கொடுப்பவர். அவர் ஆவியாயிருக்கிற படியால், நாம் அவரை காணமுடியாது அல்லது அவ்வாறு காண வேண்டுமாயின் அவர் தாமே நாம் காணகூடிய முறையில் எதாவது ஒரு தன்மையை ஏற்றுகொள்ள வேண்டும்

அவர் தமது குமாரன் மூலம் அவரை நமக்கு காண்பித்தார். யோவான் 1:14–ல் ''அந்த வார்த்தை மாம்சமாகி, கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந் தவராய், நமக்குள்ளே வாசம்பண்ணினார்; அவருடைய மகிமையை கண்டோம்; அது பிதாவுக்கு ஒரே பேறான வருடைய மகிமைக்கு ஏற்ற மகிமையாகவே இருந்தது.''

தேவன் தாமே பிதாவாகவும், குமாரனாகவும், பரிசுத்த ஆவியானவராகவும் தம்மை வெளிப்படுத்தினதை நாம் தேவத்துவம் அல்லது திரித்துவம் என அழைக்கிறோம். மூவரையும் வேதாகமத்தில் பல இடங்களில் குறிப்பிடப்பட்டி ருப்பதை காணமுடியும். அவைகளில் ஒன்று மத்தேயு 28:19. ''நீங்கள் உலகமெங்கும் புறப்பட்டு போய், சகல ஜாதிகளை யும் சீஷராக்கி, பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்தில் அவர்களுக்கு ஞானஸ்ஞானங் கொடுங்கள்',

தேவனை குறித்த அநேக காரியங்களை அறிந்து கொள்ள ஒரு நன்முறை யாதெனில், அவருடைய தன்மை களை குறித்தும் குணாதிசயங்களை குறித்தும் படிப்பதே ஆகும். தேவன் அவர் நல்லவர், பரிசுத்தர், நீதியுள்ளவர், எல்லா வல்லமையுமுடையவர், எல்லாவற்றையும் அறிந்தவர் மற்றும் நித்தியமானவர். இக்குணாதிசயங்கள் மற்றும் தன்மைகளை குறிப்பிடும் சில வசனங்களை கவனிப்போம்.

யாத்திராகமம் 34;6 சொல்லுவது, .... கர்த்தர், கர்த்தர், இரக்கமும், கிருபையும், நீடிய சாந்தமும், மகா தயையும் சத்தியமுள்ள தேவன்.''

லேவியராகமம் 11:44-ல். ''நான் உங்கள் தேவனுகிய கர்த்தர், நான் பரிசுத்தர் .... உங்களை பரிசுத்தமாக்கிக் கொண்டு, பரிசுத்தர்களாயிருப்பீர்களாக.''

அவர் எல்லா வல்லமையும் உடையவர் என்னும் உண்மையை தானியேல் 4:35ல்நாம்காணமுடியும். ''அவரை நோக்கி; என்ன செய்கிறீரென்று சொல்லத் தக்கவன் ஒருவனும் இல்லை''

அவர் எல்லாம் அறிகிருர்.

அவருடைய பார்வைக்கு மறைவான சிருஷ்டி ஒன்று மில்லை, சகலமும் அவருடைய கண்களுக்கு முன்பாக நிர்வாணமாயும் வெளியரங்கமாயுமிருக்கிறது. அவருக்கே நாம் கணக்கு ஒப்புவிக்க வேண்டும். (எபிரேயர் 4:13)

வெளிப்படுத்துதல்10:6,7ல்தேவன் நித்தியர் என உரைக்கிறது. ஒரு தூதன் ஆணையிட்டு சொன்னது; 'வானத்தையும் அதிலுள்ளவைகளையும், பூமியையும் அதிலுள்ளவைகளையும், சமுத்திரத்தையும் அதிலுள்ளவைகளையும், சிருஷ்டித்தவரும், சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிறவருமாகிய தேவன்.

நாம் வாசித்த இவ்வசனங்கள் தேவன் எவ்வளவு வல்லமையுடையவர், அல்லது எவ்வளவு பெரியவர் என்பதை நமக்கு விளக்கி காட்டுகிறது. அவர் வல்லமையுடையவராகவும், பெலனுடையவராகவும் காணப்பட்டபோதிலும் அவர் இரக்கமும், கிருபையுமுடையவராகவும் காணப்படுகிருர். அவருடைய சிருஷ்டிகளாகிய நம்மோடு நெருங்கிய தொடர்பு கொள்ள அவர் விரும்புகிருர்.

## நீங்கள் செய்ய வேண்டியது

1. வேதாகம வசனங்களை மனப்பாடம் செய்து கோடிட்ட இடங்களை நிரப்பவும்.

a. யாத்திராகமம் 34:6........ கர்த்தர், கர்த்தர் ...............

.................................................. உள்ள தேவன்.

2. கீழ்காணும் வனங்களில் தேவன் எப்படிப் பட்டவர் என குறிப்பிடப் பட்டுள்ளது.

a. லேவியராகமம் 11:44 .................. _ ...............
d. தானியேல் 4:35 ..................................
c. எபிரேயர் 4:13 ....___ .... .. ....................
b. வெளிப்படுத்துதல் 10:6,7 ..................................

## தேவனோடுள்ள நமது உறவு

நோக்கம் 2. தேவனுடுள்ள உனது முதல் கடமையை அறிந்து கொள்ளவும்.

மத்தேயு 22:37-ல் ''உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும் உன் முழு மனதோடும் அன்பு கூருவாயாக'' என இயேசு சொன்னார்.

நாம் தேவனில் அன்பு கூருகிறோம் என்பதை வெளிப் படுத்த பல முறைகள் உண்டு. நாம் அவரை தொழுது கொள்ளுவதிலும், ஆராதிப்பதிலும் நமது வார்த்தைகளின் மூலம் அவர் மேல் கொண்டுள்ள அன்பை வெளிப்படுத்தலாம். ஆயினும் நாம் அந்த அன்பை வார்த்தைகளின் மூலம் வெளிப்படுத்துவது மட்டுமின்றி அதனை நடைமுறை வாழ்க் கையிலும் செய்து காட்ட கடமை பட்டவர்களாயிருக் கின்றோம்.

உபாகமம் 10:12,13. இப்பொழுதும் ........... நீ உன் தேவனாகிய கர்த்தருக்கு பயந்து, அவர் வழிகளிலெல்லாம்

நடந்து, அவரிடத்தில் அன்பு கூர்ந்து, உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும் உன் தேவனாகிய கர்த்தரை சேவித்து இன்று நான் உனக்கு கற்பிக்கிற கர்த்தருடைய கற்பனைகளையும் அவருடைய கட்டளைகளையும் கைக்கொள்ளுவாயாக

தேவனிடத்தில் நாம் அன்பு கூருகிறோம் என காட்டும் வேறொரு முறை யாதெனில் கொடுப்பதின் மூலமாகவும், மற்றவர்களோடு பகிர்ந்து கொள்வதின் மூலமும் ஆகும். I யோவான் 3:17-18-ல்,

''ஒருவன் இவ்வுலக ஆஸ்தி உடையவனாயிருந்து, தன் சகோதரனுக்குக் குறைச்சலுண்டென்று கண்டு, தன் இருதயத்தை அவனுக்கு அடைத்துக் கொண்டால், அவனுக்குள் தேவ அன்பு நிலை கொள்ளுகிறதெப்படி? என்பிள்ளைகளே, வசனத்தினாலும், நாவினாலுமல்ல, கிரியையினாலும் உண்மையினாலும் அன்பு கூரக்கடவோம்,,

கீழ்படிதலும், பகிர்ந்து கொள்ளும் தன்மையுமுடையதான அன்பு திருப்தியையும் பலனையும் உடையதாகும். இயேசுவானவர், லூக்கா 10:28–ல் இவ்வாறு கூறுகிறார்; எல்லாவற்றிற்கும் மேலாக நாம் தேவனில் அன்பு கூருவோமெனில் நாம் 'பிழைப்போம்' என்கிறார். சிலர் செல்வம், வலிமை, ஸ்தானம் இவைகளை பெற்றிருப்பதையே 'உண்மை வாழ்க்கை, என எண்ணுகின்றனர்.

நாம் தேவ சாயலிலும் அவருடைய மகிமையிலும் உண்டாக்கப்பட்ட படியால் அவைகள் நமக்கு திருப்தி அளிக்க இயலாது. நமது ஆவி, ஆவிக்குரிய காரியங்களாலே திருப்தியளிக்கப்பட வேண்டும்.

உண்மை வாழ்க்கை என்றால் தேவனில் அன்பு கூரு

வதாகும், இயேசு சொன்னார் ''முதலாவது தேவனுடைய இராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூடகொடுக்கப்படும் (மத்தேயு 6:33)

முக்கியத்துவம் அல்லாத காரியங்களுக்கு நீங்கள் உங்களையே கட்டுப்படுத்தலாகாது. உன் முழு இருதத்தோடும் தேவனில் அன்பு கூறுவாயாக.

**நீங்கள் செய்ய வேண்டியது**

3. சரியாய் இணையும் சொற்றொடரை இணைத்து எழுதவும்

எல்லாவற்றிற்கும் மேலாக நாம்

a) வலிமையை நேசிக்க வேண்டும். ஏனெனில் அதுவே நமது வாழ்க்கை நாம் கட்டுபடுத்த உதவி செய்யும்.

b) தேவனில் அன்பு கூர்ந்து, அவரது உபதேசங்களை நடைமுறை வாழ்க்கையில் கடை பிடிக்க வேண்டும்.

4. தேவனோடுள்ள நமது கடமை என்ன?

பாடம் 3.

# மனிதன்


ஒரு சிறு பையனுடைய உருவத்தை வெட்டியெடுத்த சிற்பியை குறித்த ஓர் சிறுபிள்ளைகளின் கதை உண்டு, அந்த வெட்டியெடுத்த உருவமானது மிக அழகாக இருந்த படியால் அந்த சிற்பி அதனை ஓர் பேர் சொல்லி அழைத்தான். தனது பணியை குறித்து அவன் மிகவும் பெருமையுடையவனாய் காணபட்டபோதிலும் அந்த உருவமானது எவ்விதத்திலும் அவனை நேசிக்க இயலவில்லை.

ஒருவேளை அவன் ஓர் பேசும் இயந்திரத்தை அதனுள் வைத்திருப்பானென்றால் அதுஎன்ன செய்திருக்கும்? அவன் அந்த உருவத்தை அல்லது சிற்பத்தை இயங்க செய்து ''நான் உன்னை நேசிக்கிறேன் என கூறும்படி செய்வான் '' அது அவனுக்கு திருப்தி அளிக்க இயலுமா? அல்லது ''இப்பொழுது என் சிற்பம் என்னை நேசிக்கிறது என்பதை நான் அறிகிறேன் என சொல்லுவானா? ஒரு காலும் இல்லை. ஏனெனில் அன்பை வெளிப்படுத்தும் முறை அது அல்ல· உண்மை உணர்வில்லாத ஓர் இயந்திர முறையே அது ஆகும்.

எங்கனமோ அந்த பையன் உயிர் பெற்றான் என கதை சொல்லுகிறது. 'நான் உன்னை நேசிக்கிறேன் என சொல்லும் இயல்பை அடைந்ததை கண்ட அந்த சிற்பியின் மெய்சிலிர்த்தது. ஏன்? காரணம் அந்த மரசிற்பம் மற்றவர்களால் கட்டாய படுத்தப்படாமல் பேசினதே ஆகும் அவன் உண்மை அன்போடு பேசினான்.

இது ஒரு கட்டு கதையே ஆயினும், தேவன் மனிதனை உண்டாக்கினபோது அவர் எந்த அனுபவத்தை அடைந்தார் என்பதை இக்கதை படம் பிடித்து காட்டுகிறது. அவர் அவனை அழகாகவும், எல்லாவற்றையும் விட முக்கியமானதாகவும் தனக்கு தானே சுய தீர்மானத்தை எடுக்க கூடிய இயல்புடையவனாகவும் உண்டாக்கினார்.

தேவன் மனிதனை ஒரு மரத்திலிருந்து வெட்டி எடுக்காமல் தாமாகவே உண்டாக்கினார். அவனை எவ்வாறு உண்டாக்கினார்? எவ்வித குணாதிசயங்களை அவர் மனிதனுக்கு கொடுத்தார். கடந்த பாடத்தில் தேவனுக்குரிய சில இயல்புகளையும், அவர் மனுஷனோடு கொண்டுள்ள உறவையும் குறித்து நாம் படித்தோம். இப்பொழுது தேவன் மனிதனை எவ்வாறு உண்டாக்கினார் என்றும் எந்தெந்த பொறுப்புகளை அவனுக்கு அளித்துள்ளார் என்றும் நாம் பார்ப்போம்.



## இப்பாடத்தில் நீங்கள் படிப்பது.

சிருஷ்டிப்பில் மனிதனின் நிலை

இன்றைக்கு மனிதனின் நிலை

இந்த பாடம் உங்களுக்கு செய்யும் உதவி

தேவன் மனிதனை எங்கனம், எதற்காக உண்டாக்கினார்? என அறிந்து கொள்ளுதல்.

மனிதனுடைய பாவம் நிறைந்த நிலையின் காரணத்தை விளங்கி கொள்ளுதல்.

## சிருஷ்டிப்பில் மனிதனின் நிலைமை

**நோக்கம் 1.** *மனிதன் எவ்வாறு உண்டாக்கப்பட்டான் என்றும் உண்டாக்கப்பட்டதின் ஒரு காரணத்தை விளக்குதல்.*

தேவன் மிக அழகாய் காணப்படும் மரங்கள், பூக்கள் மற்றும் மிருகங்கள் அடங்கிய ஒரு உலகை படைத்தார். அவர் சிருஷ்டித்தவைகளை கண்டு அவரே களிகூர்ந்தார் என்று வேதம் சொல்லுகிறது. அந்த அழகை அனுபவிக்கவோ பகிர்ந்து கொள்ளவோ அவ்விடத்தில் யாரும் காணப்படவில்லை.

ஆதியாகமம் 1:26-27ல் நாம் இவ்வாறு வாசிக்கிறோம்.

பின்பு தேவன்: நமது சாயலாகவும் நமது ரூபத்தின்படியேயும் மனுஷனை உண்டாக்குவோமாக; அவர்கள் சமுத்திரத்தின் மச்சங்களையும், ஆகாயத்து பறவைகளையும், மிருகஜீவன்களையும், பூமியனைத்தையும், பூமியின்மேல் ஊரும் சகலப் பிராணிகளையும் ஆளக் கடவர்கள் என்றார், தேவன் தமது சாயலாக மனுஷனைச் சிருஷ்டித்தார்.

மனுஷன் படைக்கப்பட்ட மிருகங்களைவிட மாறுப்பட்டவனாய் காணப்பட்டான். ஏனெனில் அவன் தேவசாயலில் படைக்கப்பட்டான், அவன் தனது ஆவி, ஆத்தும, சரீரத்தில் மகிமையுள்ள சிருஷ்டியாய் காணப்பட்டான், ஆதியாகமம் 2-ம் அதிகாரத்தில் தேவன் எங்கனம் மனிதனை மண்ணிலிருந்து உண்டாக்கினார் என்று காண்கிறோம் தேவன் தமது ஜீவ சுவாசத்தை அவனது நாசியிலே ஊதினார், உடனே அவன் பிழைக்க தொடங்கினான்.

ஜீவனோடு கூட பொறுப்பும் வந்தது, மனிதன் தானாகவே தீர்மானங்களை எடுக்க கூடியவனானான், ஏசாயா 43:7-ல் ''நான் என் மகிமைக்கென்று சிருஷ்டித்து உருவாக்கிப் படைத்த என் நாமந்தரிக்கப்பட்ட என் ஜனங்கள் என்கிறார்.''

பகலில் குளிர்ச்சியான வெளைகளில் தேவன் தாம் படைத்த மனிதனோடு பேசும்படியாக தோட்டத்தில் இறங்கி வந்தார் என்று வேதம் சொல்லுகிறது. தாம் முதல் படைத்த ஆதாமையும், ஏவாளையும் அவர் நேசித்து அவர்களோடுள்ள பரிபூரண உறவு கடைசி மட்டும் நீடிக்க அவர் விரும்பினார். ஆனால் இந்த உறவை கட்டாயப்படுத்தினால் அது பூரணமாகாது என்பதால், தங்களாகவே தீர்மானமெடுக்க கூடிய விதத்தில் அவர்களை தேவன் படைத்திருந்தார்.

தேவனுக்கு தாமாகவே தெரிந்து கொள்ளகூடிய தன்மை இருப்பதை போலவே அவர் மனிதனையும் படைத்தார். அந்த இணைபிரியா அருமையான உறவை நீடிக்க செய்யவும், செய்யகூடாததுமான தீர்மானத்தை எடுக்ககூடிய சுதந்திரத்தை மனிதனுக்கு கொடுத்தார். ஒருவேளை ஆதாம் ஏவாளுக்கு அவ்வுறவை நீடிக்க செய்யகூடிய எண்ணமிருந்த போதிலும் அதோடு வேறுசில காரியங்களை கூட விரும்பினர். ஒரு நாள் எல்லாவற்றிற்கும் மேலாக தங்களுக்கு என்ன வேண்டுமென்பதை தெரிந்தெடுக்க கூடிய கட்டம் வந்தது.

## நீங்கள் செய்ய வேண்டியது

1. சரியான சொற்றொடரை குறிப்பிடும் எண்ணை சுற்றி வட்டமிடவும்.

   a. தேவன் தமது மகிமைக்காகவே மனிதனை படைத்தார்.

   b. தேவன் ஒன்றுமில்லாமையிலிருந்து மனிதனை படைத்தார்.

   c. தேவனுடைய ஜீவசுவாசம் மனிதனை உயிருள்ளவனாய் மாற்றிற்று.

   d. மனிதன் ஆவி, ஆத்தும, சரீரத்தில் பரிபூரணமுடையவனாய் படைக்கப் பட்டான்.

   e. சுயமாகவே தெரிந்து கொள்ள கூடிய தன்மையுடையவனாய் மனிதன் படைக்கப்பட்டான்.

2. ஆதியாகமம் 1:26-27-ஐ மனப்பாடம் செய்யவும்.

3. மனிதன் உண்டாக்கப்பட்டது :

   a. கொடுமை படுத்தப்படவும், கடினமாய் உழைக்கவும்

   b. வற்புறுத்தி தேவனை சேவிக்க.

   c. தேவ மகிமைக்காக.

## இன்றைக்கு மனிதனின் நிலை

நோக்கம் 2. *மனிதன் விழுந்ததினால் உண்டான மனித நிலை.*

தமது சிருஷ்டியோடு கூட கொண்ட உறவை நினைத்து

தேவன் எங்கனம் மகிழ்ந்திருப்பார். ஆயினும் ஆதாமும் ஏவாளும் அச்சிறந்த உறவை முறித்து கொள்ள விரும்பினர்.

அங்கனமே மனிதன் தனது பூரண தன்மையிலிருந்து விழுந்தான், தான் தீமையை தெரிந்தெடுத்து பாவியானான். ரோமர் 5:19-ல் "அன்றியும் ஒரே மனுஷனுடைய கீழ்ப் படியாமையினாலே அநேகர் பாவிகளாக்கப்பட்டனர் என நாம் வாசிக்கிறோம்."

தேவ நீதி பாவத்தை அங்கனமே கவனியாமல் இருக்க முடியவில்லை. தேவன் பொய்புரைத்து தமது வார்த்தைக்கு மாறாக செல்ல இயலாது. கீழ்ப்படியாமை மனிதனுக்கு அழிவை கொண்டு வரும் என அவர் உரைத்திருந்தார். தங்களுடைய கீழ்படியாமையின் மூலம் ஆதாமும் ஏவாளும் பரதீசாகிய ஏதேன் தோட்டத்தை விட்டு வெளியேறி தேவ சமூகத்தை இழக்க வேண்டியதாயிற்று.

இன்றைக்கும் மனிதன் இதே பாவத்தன்மையுடையவனாயிருக்கிறான். ரோமர் 3:23-ல் "எல்லாரும் பாவஞ் செய்து தேவ மகிமையற்றவர்களானார்கள்" என நாம் வாசிக்கிறோம். ஆனால் மனிதன் தெரிந்தெடுக்கக் கூடிய தன்மையை இன்னும் இழக்கவில்லை. தீய தெரிந்தெடுத்தல் இன்றும் மனிதனை தேவனை விட்டு பிரிக்கிறது.

**நீங்கள் செய்ய வேண்டியது**

4. சரியான சொற்றொடருக்கு முன் காணப்படும் எழுத்தை சுற்றி வட்டமிடவும். ஒரே மனுஷனுடைய கீழ்படியமையினாலே அநேகர் :

   a. நீதிமான்களாக்கப்பட்டனர்.

   b. பாவிகளாக்கப்பட்டனர்.

   c. மன்னிக்கப்பட்டனர்.

5. மனிதனுடைய இன்றைய நிலை

a. தேவனிடமிருந்து பிரிந்திருத்தல்.

b. பாவ தன்மையுடையவனுயிருத்தல்

c. தனது பாவத்தை குறித்து கவனமற்றிருத்தல்.

## பாடம் 4.

# பாவம்

அழகு மிகுந்த பொருட்களால் நிறைந்த ஓர் அரண்மனையை உங்கள் நண்பர் ஒருவர் உங்களுக்கு கொடுத்தார் என வைத்து கொள்ளுவோம். நீங்கள் அதை அனுபவிக்க அது இப்பொழுது உங்களுக்குரியதாயிருக்கிறது. ஆனால் அவனுடைய ஒரே ஒரு விண்ணப்பம் யாதெனில், "தயவு செய்து அவ்வரண்மனையின் மேலிருந்து குதிக்காதீர்கள். ஏனெனில் நீங்கள் மரித்து போவீர்கள்" என்பதாகும்.

பிறகு ஒரு எதிரி உங்கள் அரண்மனைக்கு வருகிறான். அவன் வந்து, நீங்கள் குதிக்ககூடாது என்று யார் உங்களுக்கு சொன்னது? குதியுங்கள் பரவாயில்லை. நீங்கள் அபூர்வ அனுபவமடைவீர்கள்! காற்றில் பறப்பதென்றால் என்ன என்று அறிந்து கொள்வீர்கள். உங்கள் அரண்மனை வேறொரு ரீதியில் காண்பீர்கள். கீழே என்ன சம்பவிக்கும் என்பதை குறித்து கவலை வேண்டாம். செல்லும் வழியில் என்னென்ன புதிய காரியங்களை கற்று கொள்வீர்கள் என்பதை பற்றி மட்டுமே சிந்தியுங்கள்" என்று சொல்லுவானாகில் நீங்கள் அரண்மனையின் மேல் ஓடிச் சென்று கீழே குதிப்பீர்களா? ஒருகாலும் இல்லை. உனது எதிரியை நம்பி அவன் சொற்படி செய்வது முட்டாள் தனமாகும்.

இதை போன்ற அனுபவத்தையே ஆதாமும் ஏவாளும் நேரிட்டனர். தேவன் அவர்களை ஒரு அழகிய பூங்காவில் தங்க செய்து அங்கு காணபட்ட யாவற்றின் மீதும் அவர்களை அதிபதிகளாக்கி வைத்தார். ஒரு மரத்தை தவிர மற்ற எல்லா மரத்தின் கனிகளையும் புசிக்க அனுமதித்தார். அதே

நேரத்தில் எதிரியாகிய சாத்தான் வந்து விலக்கப்பட்ட மரத்தின் கனியையும் புசிக்க சொன்னான் - அது உங்களை ஒன்றும் செய்யாது. அவர்கள் தேவனுக்கு கீழ்படிவதை பார்க்கிலும் அவனுக்கு செவி கொடுத்தனர். எத்தனை முட்டாள்த்தனம் !

கடந்த பாடத்தில் மனிதன் பூரணனாய் உண்டாக்கபட்டான் என்றும் கீழ்படியாமையின் மூலம் பாவம் அவனது வாழ்க்கையில் பிரவேசித்தது என்றும் பார்த்தோம். பாவத்தை எவ்வாறு விவரிக்க முடியும்? ஆதாமோ பாவத்தை உலகிற்கு கொண்டு வந்தது? பாவத்திற்குரிய தண்டனை என்ன? தப்பித்து கொள்ள வழி ஏதேனும் உண்டோ? இப்பாடத்தில் காணப்படும் வேத வசனங்கள் இக்கேள்விகளுக்குரிய விடையளிக்கும்

## இந்த பாடத்தில் நீங்கள் படிப்பவை ...

பாவத்தை விவரித்தல்
பாவத்தின் உற்பத்தி ஸ்தானம்.
பாவத்திலிருந்து தப்ப வழி காணுதல்.

## இந்த பாடம் உங்களுக்கு செய்யும் உதவி

* பாவத்தின் இயல்பும் அதனால் உண்டாகும் விளைவுகளையும் விவரித்தல்.
* மனிதனுடைய பாவத்தை போக்க தேவன் செய்தவற்றிற்காக அவரை புகழுதல்

## பாவத்தை விவரித்தல்

நோக்கம் 1 விவரிககப்பட்ட பாவத்தை பகுத்தறிதல்.

பாவம் என்றால் தேவகட்டளையை மீறுவதாகும். அது தேவனை நோக்கி "நான் உம்மை விட பெரியவன் என்றும் உமது வசனம் அதிகார பூர்வமுடையது அல்ல என சொல்லுவதுமாகும்."

''என்னை தடுக்க ஒருவருக்கும் அதிகாரமில்லை'' ''நான் என் சுய விருப்பத்தின்படி செய்வேன்'' என நீங்கள் சொல்லலாம். தேவன் சில தடைகளை வைத்திருப்பதின் காரணம் என்னவெனில்—நமது நேர்த்தியான நன்மைக்காகவே. உதாரணமாக கசப்பும், பகைமையும் பயங்கரமான தலைவலியை உண்டாக்குகிறது என தேவன் அறிவார். பழிவாங்கும் இயல்பு அல்சர் (Ulcer) என்னும் வியாதியை உண்டாக்கும். இவ்வியல்புகள் மற்றவர்களுக்கும் தீங்கு செய்யும். தேவன் நமது பாதுகாப்பிற்காக சில தடைகள், சட்டங்களை வைத்து தமது அன்பை வெளிப்படுத்தினார். அந்த தடைகளுக்கு மாருக நாம் செல்லுவது பாவமாகும். I யோவான் 3:4-ல் ''பாவஞ் செய்கிற எவனும் நியாயப்பிரமாணத்தை மீறுகிருன்; நியாயப்பிரமாணத்தை மீறுகிறதே பாவம்.''

என்னையோ, மற்றவர்களையோ பாதிக்காத எதையும் நான் செய்வது சரியாகுமா? இல்லை. எவையாகிலும், தேவன் வைத்த பரிதிக்குள்ளாய் காணப்படுபவைகளே நியாயமானதாகும். மற்றவர்களையோ நம்மையோ பாதிக்காமல் இருப்பதை நாம் நியாயமானதாக அங்கீகரிக்கும் தவறு நமக்கு ஏற்படலாம். உதாரணமாக: பிள்ளைகளை கீழ்படியச் செய்வது பெற்றோர்களுக்கு தேவ கற்பனையாயினும் சில பெற்றோர்கள் அதனை ஏற்க மறுக்கின்றனர். ஏனெனில் அது அவர்களை ஏமாற்ற அல்லது குழப்ப செய்யுமென்பதால். சமீபத்தில் ஓர் பத்திரிக்கையில்: ''நமது பிள்ளைகளை அடக்க கூடிய நேரம் இதுவே'' என காண நேர்ந்தது. மனத அபிப்பிராயங்கள் மாறிக் கொண்டேயிருக்கும். தற்போது தங்களை பாதிக்காது என்று சொல்லும் சில காரியங்கள் பிறகு தங்களை பாதிக்கும் என்பான். எல்லாவற்றிலும் நேர்த்தியான அல்லது பாதுகாப்பான நிலை யாதெனில், தேவன்

அமைத்துள்ள கட்டளைகளை அவ்வாறே ஏற்று கொள்ளுவதாகும்.

## நீங்கள் செய்ய வேண்டியது

1. பாவம் என்பது

   a) தவறு என நீங்கள் எண்ணுவதெல்லாம்.

   b) தவறு என மற்றவர் உங்களிடத்தில் சொல்லுதெல்லாம்.

   c) நீங்கள் செய்யும் சில காரியங்கள் தவறு என காண்பது.

   d) தேவ கட்டளையை மறுப்பதும், கீழ்படியா தன்மையும் ஆகும்.

2. மனித செயலுக்கு தேவன் சில எல்லைகளை நியமித்தார். ஏனெனில்.

   a) ஆதாமையும், ஏவாளையும் குழப்பும்படியாக.

   b) மனிதன் சந்தோஷமாகவோ அல்லது விடுதலையுடன், இருக்க கூடாது என்பதற்காக

   c) மனிதனை நேசிப்பதாலும் அவனுடைய நேர்த்தியான காரியங்களை விரும்புவதாலும்.

3. தேவன் அமைத்த எல்லைகளை சில நேரங்களில் கடந்து செல்லலாம், எப்பெடியெனில்.

   a. அது மற்றவர்களை பாதிக்காமலிருக்கையில்.

b. நாம் கண்டு பிடிக்கபடும்வரை அதை தொடர்ந்து செய்யலாம்.

c. சில இக்கட்டான சூழ்நிலைகளிலிருந்து விடுபடும் படியாக

d. ஒரு போதும் செய்யலாகாது.

## பாவத்தின் உற்பத்தி ஸ்தானம்

நோக்கம் 2. *பாவம் உலகத்தில் எங்கனம் பிரவேசித்தது என்னும் சொற்றொடர்களை கண்டுபிடித்தல்.*

சாத்தான் பாவம் செய்யும் படியாக மனிதனை சோதிக்க, மனிதன் அச்சோதனையில் விழுந்து போனான். I யோவான் 3:8-ல் ''பாவஞ்செய்கிறவன் பிசாசினால் உண்டாயிருக்கிறான்; ஏனெனில் பிசாசானவன் ஆதிமுதல் பாவஞ்செய்கிறான்.'' பாவத்தை முதலாவது உலகிற்கு கொண்டு வந்தவன் பிசாசு. ஆனால் இது மனிதனை குற்றஞ்சாட்டபடுவதிலிருந்து விடுதலையாக்காது, மனிதனும் அதற்கு காரணமாயிருக்கிறான்.

சாத்தானிடமிருந்து உண்டான சோதனைக்கு ஆதாம் தன்னை தானே ஒப்பு கொடுக்க வேண்டியிருக்கவில்லை. சோதனைகள் தேவனிடத்திலிருந்து வருவதில்லை என்பதை நாம் அறிவோம். யாக்கோபு 1:13–14 ல் :

''சோதிக்கப் படுகிற எவனும், நான் தேவனால் சோதிக்கப் படுகிறேன் என்று சொல்லாதிருப்பானாக; தேவன் பொல்லாங்கினால் சோதிக்கப்படுகிறவரல்ல, ஒருவனையும் அவர் சோதிக்கிறவருமல்ல.''

சோதிக்கப்படுதல் பாவமல்ல, இயேசுவும் பிசாசினால் சோதிக்கப்பட்டார். ஆனால் சோதனைக்கென்று ஒப்பு கொடுப்பது பாவமாகும். ஆதாமும் ஏவாளும் தங்களை தாங்களே சோதனைக்கென்று ஒப்பு கொடாமலிருந்திருப்பார் களெனில் இன்றைய உலகம் எத்தனை மகிழ்ச்சிகரமாய் காணப்பட்டிருக்கும்.

மனிதன் பாவம் செய்கையில் அவனுக்கு என்ன நேர்ந்தது? கீழ்படியாமற்போனால் மரணமடைவாய் என்பதை தேவன் அவனிடம் சொல்லியிருந்தார். நாம் அறிந்தவண்ணம் அவன் உடனே மாம்சத்திற்குரிய மரணமடையவில்லையெனினும் அவன் மரணத்திற்கு அடிமையானான். தனது ஆவி, ஆத்தும சரீரத்தில் மரணம் கிரியை செய்ய ஆரம்பித்தது.

ஒரே மனுஷனாலே பாவமும் பாவத்தினாலே மரணமும் உலகத்திலே பிரவேசித்தது போலவும், எல்லா மனுஷரும் பாவஞ்செய்தபடியால் மரணம் எல்லாருக்கும் வந்தது போலவும் இதுவுமாயிற்று. (ரோமர் 5:12)

ஆம், எல்லாரும் பாவிகள். "எல்லாரும் பாவஞ்செய்து தேவ மகிமையற்றவர்களானோம்" (ரோமர் 3:23)

ஆதாம் ஏவாளுக்கு அளிக்கப்பட்ட அதே தண்டனை தான் இன்றும் பாவத்தின் தண்டனையால்காணப்படுகிறது–மரணம். ரோமர் 5:12 இவ்வாறு கூறுகிறது "மனுகுலமனைத்தின் மேலும் மரணம் பரவியுள்ளது."ரோமர்6:23ல்நாம்வாசிப்பது; "பாவத்தின் சம்பளம்—மரணம்." பாவம் செய்த உடனே பாவி மாம்சப்பிரகாரமாய் மரிப்பதில்லை. சில நேரங்களில் அவன் விருத்தியடைவதை போலவும் காணப்படலாம். ஆனால் பாவம் தனக்குள் கிரியை செய்து நாளடைவில் அவன் மாம்சபிரகாரமாய் மாத்திரமல்ல, ஆவிக்குரிய பிரகாரமாகவும் மரணமடைவான், ஆவிக்குரிய மரணமென்றால் தேவனை விட்டு நித்திய வேறுபாடு ஆகும்.

## நீங்கள் செய்ய வேண்டியது

சரியான பதிலே கண்டு பிடித்து அதற்கு முன் காணப்படும் எழுத்தை சுற்றி வட்டமிடவும்.

4. உலகத்தில் பாவம் பிரவேசித்தது

a. ஆதிமுதல் பாவம் செய்த சாத்தானுல்.

b. பிசாசின் சோதனேக்கு ஆதாம் தன்னேயே ஒப்பு கொடுத்த படியால்.

c. வேண்டுமென்றே ஆதாம் தேவனே கீழ்படியா மையால்.

5 பாவம் உலகத்தில் பிரவேசித்தபடியால்

a. இனி சாத்தான் ஒருவரையும் சோதிக்க வேண்டு வதில்லே.

b. எல்லாரும் பாவிகளான படியால் சோதிக்கப்படுவர்.

c. மாம்சத்திற்குரிய மற்றும் ஆவிக்குரிய மரணமுண் டாயிற்று

## பாவத்திலிருந்து தப்ப வழிகாணுதல்

நோக்கம் 3. எங்கனம் ஒரு பாவி பாவதண்டனேயிலிருந்து தப்பித்து கொள்ள கூடும் என்பதை விளக்குதல்.

இப்பாடத்தின் முதலில் நான் உங்களுக்கு சொன்ன கதை உங்கள் ஞாபகத்திலிருக்கின்றதா? ஓர் அரண்மனே உச்சியிலிருந்து தாவும் எவனும் மரிப்பான். ஆனல் அவனது நண்பன் ஒருவன் ஓர் பலமுள்ள வலேயை விரிப்பானெனில் குதிப்பவன் அவ்வலேக்குள் அகப்பட்டு உயிர் மீட்சி பெறுவான்.

அங்கனமே ஆவிக்குரிய மரணத்திலிருந்தும் நித்திய வேறு பாட்டிலிருந்தும் தப்பித்து கொள்ள தேவன் நமக்கு ஓர் வழியை வகுத்துள்ளார். அவ்வழி இயேசுவைதன் சொந்த இரட்சகராய் ஏற்று கொள்ளுவதின் மூலமாகும் முன் வரும் பாடங்களில் இதனை குறித்து இன்னும் அதிகமாய் படிப்பீர் கள். தற்சமயம் தண்டனையிலிருந்து விடுதலை பெறுவது எங்கனம் என்பதை குறித்த இரண்டு வசனங்களை மனப் பாடம் செய்வது நன்மையாகும்.

தேவன் தாம் எவ்வளவாய் நம்மை நேசிக்கிறார் என்பதை காட்டியுள்ளார்—அதுவே நாம் பாவிகளாயிருக் கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்க பண்ணுகிறார் (ரோமர் 5:8)

நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார். (I யோவான் 1:9)

## நீங்கள் செய்ய வேண்டியது

6. நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்த தின் மூலம் எதை வெளிப்படுத்தினார். ............ ........
............................................................................................

7. இச்சொற்றொடரை பூர்த்தி செய்யவும்.

ஒரு பாவி தனது தண்டனையிலிருந்து மீட்கபடக் கூடிய ஒரே வழி ............................................................................

............................................................................................

பாடம் 5.

# இயேசு கிறிஸ்து


என் நண்பன் ஒருவன் ''ஆம் உண்மையாகவே இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கிறேன்.'' அவர் ஓர் பெரிய தீர்க்க தரிசி, நாம் பின் பற்றகூடிய அநேக உபதேசங்களை தேவ னிடத்திலிருந்து பெற்று வந்தவர்'' என்ருன்.

மிகவும் அருமையானது என நான் பதில் உரைத்தேன். ஆனல் அது மட்டும் போதாது. அவர் ஒரு பெரிய தீர்க்க தரிசி என மட்டும் விசுவாசித்தால் போதாது, மாருக அவரே தேவன். அவர் தேவனும் இரட்சகருமாய் காணப்படுகிருர்.''

இதை அங்கீகரிக்க அவனுக்கு சற்று கடினமாய் தோன் றிற்று. அவன் இயேசுவை குறித்த சில காரியங்களை கற்றிருந்தானேயன்றி அவருடைய வசனத்தை வாசிப்ப தாலோ அல்லது அவரை நோக்கி ஜெபிப்பதின் மூலமாகவே அவருடன் தொடர்பு கொள்ளவில்லை, எல்லா மனிதரும் பாவிகள் எனவும் பாவத்திலிருந்து மீட்கபட கூடிய வழி உண்டு எனவும் ஏற்று கொள்ள அவனுக்கு சற்று கடினமாய் தோன்றிற்று.

அன்று அவன் என்னிடம் அநேக கேள்விகளை கேட்டான். இயேசுயார்? அவர் எங்கனம் ஒரே நேரத்தில் மனிதனுகவும் தேவனுகவும் காணமுடியும்? அவர் மரித்தார் என்ருல் ஏன் இன்றைக்கும் அவர் ஜீவிக்கிருர் என கிறஸ்தவர்கள் உரைக்கின்றனர்? அவர் இப்போது என்ன செய்து கொண் டிருக்கிருர்?

இக்கேள்விகள் அனைத்திற்கும் நேர்த்தியான பதில் தேவ வசனமாகிய வேதாகமத்தில் காணப்பட்டது. இப் பாடத்தில் என் நண்பர் கேட்ட அதே கேள்விகளுக்கு விடை களையும் நாம் படிப்போம்.




## இந்த பாடத்தில் நீங்கள் படிப்பவை

அவருடைய ஆள்த்தத்துவம்.
அவருடைய நோக்கம்.
அவருடைய வருகை.

## இந்த பாடம் உங்களுக்கு செய்யும் உதவி.

* இயேசு யார் என்பதை விளக்குதல்.
* அவரது முதலாம் இரண்டாம் வருகையின் நோக்கத்தை விளங்கி கொள்ளுதல்.

### அவருடைய ஆள்த்தத்துவம்

நோக்கம் 1. *இயேசுவை குறித்த வேதாகம குறிப்புகளை ஏற்றுகொள்ளுதல்*

இயேசு கிறிஸ்துவே மனிதனுக்கு தேவ வெளிப்படுத்தலாய் காணப்படுகிறார். நாம் அவரை சரியான முறையில் அறிந்து கொள்ளவும் நம்மை இரட்சிக்க அவர் கொண்டுள்ள திட்டத்தை கற்று கொள்ளவும் அவர் ஒரு மனத ரூபம்

ஏற்று கொண்டார். இதில் அவருடைய இரு தன்மைகளும் அடங்கியிருந்தது—மனுஷீகம், தெய்வீகம். ரோமர் 1:4-5—ல்.

கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை குறித்து-மாம்சத்தின் படி தாவீதின் சந்ததியில் பிறந்தவரும், பரிசுத்தமுள்ள ஆவியின் படி தேவனுடைய சுதனென்று மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்ததினாலே பலமாய் ரூபிக்கப்பட்ட தேவகுமாரனுமாயிருக்கிறார்.

மனுஷீக குணமுடையவராயிருக்க, கன்னிகையாகிய மரியாளிடத்தில் அவர் பிறக்க வேண்டியிருந்தது.

தேவதூதன் அவளை நோக்கி; "மரியாளே, பயப்படாதே; நீ தேவனிடத்தில் கிருபைப் பெற்றாய். இதோ நீ கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாய், அவருக்கு இயேசு என்று பெயரிடுவாயாக. அவர் பெரியவராயிருப்பார், உன்னதமானவருடைய குமாரன் என்னப்படுவார்; கர்த்தராகிய தேவன் அவருடைய பிதாவாகிய தாவீதின் சிங்காசனத்தை அவருக்குக் கொடுப்பார். அவர் யாக்கோபின் குடும்பத்தாரை என்றென்றைக்கும் அரசாளுவார்; அவருடைய ராஜ்யத்துக்கு முடிவிராது என்றான்.

(லூக்கா 1:30-33)

அந்த வார்த்தை மாம்சமாகி, கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய், நமக்குள்ளே வாசம் பண்ணினார்; அவருடைய மகிமையை கண்டோம்; அது பிதாவுக்கு ஒரே பேறானவருடைய மகிமைக்கு ஏற்ற மகிமையாகவே இருந்தது. (யோவான் 1:14)

யோவான் 1:14-ல் குறிப்பட்டிருக்கும் பிதா என்பவர் யார்? தேவன் இயேசுவுக்கு பிதாவாய் காணப்படுகிறார். இரண்டு பேதுரு 1:17-ல்,

''இவர் என்னுடைய நேசகுமாரன், இவரிடத்தில் பிரியமாயிருக்கிறேன் என்று சொல்லுகிற சத்தம் உன்னத மான மகிமையிலிருந்து அவருக்கு உண்டாகி, பிதாவாகிய தேவனால் அவர் கனத்தையும் மகிமையையும் பெற்றார்.''

''இயேசு கிறிஸ்து'' என்னும் நாமமும் அவருடைய தெய்வீகத்தை வெளிப்படுத்துகிறது.

தேவதூதன் பிள்ளையின் பெயர் இயேசு என அழைக்கப் படும் என்று சொன்னபோது அது ஓர் விசேஷ காரணத்தை கொண்டதாயிருந்தது. இயேசு என்றால் இரட்சகர் என பொருள். மத்தேயு 1:21-ல் அவள் ஒரு குமாரனை பெறு வாள், அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாக; ஏனெனில் அவர் தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார் என்றான்.

கிறிஸ்து என்னும் பதமும் விசேஷ பொருளையுடைய தாயிருக்கிறது, அதன் பொருள் ''அபிஷேகம் பண்ணப் பட்டவர்'' அல்லது ''மேசியா'' என்பதாகும். அநேக வருடங்களுக்கு முன் ஒருவன் இராஜாவாக தெரிந்தெடுக்க படுவானென்றால் அவன் தலையில் எண்ணை ஊற்றப்படுவது வழக்கமாயிருந்தது. அவ்வாறு எண்ணை ஊற்றப்படுவதை ''அபிஷேகம்'' என அழைத்தனர். கர்த்தராகிய இயேசுவை 'கிறிஸ்து'' அல்லது ''அபிஷேகம் பண்ணப்பட்டவர்'' எனஅழைக்கையில் அவருடையஇராஜபதவியைகுறிக்கிறது. யூதர்கள் தாங்கள் காத்திருந்த இராஜா அல்லது விடுதலை வீரரை மேசியா என அழைத்தனர். சீமோன் பேதுரு அவரை இராஜா என அறிந்து ''நீர் ஜீவனுள்ள தேவனு டைய குமாரனாகிய கிறிஸ்து'' என்றான் (மத்தேயு 16:16)

நீங்கள் செய்ய வேண்டியது

இடதுபுறம் கொடுக்கப்பட்டிருக்கும் வசனங்களை வாசித்து, அவ்வசனங்களில் இயேசு எவ்விதம் அழைக்கப் பட்டுள்ளார் என வலது புறம் உள்ளவற்ேறாடு இணைக்கவும்.

| | | | |
|---|---|---|---|
| ........ | a. ரோமர் 1:4-5 | 1. | இரட்சகர். |
| ........ | b. லூக்கா 1:30-33 | 2. | வார்த்தை மாம்ச மானவர். |
| ........ | c. யோவான் 1:14 | 3. | முடிவில்லா ஆட்சியுடையவர். |
| ........ | d. மத்தேயு 1:21 | 4. | தேவனுடைய குமாரன். |

## அவருடைய நோக்கம்

நோக்கம் 2. *இயேசு சிலுவையில் ஏன் மரித்தார் என்றும், இன்று அவர் என்ன செய்து கொண்டிருக்கிறார் என்பதையும் அறிந்து கொள்ளுதல்.*

மனிதனை பாவத்திலிருந்து இரட்சிக்கவே இயேசு இவ்வுலகிற்கு வந்தார். லூக்கா 19:10–ல் ''இழந்து போனதை தேடவும் இரட்சிக்கவுமே மனுஷகுமாரன் வந்திருக்கிறார் என்றார்''. நம்மை இரட்சிக்க ஒரே ஒரு வழியே இருந்தது–தமது ஜீவனை கொடுப்பதே. ''மனுஷகுமாரனும் ஊழியம் கொள்ளும்படி வராமல், ஊழியஞ்செய்யவும், அநேகரை மீட்கும் பொருளாக தம்முடைய ஜீவனைக் கொடுக்கவும் வந்தார்''. (மாற்கு 10:45)

மீட்பு என்றால் விடுவிப்பது, காப்பாற்றுவது, அல்லது இரட்சிப்பது என பொருள்படும். இது மனுகுலம் அனைத்திற்கும் ஓர் சிறந்த வாக்குத்தத்தமாகும். ஆனால் நம்மை மீட்கும்படியாக இயேசு ஏன் மரிக்க வேண்டியிருந்தது? ஆதாம் ஏவாளை குறித்த சரித்திரத்தை நாம் ஞாபகத்திற்கு கொண்டு வருவோமெனில் அங்கே தேவன்சொன்ன–மரணம்

பாவத்தை பின் தொடரும் என்னும் உண்மையை நாம் அறிவோம். பாவத்திற்கு விரோதமான தமது நியாயதீர்ப்புக்கு எதிராகதாமே செல்லமுடியாது பாவம்இருக்கும் ஸ்தானத்தில் யாராவது மரித்தே ஆக வேண்டும். ஆகையால் பாவிகளின் ஸ்தானத்தில் இயேசு மரிக்க தீர்மானித்தார். இதை வேறு யாருமே செய்ய இயலாது. ஏனெனில் அவரால் மாத்திரமே மரணத்தை மேற்கொள்ள முடியும்.

கர்த்தராகிய அவருக்கும் இது சற்று கடினமாயிருந்தது. சிங்காசனத்தில் வீற்றிருந்து தமது தூதருக்கு கட்டளை பிறப்பிக்கவும் அவர்கள் அதன்படியே செய்யவும் கூடிய அதிகாரமுடையவர், வானத்தையும், பூமியையும் மனிதனையும் படைத்தவர் ஓர் தாசனின் ரூபம் எடுத்தார். தமது சிருஷ்டி அவரை காயப்படுத்தவும், நிந்திக்கவும் கடைசியில் அவரை சிலுவையில் அறையவும், தம்மை ஒப்பு கொடுத்தார் எனெனில் அதன் மூலம் நம்மை இரட்சிக்க.

1 பேதுரு 1:18-19–ல் ........ அழிவுள்ள வஸ்துக்களாகிய வெள்ளியினாலும் பொன்னினாலும் மீட்கப்படாமல், குற்றமில்லாத மாசற்ற ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தினாலே மீட்கப் பட்டீர்கள் என்று அறிந்திருக்கிறீர்களே.

இயேசு மரித்தபடியால் எல்லா மனிதரும் இரட்சிப் படைந்தனரா? இல்லை, தெரிந்தெடுக்க கூடிய சுதந்திரத்தை அவர் தமக்கு எடுத்து கொள்ளவில்லை. ஒவ்வொருவரும் தங்களுக்கென்று தீர்மானம் எடுக்க வேண்டும், ஒவ்வொருவரும் இயேசுவை தங்கள் சொந்த இரட்சகராய் ஏற்றுகொள்ள வேண்டும். இயேசு தமது சீஷர்களை பார்த்து, நீங்கள் உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள், விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான். விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாக தீர்க்கப்படுவான். (மாற்கு 16:15-16)

தேவன் தம்முடைய ஒரே பேருனகுமாரனை விசுவாசிக்றவன் எவனோ அவன் கெட்டு போகாமல் நித்திய ஜீவனை அடையும் படிக்கு, அவரைத் தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார். உலகத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கும்படி தேவன் தம்முடைய குமாரனை உலகத்திற்கு அனுப்பாமல், அவராலே உலகம் இரட்சிக்கபடுவதற்காகவே அவரை அனுப்பினார். அவரை விசுவாசிக்கிறவன் ஆக்கினைக்குள்ளாக தீர்க்கப்படான்; விசுவாசியாதவனோ, தேவனுடைய ஒரே பேருன குமாரனுடைய நாமத்தில் விசுவாசமுள்ளவனாயிராதபடியினால், அவன் ஆக்கினை தீர்ப்புக்குட்பட்டாயிற்று (யோவான் 3:16-18)

இயேசு நமக்காக மரித்தார். ஆனால் அவர் கல்லறையிலே இருந்திருப்பாரெனில் மனிதன் இரட்சிக்கப்பட கூடிய எந்த நம்பிக்கையும் இருந்திருக்காது.

அநேக மதங்கள் தங்கள் தலைவர்களின் கல்லறையண்டை அவர்களுக்கு கோயில்களை எழுப்பியுள்ளனர். அதனுள் அம்மரித்தோரின் எலும்புகளையும் வைத்துள்ளனர் ஆனால் இயேசுவின் கல்லறை காலியாக உள்ளது. ஏனெனில் மூன்றும் நாள் அவர் உயிர்த்தெழுந்தார். அவர் உயிர்த்தெழுந்து அனேகருக்கு தம்மை பலமுறை வெளிப்படுத்தினார்.

அடக்கம் பண்ணப்பட்டு, வேதவாக்கியங்களின் படி மூன்றும் நாள் உயிர்த்தெழுந்து, கேபாவுக்கும் பின்பு பன்னிருவருக்கும் தரிசனமானார். அதன் பின்பு அவர் ஐந்நூறு பேருக்கு அதிகமான சகோதரருக்கும் ஒரே வேளையில் தரிசனமானார்; அவர்களில் அநேகர் இந்நாள் வரைக்கும் இருக்கிறார்கள். சிலர் மாத்திரம் நித்திரையடைந்தார்கள். பின்பு யாக்கோபுக்கும், அதன் பின்பு அப்போஸ்தலரெல்லாருக்கும் தரிசனமானார்.

(I கொரிந்தியர் 15:4–7)

இயேசுவின் உயிர்த்தெழுதல் அவர் தேவ குமாரன் என்பதற்கு பல அத்தாட்சிகளில் ஒன்றாகும். ரோமர் 1:5ல் "(இயேசு கிறிஸ்து) மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்ததினாலே பலமாய் ரூபிக்கப்பட்ட தேவகுமாரனுமாயிருக்கிறார்".

அவர் தம்மை தாமே அநேகருக்கு வெளிப்படுத்தி, நம்பிக்கையின் அநேக செய்திகளை அவர்களுக்கு அருளி, பின்பு பரமேறிச் சென்றார் இதுவும் இரகசியமல்ல. ஏனெனில் அநேகர் அவரை சூழ்ந்திருக்கையில் அவர் எடுத்துக் கொள்ளப்பட்டார்.

பின்பு அவர் பெத்தானியா வரைக்கும் அவர்களை அழைத்துக் கொண்டு போய், தம்முடைய கைகளை உயர்த்தி, அவர்களை ஆசீர்வதித்தார். அவர்களை ஆசீர்வதிக்கையில் அவர்களை விட்டு பிரிந்து, பரலோகத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டார். (லூக்கா 24:50–51)

அவர் இப்போது என்ன செய்து கொண்டிருக்கிறார்? அவர் உயர எடுத்துக் கொள்ளப்பட்டப்போது அவர் தமக்குரிய பிதாவின் வலது பாரிசத்திலுள்ள சிங்காசனத்தில் தமது ஸ்தானத்தை ஏற்றுக் கொண்டார். அவர் நமது தேவைகளை குறித்து பிதாவோடு பரிந்து பேசிக்கொண்டிருக்கிறார். அவர் என்ன செய்து கொண்டிருக்கிறார் என்பதை குறிப்பிடும் மூன்று வசனங்களை நாம் கவனிப்போமாக.

பரலோகத்திலுள்ள மகத்துவ ஆசனத்தின் வலதுபாரிசத்திலே உட்கார்ந்திருக்கிற பிரதான ஆசாரியர் நமக்கு உண்டு. (எபிரேயர் 8:1)

ஒருவன் பாவஞ்செய்வானானால் நீதிபரராயிருக்கிற இயேசு கிறிஸ்து நமக்காக பிதாவினிடத்தில் பரிந்து பேசுகிறவராயிருக்கிறார். (1 யோவான் 2:1)

மேலும் தமது மூலமாய் தேவனிடத்தில் சேருகிறவர்களுக் காக வேண்டுதல் செய்யும்படிக்கு அவர் எப்பொழுதும் உயிரோடிருக்கிறவராகையால் அவர்களை முற்றுமுடிய இரட்சிக்க வல்லவராயுமிருக்கிறார்: (எபிரேயர் 7:25)

நமது மீட்புக்காக இத்தனை விலை செலுத்தப்பட்டது எத்தனை மகத்துவமானது? அவர் மரித்து, கல்லறையை விட்டு உயிர்த்தெழுந்து, தமது பிதாவோடு கூட இருக்க பரமேறி சென்ற பின்பு நம்மை அவர் மறக்கவில்லை. நாம் அவரை அனுமதிப்போமெனில் எல்லா நாளும் அவர் நமக்கு உதவி செய்ய ஆயத்தமாயுள்ளார்.

2. சரியான சொற்றொடரின் முன் காணப்படும் எழுத்தை சுற்றி வட்டமிடவும். இயேசு சிலுவையில் மரித்தது :
   a) நம்மை இரட்சிக்க.
   b) நாம் மரிக்க வேண்டிய ஸ்தானத்தில் அவர் மரிக்க.
   c) தம்மை இரட்சகர் என விசுவாசிக்கும் அனைவருக்கும் இரட்சிப்பை அருள.
   d) நமக்கு நித்திய ஜீவனை அருள.

3. இயேசு எவ்விதம் பரமேறி சென்றார்?

..................................................................................

4. சரியான விடையின் முன் காணப்படும் எழுத்தை சுற்றி வட்டமிடவும். வேத வசனங்களின் படி இயேசு இப்போது என்ன செய்து கொண்டிருக்கிறார்? அவர்
   a) மற்ற சிருஷ்டிகளை குறித்து கரிசனையுடையவராயிருக்கிறார்.
   b) நமது தேவைகளை குறித்து பிதாவிடம் பரிந்து பேசிக்கொண்டிருக்கிறார்.

c. யார் நித்திய ஜீவனை அடைவார்கள், யார் அடைய மாட்டார்கள் என்பதை குறித்த தீர்மானம் எடுத்து கொண்டிருக்கிறார்.

## அவரது வருகை

நோக்கம் 3. நாம் எடுத்துகொள்ளப் படுகையில் சம்பவிக்க போகும் ஐந்து காரியங்களையாவது குறிப்பிடுதல்.

இயேசுகிறிஸ்து மீண்டும் இந்த பூமிக்கு வருவார். இதனை அவருடைய இரண்டாம் வருகை என நாம் அழைக்கிறோம். இது சம்பவிப்பதற்குள்ளாக அவருடைய சபை (அவரை விசுவாசித்து ஏற்று கொண்டவர்கள்) அவரை சந்திக்க மேகங்களில் எடுத்துகொள்ளப் படும் என வேதம் சொல்லுகிறது. இதனை நாம் ''எடுத்து கொள்ளப் படுதல்'' என அழைக்கிறோம். இச்சம்பவத்திற்கு பின் அவர் மீண்டும் இப்பூமியில் தமது இராச்சியத்தை ஸ்தாபிப்பார்.

விசுவாசிகள் இந்த எடுத்துக் கொள்ளப்படும் நாளுக்காய் காத்திருக்கின்றனர், ஏனெனில் அப்பொழுது நாம் அவரை முகாமுகமாய் சந்தித்து நமக்குரிய பிரதிபலனாகிய நித்திய ஜீவனை பெற்றுக்கொள்வோம். அப்போஸ்தலர் 1:11-ல் உங்களிடத்தினின்று வானத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட இந்த இயேசுவானவர் எப்படி உங்கள் கண்களுக்கு முன்பாக வானத்துக்கு எழுந்தருளிப் போனாரோ, அப்படியே மறுபடியும் வருவார் எனக் காண்கிறோம். மேலும் 1 தெசலோனிக்கேயர் 4:16-17-ல்,

ஏனெனில், கர்த்தர் தாமே ஆரவாரத்தோடும், பிரதான தூதனுடைய சத்தத்தோடும், தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கி வருவார்; அப்பொழுது

கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள். பின்பு உயிரோடிருக்கும் நாமும் கர்த்தருக்கு எதிர்க்கொண்டு போக, மேகங்கள் மேல் அவர்களோடே கூட ஆகாயத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டு, இவ்விதமாய் எப்பொழுதும் கர்த்தருடனே கூட இருப்போம்.

10–ம் பாடத்தில் எடுத்துக்கொள்ளப் படுதலையும் அதன் பின் நடக்க இருக்கும் சம்பவத்தையும் குறித்து இன்னும் அதிகமாய் படிப்போம்.

## நீங்கள் செய்ய வேண்டியது

5. சரியான சொற்றொடருக்கு முன் காணப்படும் எழுத்தை சுற்றி வட்டமிடவும்.

a) இயேசு மீண்டும் இப்பூமிக்கு வருவார்.

b) எடுத்து கொள்ளப்படுதலும் இரண்டாம் வருகையும் ஒன்ருகும்.

c) எடுத்து கொள்ளப் படுதலில் இயேசுவின் இராச்சியம் ஸ்தாபிக்கப்படும்.

d) கிறிஸ்துவை விசுவாசித்து ஏற்றுக் கொண்டவர்கள் அவரை சந்திக்க மேகங்களில் எடுத்துக் கொள்ளப் படுவர்.

6) I தெசலோனிக்கேயர் 4:16–17 வசனங்களை மீண்டும் வாசித்து எடுத்துக் கொள்ளப் படுதலில் சம்பவிக்கும் ஐந்து காரியங்களை குறிப்பிடவும்.

a) ........................................................................

b) ........................................................................

c) ........................................................................

d) ........................................................................

e) ........................................................................

## பாடம் 6

# இரட்சிப்பு

ஒரு நாள் நான் 95 வயது சென்ற அமேலியா என்னும் பாட்டியின் சிறிய வீட்டில் அமர்ந்திருக்கையில், அவள் எங்கனம் தனது வாழ்க்கையில் இயேசுவை இரட்சகராய் ஏற்றுக் கொண்டாள் என்பதை குறித்து என்னிடம் கூறினாள்

அநேக வருடங்களுக்கு முன் லாட்டின் அமெரிக்காவிலுள்ள ஒரு தேவாலய வாசலண்டை அவள் நின்று கொண்டிருந்தாள். உள்ளே நுழைய பயந்தவளாய், அவ்விடத்திலேயே நின்று "இயேசுவே உனது இரட்சகர், அவர் உன்னை உனது பாவத்தினின்று விடுவிப்பார், உன் தேவைகளின் மத்தியில் நீ அவரை அழைக்கலாம்" என்று போதகர் அளிக்கும் செய்தியை கவனித்து கொண்டிருந்தாள்.

அன்று அவள் தனது வீட்டிற்கு வந்து தனது அறைக்குள் நுழைகையில் ஏதோ ஒன்று அசையும் சத்தம் கேட்டாள். சடுதியில் தான் அவ்விடம் விட்டு ஓடுவதற்குள்ளாக இரையை இறுக்கிக்கொல்லும் ஒருவகையான பெரிய பாம்பொன்று தன்னை சுற்றி கொண்டது. அப்பாம்பு தன்னை நெருக்க ஆரம்பித்தது. அவ்வமயம் அப்போதகரின் செய்தி அவளுடைய நினைவில் வந்தது. உடனே அவள் இயேசுவே என்னை இரட்சியும்! இயேசுவே என்னை இரட்சியும! என கதறினாள். உடனே அந்த பாம்பு அவளை விட்டு மெதுவாக கீழே இறங்கி அவ்வறையை விட்டு வெளியேறிற்று.

அன்றைக்கே அவள் இயேசுவுக்கு நன்றி செலுத்தினது மட்டுமன்றி இயேசுவே என்னை சரீரப்பிரகாரமாய் இரட்

சித்தது போல என்னை ஆவிக்குரிய பிரகாரமாகவும் இரட்சியும் என்றாள்.

அன்று அந்த அமேலியாவை இரட்சித்த அதே இயேசு உன்னையும் இரட்சிக்க வல்லவர், இந்த விலையேறப் பெற்ற இரட்சிப்பை நீங்கள் எவ்விதம் பெற்றுக் கொள்ளலாம் என்பதை குறித்து நாம் படிப்போமாக.

இந்த பாடத்தில் நீங்கள் படிப்பது ....

இரட்சிப்பை விவரித்தல்.

இரட்சிப்பிற்கான அழைப்பு.

இரட்சிப்பின் பலன்கள்.

இந்தப் பாடம் உங்களுக்கு செய்யும் உதவி.

* இரட்சிப்பு என்றால் என்ன என்பதை விவரித்தல்.
* இரட்சிப்பின் அடிப்படை கொள்கைளை உங்கள் வாழ்க்கையில் அனுபவமாக்குதல்.
* உங்கள் வாழ்க்கையில் நீ எதிர்பார்க்கும் இரட்சிப்பின் பலன்கள் காணபடுகிறதா என்பதை ஆராயுதல்.

## இரட்சிப்பை விவரித்தல்

நோக்கம் 1 *வேதாகமத்தில் இரட்சிப்பை விவரித்திருப்பதை அங்கீகரித்தல்.*

ஒரு நாள் கல்லூரி மாணவன் ஒருவன் என்னிடத்தில், ஐயா, இரட்சிப்பிற்கும் பரலோகத்திற்கும் அநேக பாதைகள் உண்டு. உண்மையாக இருத்தலே பரலோகத்தை அடைய கூடிய வழியாகும். நீ உண்மையுள்ளவனாக இருக்கும் வரைக்கும் நீ எதை நம்பினாலும் அது காரிமானதல்ல.

அவன் சொன்னது சரிதானு? உண்மையுள்ளவனுய் இருத்தல் மட்டும் போதுமா? அல்லது ஒருவன் உண்மையாய் தவற கூடுமா?

பாவத்திலிருந்துள்ள விடுதலை இயேசுகிறிஸ்து மூலம் மாத்திரமே பெற்று கொள்ளக் கூடும் என வேதாகமம் தெள்ள தெளிவாய் கூறுகிறது. வெளிப்படுத்தல் 1:6–ல் ''அவர் (இயேசு கிறிஸ்து) நம்மிடத்தில் அன்பு கூர்ந்து, தமது இரத்தத்தினுலே நம்முடைய பாவங்களற நம்மை கழுவினுர்'' என நாம் காண்கிரேும்

அப்போஸ்தலர் 4:12-ல் ''அவராலேயன்றி (இயேசு கிறிஸ்து) வேருெருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப் படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர் களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேருெரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை.''

ஆதலால் இரட்சிப்பை நாம் விவரிக்கையில், அது பாவத்திலிருந்துள்ள மன்னிப்பு என கூறுவதோடு இயேசு கிறிஸ்துவின் மரணம் மூலமாய் மாத்திரமே அதை பெற்றுக் கொள்ளக் கூடும் எனவும் நாம் ஏற்று கொள்ள வேண்டும்.

இந்த இரட்சிப்பு யாருக்கு தேவை? நாம் படித்தது போல எல்லாரும் பாவஞ்செய்து நித்திய ஆக்கினைக்கு அல்லது தேவனை விட்டு பிரிந்த அனுபவத்திற்கு விதிக்கப்பட்டிருக்கிரேும். எசேக்கியேல் 18:4-ல்''பாவஞ்செய்கிற ஆத்துமா சாகும்'' என்றும் ரோமர் 3:23-ல் ''எல்லாரும் பாவஞ்செய்து தேவமகிமையற்றவர்களாஞேம்'' என்றும் பார்க்கிரேும். மனுகுலம் அனைத்திற்கும் இயேசுகிறிஸ்து மூலமுள்ள பாவ மன்னிப்பும் இரட்சிப்பும் இன்றியமையாததாய் இருக்கிறது.

## நீங்கள் செய்ய வேண்டியது

1. பாவத்திலிருந்துள்ள மன்னிப்பு கிடைப்பது

   a) புண்ணிய யாத்திரைகள் மூலம்.

   b) தருமம் செய்வதின் மூலம்.

   c) இயேசுகிறிஸ்து மூலம்.

2. இரட்சிப்பு என்ருல்

   a) நாம் நம்பியிருப்பது எது ஆனுலும் அதிலே உண்மையாயிருத்தல்.

   b) இயேசுகிறிஸ்து மூலம் பாவத்திலிருந்துள்ள விடுதலே.

3. சரியான சொற்ருெடருக்கு முன் காணப்படும் எழுத்தை சுற்றி வட்டமிடவும்.

   a) மற்றவர்களே துன்பப்படுத்துகிறவர்களுக்கு மட்டுமே இரட்சிப்பு தேவை.

   b) தேவனேயும், பரலோகத்தையும் அடைய அநேக வழிகளுண்டு.

   c) நன்மை செய்கிற யாவருமே பரலோகம் அடைவர்.

## இரட்சிப்பிற்கான அழைப்பு

நோக்கம் 2 *இரட்சிப்பின் அஸ்திபாரத்தை விவரிக்கும் சொற்ருெடர்களே பகுத்தறிதல்*

இயேசுகிறிஸ்து உயிர்த்தெழுந்து சில நாட்களுக்குள் நடந்த சம்பவமொன்றை அப்போஸ்தல நடபடிகளின் புத்தகத்தில் காண்கிருேம். பூமியதிர்ச்சி மூலம் திகிலடைந்த சிறைச்சாலே அதிகாரி, தனது கைதிகள் அனேவரும் ஓத

விட்டனர் என எண்ணினன். இயேசுவை பின்பற்றுகிறவர் களாகிய பவுலும், சீலாவும் அவர்களுள் இருவராக காணப்பட்டனர்.

உடனே பவுலும், சீலாவும் சிறைச்சாலையிலிருந்து ஒருவரும் வெளியேறவில்லை என சிறைச்சாலை அதிகாரிக்கு உறுதிபடுத்தினர். நடந்தது தேவனுடைய அற்புதம் என அறிந்த அதிகாரி அவர்களை நோக்கி இரட்சிக்கப்பட நான் என்ன செய்ய வேண்டுமென்றான். அதற்குரிய சீடர்களின் பதில் மிக எளிதாய் காணப்பட்டது. அதனை அப்போஸ்தலர் 16:31-ல் காண்கிறோம். ''கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசி, அப்பொழுது நீ இரட்சிக்கப்படுவாய்'' அப்படியானால் இரட்சிக்கப்பட முதலாவது நாம் செய்ய வேண்டுவது இயேசுவை விசுவாசித்தலாகும்.

நாம் எங்ஙனம் விசுவாசிக்க வேண்டும்? அதற்கும் நாம் வேதாகமத்தில் அதனுடைய பதிலை காண்கிறோம். அதென்னவெனில், நாம் அவரை நமது கர்த்தரும், இரட்சகருமாய் அங்கீகரித்து, நம்மை பரலோகம் கொண்டுச் செல்ல அவரை சார்ந்திருக்க வேண்டும்.

> இயேசு தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று நீங்கள் விசுவாசிக்கும்படியாகவும், விசுவாசித்து அவருடைய நாமத்தினாலே நித்திய ஜீவனை அடையும்படியாகவும், இவைகள் எழுதப்பட்டிருக்கிறது.
>
> (யோவான் 20.31)

நாம் இயேசுவை நமது கர்த்தரும் இரட்சகருமாய் ஏற்று கொண்ட உடனே பாவத்தை விட்டு விலக வேண்டும். இயேசுவின் நாமத்தில் என்னை மன்னித்து சுத்தீகரிக்கும் படியாய் தேவனிடம் மன்றாட வேண்டும், இதை அவர் செய்ய நாம் வேண்டுகையில் அவர் அதை செய்ய வல்லவர் என்றும் நாம் விசுவாசிக்க வேண்டும். Iயோவான் 1:9-ஐ ஞாபகத்தில்

வைத்து கொள்ளவும், ''நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்.''

அவரை கர்த்தரும், இரட்சகருமாய் ஏற்றுக்கொள்ளுகிற தான செயலை நாம் செய்வது, நமது நண்பர் ஒருவரோடு உரையாடுவதை போன்றதாகும், இச்செயலை நீ இதுவரை செய்யாமலிருப்பின், இன்றே அவர் அருளும் மன்னிப்பை ஏற்று கொள்ள நீ ஆயத்தம் என ஒப்புக் கொள். ஒரு வேளை இதை போல் உனது சொந்த வார்த்தைகளில் சொல்லகூடும்

''அருமை தகப்பனே,

நான் ஒரு பாவி என ஒத்துக் கொள்கிறேன்.

என் பாவத்திற்காய் மனஸ்தாபப்பட்டு, உமது மன்னிப்பை வேண்டுகிறேன். என்னை சுத்திகரித்து எல்லா தீமையினின்றும் காத்துக் கொள்ளும், எனக்காய் மரித்த இயேசுவின் பலியை நான் ஏற்றுக் கொள்கிறேன்.

உம்மை என் கர்த்தரும் இரட்சகருமாய் ஏற்று கொள்கிறேன். உமக்கு நன்றி. ஆமென்.''

நீ இந்த ஜெபத்தை உண்மையாய் செய்திருப்பாயெனில், உனது பாவமெல்லாம் மன்னிக்கப்பட்டது என உறுதி கொள்ளலாம். நீ அவருடையவனாகவும், அவரது பிள்ளையாகவும் மாறின படியால் அவருக்கு நன்றிசெலுத்தலாம்.

## நீங்கள் செய்யவேண்டியது

சரியான பதிலை சுற்றி வட்டமிடவும்.

4. ரோமர் 1:16ஐ வாசிக்கவும், அதில் நாம் காண்பது இரட்சிப்பு என்பது

a) கட்டளைகளின் படி ஜீவிக்கும் அனைவருக்குமுரியது
b) விசுவாசிக்கிறவர்களுக்கு மட்டுமுரியது
c) செல்வந்தர்களுக்கு மட்டுமுரியது

5 அப்போஸ்தலர் 16:31, யோவான் 20:31–ன் படி இரட்சிக்கப்பட நாம் விசுவாசிக்க வேண்டியது

a) கர்த்தராகிய இயேசுவை
b) பரிசுத்த அப்போஸ்தலர்களை
c) உங்கள் சபையின் பாரம்பரியத்தை

## இரட்சிப்பின் பலன்கள்

நோக்கம் 3. இரட்சிப்பின் ஐந்து பலன்களை அறிந்து கொள்ளுதல்

நீ இரட்சிப்பை ஏற்று கொள்ளும்போது என்ன சம்பவிக்கிறது? ஓர் உண்மையான ஆவிக்குரிய வித்தியாசம் அல்லது வேற்றுமை நிகழ்கிறது. இதனை சில வேளைகளில் இருயத மாற்றம் என்று அழைக்கலாம், II கொரிந்தியர் 7:10–ல் தேவனுக்கேற்ற துக்கம் பின்பு மனஸ்தாபப்படுகிறதற்கு இடமில்லாமல் இரட்சிப்புக்கேதுவான மனந்திரும்புதலை உண்டாக்குகிறது, மீண்டும் II கொரிந்தியர் 5:17–ல் "ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச் சிருஷ்டியாயிருக்கிறான்; பழயவைகள் ஒழிந்து போயின, எல்லாம் புதிதாயின." இம்மாற்றத்தை பல விதங்களில் நாம் காணலாம். ஒருவேளை அது ஒருவன் தனது துக்கமான வாழ்க்கையை விட்டு மகிழ்ச்சியான வாழ்க்கைக்கு வருவதாகும். சிலர் தங்கள் பழைய விரோதிகளை நேசிப்பதாகவும் இருக்கலாம்.

சில நேரங்களில் அது உடலுக்குரிய மாற்றமாகவும் காணலாம், குடிப்பழக்கத்திற்கு அடிமை பட்ட தனது

உடலே விடுவித்து கொள்ளுவதாக இருக்கலாம், அவரை விசுவாசிக்கிறவர்களுடைய வாழ்க்கையில் எவ்வித மாற்றத்தையும் கொண்டுவர தேவன் வல்லவராயிருக்கிறார்.

இயேசுகிறிஸ்துவை கர்த்தரும், இரட்சகருமாய் ஏற்று கொள்ளுதல் என்றால் அவருடைய குடும்பத்தில் பிறப்பது என்றும் பொருள்ப்படும், இதனையே யோவான் 3:3-ல் மறுபடியும் பிறத்தல் என்று இயேசு கூறினார்.
யோவான் 1:12–13-ல்

அவருடைய நாமத்தின் மேல் விசுவாசமுள்ளவர்களாகி அவரை ஏற்று கொண்டவர்கள் எத்தனை பேர்களோ, அத்தனை பேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி, அவர்களுக்கு அதிகாரங் கொடுத்தார். அவர்கள் இரத்தத்தினாலாவது மாம்சத்தத்தினாலாவது புருஷனுடைய சித்தத்தினாலாவது பிறவாமல், தேவனாலே பிறந்தவர்கள்.

வேதாகமத்தில் இதை போன்ற பொருளுள்ள வேறொரு வார்த்தை அதாவது தத்து எடுத்தல் (adoption) என காண்கிறோம். தேவ குமாரர்களுக்குரிய எல்லா சுதந்திரத்தையும் அவர் நமக்கு தருகிறார்.

நாம் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோமென்று ஆவியானவர் தாமே நம்முடைய ஆவியுடனேகூட சாட்சி கொடுக்கிறார். நாம் பிள்ளைகளானால் சுதந்தரருமாமே; தேவனுடைய சுதந்தரரும் கிறிஸ்துவுக்கு உடன் சுதந்தரருமாமே? கிறிஸ்துவுடனே கூட நாம் மகிமைப்படும்படிக்கு அவருடனே கூடபாடுப்பட்டால் அப்படியாகும். (ரோமர் 8:16,17)

தேவனுடைய குடும்பத்தில் இருப்பது என்றால் அது சிறந்ததாகும். இதனாலே கிறஸ்தவர்கள் ஒருவரையொருவர் ''சகோதரன்'' அல்லது ''சகோதரி'' என்று அழைக்கின்ற

ளர். இதன் பொருள் நாம் யாவரும் ஒரே குடும்பத்தை சார்ந்தவர்கள் என்பதாகும்.

நமது இரட்சிப்பை குறித்து நாம் திட்டமுள்ளவர்களா யிருக்க முடியுமா? ஒரு நாள் ஓர் சகோதரி என்னிடம் வந்து தனக்காக ஜெபிக்கும்படி கேட்டு கொண்டாள். அவள் இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுகொண்ட நாட்களில் காணப்பட்ட மகிழ்ச்சியும், சந்தோஷமும் அவளிடம் இப் போது காணபடாததால் அவளுடைய இரட்சிப்பை இழந்து விட்டாளோ என சந்தேகித்தாள். நாம் நமது உணர்வு களால் அன்றி, தேவனுடைய வார்த்தைகளின் படி இரட் சிப்பை எற்றுக்கொள்கிறோம்.

இரட்சிக்கப்பட தேவனுடைய வார்த்தைகளில் காணப்படும் நிபந்தனைகளை நாம் நிறைவேற்றியிருப்போ மெனில், என்ன உணர்வுகளுடையவர்களாயிருப்பினும் நாம் இரட்சிக்கப்பட்டவர்கள் என விசுவாசிக்க வேண்டும். பரிசுத்தாவியானவரும் நம்மோடு கூட சாட்சி கொடுப்பார். நம் சகோதர, சகோதரிகள் மூலமாகவும் இவ்வனுபவத்தை நாம் உறுதி படுத்தி கொள்ளலாம். எனது நண்பர் ஒருவர் என்னிடம் வந்து;

நாம் சகோதரரிடத்தில் அன்பு கூருகிறபடியால், மரணத்தை விட்டு நீங்கி ஜீவனுக்குட்பட்டிருக்கிறோமென்று அறிந்திருக்கிறோம். (I யோவான் 3:14)

கிறிஸ்தவர்கள் சில நேரங்களில் நீதிகரித்தல், சுத்தி கரித்தல் என்னும் வாத்தைகளை உபயோகிப்பதை நீங்கள் கேட்டிருக்கலாம். அவைகளின் பொருள் என்ன?

நீதிகரித்தல் என்றுல் பாவத்திலிருந்து பெறும் விடுதலை யாகும். அது இரட்சிக்கப்பட்டதின் பலனுகும். தேவன் நமது பாவத்தை மன்னித்து குற்ற மனசாட்சியை நம்மை

விட்டு அகற்றி, நம்மை நீதிமான்கள் என அழைக்கிறார்— நாம் பாவமே செய்யாதவர்களை போல. ரோமர் 5:1— உரைப்பதாவது — "இவ்விதமாக, நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்கிறபடியால், நம்முடைய கர்த்ராகிய இயேசுகிறிஸ்து மூலமாய் தேவனிடத்தில் சமாதானம் பெற்றிருக்கிறோம்." தேவனோடுள்ள சரியான ஐக்கியத்தையே நீதீகரித்தல் என அழைக்கிறோம்.

சுத்தீகரிப்பு என்றால் பரிசுத்தமாக்கபடுதல் அதாவது பாவத்திலிருந்து சுத்தீகரிக்கப்பட்டு தேவனுக்கென சமர்ப்பிக்கப்படுதல் ஆகும்.

சமாதானத்தின் தேவன் தாமே உங்களை முற்றிலும் பரிசுத்தமாக்குவாராக. உங்கள் ஆவி, ஆத்துமா சரீரம் முழுவதும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வரும்போது குற்றமற்றதாயிருக்கும்படி காக்கப்படுவதாக. (Iதெசலோனிக்கேயர் 5:23)

எல்லா கிறிஸ்தவர்களும் சுத்தீகரிக்கப்பட்டு பரிசுத்தமாக வேண்டுமென்று தேவன் விரும்புகிறார். "நீங்கள் பரிசுத்தமுள்ளவர்களாய் வேசிமார்க்கத்திற்கு விலகியிருக்க வேண்டுமென்பதே தேவனுடைய சித்தமாயிருக்கிறது." (Iதெசலேனிக்கேயர் 4:3). "யாவரோடும் சமாதானமாயிருக்கவும், பரிசுத்தமுள்ளவர்களாயிக்கவும் நாடுங்கள்; பரிசுத்தமில்லாமல் ஒருவனும் கர்த்தரை திரிசிப்பதில்லையே. (எபிரேயர் 12:14)

இயேசுகிறிஸ்துவினுடைய சிலுவை மரணத்தை குறித்து பேசுகையில் வேறொரு காரியத்தை கூட நாம் சிந்திக்க வேண்டியிருக்கிறது, அதுவே அற்புத சுகம். கல்வாரியில் இயேசுவின் மரணத்தின் மூலமாக அவர் நமக்கு அற்புத சுகத்தையும் வாக்கு பண்ணியிருக்கிறார்.

பிசாசு பிடித்திருந்த அநேகரை அவரிடத்தில் கொண்டு வந்தார்கள்; அவர் அந்த ஆவிகளை தமது வார்த்தையி னாலே துரத்தி, பிணியாளிகளெல்லாரையும் சொஸ்தமாக் கினார். அவர் தாமே நம்முடைய பெலவீனங்களை ஏற்றுக் கொண்டு, நம்முடைய நோய்களை சுமந்தார் என்று ஏசாயா தீர்க்க தரிசியினால் உரைக்கப்பட்டது நிறைவேறும் படி இப்படி நடந்தது .(மத்தேயு 8:16-17)

நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களினிமத்தம் அவர் நொறுக்கப்பட் டார்........அவருடைய தழும்புகளால் குணமாகிறோம். ஏசாயா 53:5. அற்புத விடுதலையென்பது இயற்கைக்கு அப்பாற் பட்ட தேவனுடைய வல்லமையினாலே விடுதலையடை வதாகும். இவ்விடுதலையை எவ்விதம் நாம் உரிமையாக்கி கொள்ள கூடும் என்பதை குறித்து யாக்கோபு 5:14-15-ல் காண்கிறோம்.

உங்களில் ஒருவன் வியாதிப்பட்டால், அவன் சபையின் மூப்பர்களை வரவழைப்பானாக; அவர்கள் கர்த்தருடைய நாமத்தினாலே அவனுக்கு எண்ணெய்பூசி, அவனுக்காக ஜெபம் பண்ணக்கடவர்கள். அப்பொழுது விசுவாசமுள்ள ஜெபம் பிணியாளியை இரட்சிக்கும்; கர்த்தர் அவனை எழுப்புவார்; அவன் பாவஞ்செய்தவனானால் அது அவனுக்கு மன்னிக்கப்படும்.

## நீங்கள் செய்ய வேண்டியது

6. சரியான விடையை சுற்றி வட்டமிடவும்.

*கீழ்காண்பவைகளுள் எவைகள் இரட்சிப்பின் பலன் களாய் காணப்படுகிறது.*

a. வாழ்க்கையில் மாற்றம்

b. தத்து எடுத்தல் அல்லது "மறுபிறப்பு"

c. நீதீகரிக்கப்படுதல்

d. சுத்தீகரிக்கப்படுதல்

e. அற்புத சுகம்

7. இடதுபுறம் காணப்படும் வார்த்தைகளை வாசித்து அதனோடு இணையும் பொருளை கண்டு பிடித்து குறிப்பிடவும்.

| | |
|---|---|
| .... a. வாழ்க்கையில் மாற்றம் | 1. பரிசுத்தமடைதல் |
| .... b. சுத்திகரிக்கப் படுதல் | 2. இயற்கைக்கு அப்பாற்பட்ட முறையில் சுகம் |
| .... c. நீதீகரிக்கப்படுதல் | 3. முற்றிலும் மாற்றமடைதல் |
| .... d. அற்புதசுகம் | 4. தேவனுடைய குடும்பத்தின் அங்கத்தினர்களாய் மாறுதல் |
| .... e. தத்து எடுத்தல் | 5. நீதிமான்களாகுதல் |

பாடம் 7

# பரிசுத்தாவியானவர்

இயேசு தங்களை விட்டுச் செல்வதை சீஷர்கள் அறிந்திருந்தனர். அதனை குறித்து அவர் அவர்களிடத்தில் சொல்லியிருந்தார். முதலில் அது ஓர் நற்செய்தியாய் காணப்படாமல் அவர்கள் இருதயங்கள் கலக்கமுற்றிருந்தது. அவர்கள் இயேசுவை நேசித்து அவருடன் மூன்று வருடங்கள் நடந்தனர். அவரின்றி எங்கனம் அவர்கள் வாழ முடியும்.

அவர்களுடைய இருதய நிலையை அறிந்த அவர், அவர்களை விட்டு தமது பிதாவண்டை செல்வது அவர்களுக்கு சிறந்தது என கண்டார். அவர்களை ஒருபோதும் தனிமையில் விடாதபடி பரிசுத்த ஆவியானவரை பிதாவானவர் அனுப்புவர். (திருத்துவத்தில் ஒருவர். பாடம் 2)

தேவனுடைய ஆவியானவரை ஒரு குறிப்பிட்ட தேசமோ அல்லது குழுவினரோ மட்டும் அறிந்து கொள்ளுவதன்றி பூலோகமனைத்தும் அறிந்து கொள்வர். பெந்தெகோஸ்தே நாளில் பேதுரு, சுமார் 15 நாட்டினர் கூடியிருக்கையில் பிரசங்கித்தான். அப்போஸ்தலர் 2:16-17ல் அவன் என்ன போதித்தான் என்று பார்க்கிறோம்.

தீர்க்கதரிசியாகிய யோவேலினால் உரைக்கப்பட்டப்படியே; ''கடைசி நாட்களில் நான் மாம்சமான யாவர் மேலும் என் ஆவியை ஊற்றுவேன்''

ஆரும் பாடத்தில் இரட்சிப்பை குறித்து நாம் கற்றுகொண்டோம். பரிசுத்தாவியானவரின் கிரியையினால் நாம் இரட்சிக்கப்பட்டோம் என நீங்கள் அறிந்திருக்கிறீர்களா?



நமது வாழ்வில் பரிசுத்தாவியானவரும் அவருடைய கிரியையும் எங்கனம் என நாம் கற்று கொள்ளுவோம்.

## இந்த பாடத்தில் நீங்கள் படிப்பது

பரிசுத்தாவியானவரின் ஆள்தத்துவம்
பரிசுத்தாவியானவரின் கிரியைகள்

## இந்த பாடம் உங்களுக்கு செய்யும் உதவி

* பரிசுத்தாவியானவரின் ஆள்த்தத்துவத்தை விவரித்தல்
* இரட்சிப்பில் பரிசுத்தாவியானவரின் கிரியை விவரித்தல்
* உனது வாழ்க்கையில் பரிசுத்தாவியானவரின் கரியையை அறிந்து கொள்ளுதல்.

## பரிசுத்தாவியானவரின் ஆள் த் தத்துவம்

**நோக்கம் 1.** பரிசுத்தாவியானவர் யார் என்றும் அவரது பல குணாதிசயங்களில் ஐந்தினை யாவது சுட்டிக் காட்டுதல்.

பரிசுத்தாவியானவர் தேவஞக இருக்கிருர்' திருத்துவத், தில் அவர் மூன்ருவதாக காணப்படுகிருர். பிதாவை போன் றும் குமாரனை போன்றும் அவரும் பலப்பெயர்களை உடை யவராயிருக்கிருர். அவைகளுள் சில: தேவனுடைய ஆவி, சத்தியத்தின் ஆவி, தேற்றரவாளன் என்பவைகளாகும். மத்தேயு 28:19-ல் மூவரையும் காண்கிருேம். ''நீங்கள் புறப்பட்டுப் போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தில் அவர்களுக்கு ஞானஸ் நானங்கொடுங்கள்.''

பரிசுத்தாவியானவர் பிதாவை போலவே நித்தியர், சர்வ வல்லவர், சர்வ ஞானி, எங்கும் நிறைந்தவர். அவர் பிதாவோடும், குமாரனேடும் சேர்ந்து பணி செய்வது மட்டு மன்றி அவர் சிருஷ்டிப்பிலும் அவர்களோடு கூட இருந்தார். அதற்கு ஆதாரமான சில வசனங்களை கவனிப்போம்.

''நித்திய ஆவியினுலே தம்மைத் தாமே பழுதற்ற பலியாக தேவனுக்கு ஒப்புக் கொடுத்தார்.'' (எபிரேயர் 9:14)

''ஆவியானவர் எல்லாவற்றையும் தேவனுடைய ஆழங் களையும் அறிந்திருக்கிருர்'' (1 கொரிந்தியர் 2:10)

## பரிசுத்தாவியானவரின் கிரியைகள்

நோக்கம் 2. வேதாகமத்தில் குறிப்பிட்டுள்ள பரிசுத்த ஆவியானவரின் ஆறு கிரியைகளை அறிந்து கொள்ளுதல்.

நமது இரட்சிப்பில் பரிசுத்தாவியானவர் ஓர் முக்கிய பங் கை வகிக்கின்ருர். நமது பாவங்களை நமக்கு எடுத்துணர்த்தி, இயேசுவை நமது சொந்த இரட்சகராய் எற்றுக் கொள்ள அவர் உதவி புரிகின்ருர். நமது வாழ்க்கையை அவர் மாற்றுகின்ருர்.

அவர் வந்து பாவத்தைக் குறித்தும், நீதியைக்குறித்தும், நியாயத்தீர்ப்பைக் குறித்தும், உலகத்தைக் கண்டித்துணர்த்துவார்.(யோவான் 16:8) எல்லா விசுவாசிகளுக்குள்ளும் பரிசுத்தாவியானவர் வாசஞ்செய்கிறார். மனமாற்றம் ஏற்படுகையில் அவர் இருதயத்திற்குள் வருகிறார் ரோமர். 8:9-ல் ''தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருந்தால், நீங்கள் மாம்சத்துக்குட்பட்டவர்களாயிராமல் ஆவிக்குட்பட்டவர்களாயிருப்பீர்கள். கிறிஸ்துவின் ஆவியில்லாதவன் அவருடையவனல்ல''.

அந்தப்படி திரும்பவும் பயப்படுகிறதற்கு நீங்கள் அடிமைத்தனத்தின் ஆவியைப் பெறாமல், அப்பா, பிதாவே என்று கூப்பிடப்பண்ணுகிற புத்திரசுவீகாரத்தின் ஆவியைப் பெற்றீர்கள். நாம் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோமென்று ஆவியானவர் தாமே நம்முடைய ஆவியுடனே கூடச் சாட்சி கொடுக்கிறார். (ரோமர் 8:15–16)

நமக்குள்ளே வாசஞ்செய்கிற பரிசுத்தாவியானவர், நமது மனந்திரும்புதலிக்கு பின் நம்மை நிரப்புகிற அனுபவத்திற்கும் நடத்துகிறார். அவ்வனுபவத்தை பரிசுத்த ஆவியால் நிரப்பப்படுதல் என்று அழைக்கிறோம். எல்லா விசுவாசிகளும் இவ்வனுபவத்தை பெற்றவர்களல்லர், ஆயினும் எல்லா விசுவாசிகளும் இவ்வனுபவத்தை பெற்றிருக்க வேண்டுமென தேவன் விரும்புகிறார்.

அவர் (இயேசு) தேவனுடைய வலதுகரத்தினாலே உயர்த்தப்பட்டு, பிதா அருளிய வாக்குத்தத்தத்தின்படி பரிசுத்தாவியைப்பெற்று, நீங்கள் இப்பொழுது காண்கிறதும் கேட்கிறதுமாகிய இதைப் பொழிந்தருளினார். (அப்போஸ்தலர் 2:33)

பேதுரு அவர்களை நோக்கி; நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீகள். (அப்போஸ்தலர் 2:38)

பரிசுத்தாவியானவர் நமது தேற்றரவாளனாகவும், உதவியாளராகவும் காணப்படுகிறார். அவர் நம்மை உபதேசித்து, அன்பின் ஐக்கியத்தை தந்து, சத்தியத்திற்கு நேராய் நடத்துகிறார். நமக்கு அருளும்படியாக அவரிடத்தில் சந்தோஷம், சமாதானம், சாந்தம், தாழ்மை, இச்சையடக்கம் போன்ற கனிகளையுடையவராயிருக்கின்றார் (கலாத்தியர் 5:22). மட்டுமின்றி நாம் தேவனுக்கும் மனுஷர்களுக்கும் ஊழியஞ்செய்யும் படியாக ஆவியின் வரங்களையும் உடையவராயிருக்கின்றார்.

## நீங்கள் செய்ய வேண்டியது

1 சரியான சொற்றொடருக்கு முன் காணப்படும் எழுத்தை சுற்றி வட்டமிடவும்.

a) ஒவ்வொரு விசுவாசிகளிலும் பரிசுத்தாவியானவர் வாசஞ் செய்கிறார்.

b) பரிசுத்தாவியானவர் நம்மை இரட்சிப்புக்கு நேராய் நடத்துகிறார்.

c) மனந்திரும்புதலும் பரிசுத்தாவி அபிஷேகமும் ஒன்றே.

d) நாம் தேவ பிள்ளைகளென்று பரிசுத்தாவியானவர் சாட்சி கொடுக்கிறார்.

2 பரிசுத்தாவியானவர் அருளும் கனிகளை குறிப்பிடவும்

a) ச ..............................

b) ச ..............................

c) சா ..............................

d) தா ..............................

e) இ ..............................

## பாடம் 8

# சபை

''சபை'' அல்லது ''ஆலயம்'' என்னும் பெயர் கொண்ட அநேக பெரிய கட்டிடங்கள், சிறிய கட்டிடங்கள் மற்றும் குடிசைகளை நீங்கள் கண்டிருப்பீர்கள், அவைகளுள் சில, சிலுவை அடையாளங்களையும், ஆலய மணிகளையும் உடையவைகளாய் ''இது ஓர் சபை'' என அறைக்கூவிக் கொண்டிருக்கிறது. மனிதர்களால் கட்டப்பட்ட இக்கட்டிடங்கள் ஒரு வகையில் சபைகளாயிருப்பினும், புதிய ஏற்பாட்டில் குறிப்பிட்டிருக்கும் சபை எனப்படுவது இதனை விட இன்னும் அதிகப் பொருளைக் கொண்டுள்ளது.

எல்லா விசுவாசிகளையும் கொண்ட சங்கத்தை சபை என அழைக்கிறோம். அதனை இயேசுவின் சரீரம் எனவும் அழைக்கலாம். தேவன் தமது ஆவியினாலே அவர்கள் மத்தியில் வாசஞ்செய்கிறார். 7-ம் பாடத்தில் பரிசுத்தாவியானவரை குறித்தும் அவருடைய சில கிரியைகளை குறித்தும் படித்தோம். நாம் அங்கு குறிப்பிடாத அவருடைய கிரியைகளில் ஒன்று, சபைகளுக்குள்ளே ஐக்கியத்தை உருவாக்குதல். எபேசியர் 4:3-ல் ''சமாதானக் கட்டினால் ஒருமையைக் காத்துக் கொள்வதற்கு ஜாக்கிரதையாயிருங்கள்.

இந்தப் பாடத்தில் சபை என்பது என்னவென்றும், அது எதைச் செய்ய கடமைப் பட்டது என்றும். அதற்கு என்ன சம்பவிக்கப் போகிறது என்றும் நாம் படிப்போம். இதற்குரிய பதில்களை நாம் வேதாகமத்தில் காணலாம்.

## இந்த பாடத்தில் நீங்கள் படிப்பது

அதன் பெயர்கள்.
அதன் பிரமாணங்கள்.
அதன் குறிக்கோள்.
அதன் வருங்காலம்.

## இந்த பாடம் உங்களுக்கு செய்யும் உதவி

* கிறிஸ்துவின் சபையை விவரித்தல்.
* சபையின் குறிக்கோளில் உண்மையுள்ளவனயிருத்தல்.
* சபையின் வருங்கால கிரியைகளை விளக்கிக்காட்டுதல்.

### அதன் பெயர்கள்

நோக்கம் 1. *சபையின் பல பிரிவுகளை குறிப்பிடுதல்.*

சரீரம், கட்டிடம், மணவாட்டி, குடும்பம் எனும் வார்த்தைகளை கேட்கும்போது அவைகள் அனைத்தும் சாதாரணமாய் குறிப்பிடும் ஒரு காரியத்தை குறித்து நீங்கள் சிந்தித்ததுண்டா? இவ்வார்த்தைகள் அனைத்தும் வேதாகமத்தில் குறிப்பிட்ட கூட்டாத்தாரை குறிக்கிறது-தேவனுடைய வீட்டார்.

கிறிஸ்து தலையாக காணப்படுகிறதான ஒரு சரீரத்தோடு சபை குறிப்பிடப்பட்டிருக்கிறது. கொலோசெயர் 1:18–ல் ''அவரே சபையாகிய சரீரத்துக்குத் தலையானவர்; எல்லாவற்றிலும் முதல்வராயிருக்கும்படி, அவரே ஆதியும் மரித்தோரிலிருந்து எழுந்த முதற் பேறுமானவர்.''

எல்லாவற்றையும் அவருடைய பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தி எல்லவற்றையும் எல்லாவற்றுலும் நிரப்புகிறவருடைய நிறைவாகிய சரீரமான சபைக்கு அவரை எல்லாவற்றிற்கும் மேலானத் தலையாகத் தந்தருளினர். (எபேசியர் 1:22-23).

நீங்கள் கிறிஸ்துவின் சரீரமாயும், தனித்தனியே அவயவங்களுமாயிருக்கிறீர்கள் (1 கொரிந்தியர் 12:27) வேதாகமம் சபையை குறித்து சொல்லும்போது அதனை தேவனுக்கென்று பிரதிஷ்டை செய்யப்பட்ட ஒரு கட்டிடமாகவும் குறிக்கிறது.

அப்போஸ்தலர் தீர்க்கதரிசிகள் என்பவர்களுடைய அஸ்திபாரங்கள் மேல் கட்டப்பட்டவர்களுமாயிருக்கிறீர்கள்; அதற்கு இயேசுகிறிஸ்து தாமே மூலைக்கல்லாயிருக்கிறார். அவர் மேல் மாளிகை முழுவதும் இசைவாய் இணைக்கப்பட்டு, கர்த்தருக்குள் பரிசுத்த ஆலயமாக எழும்புகிறது; அவர் மேல் நீங்களும் ஆவியினாலே தேவனுடைய வாசஸ்தலமாகக் கூட்டிக் கட்டப்பட்டு வருகிறீர்கள். (எபேசியர் 2:20–22)

சபைக்கு கொடுக்கப்பட்டுள்ள வேறொரு பெயர் கிறிஸ்துவின் மணவாட்டி என்பதாகும். வேதாகமம் இயேசுவை ஆட்டுக்குட்டியானவர் என்றும் சபையாகிய மணவாட்டியை அவர் மணந்து கொள்வார் என்றும் சொல்லுகிறது. வெளிப்படுத்தல் 21:9-ல் "நீ இங்கே வா, ஆட்டுக்குட்டியானவருடைய மனைவியாகிய மணவாட்டியை உனக்குக் காண்பிக்கிறேன்". (வெளிப்படுத்தல் 19:7) "ஆட்டுக்குட்டியானவருடைய கலியாணம் வந்தது, அவருடைய மனைவி தன்னை ஆயத்தம் பண்ணினாள்."

வேதாகமத்தை நீ தொடர்ந்து வாசிப்பாயெனில் இன்னும் சபைக்குக் கொடுக்கப்பட்டுள்ள வேறு அனேக பெயர்களை காணலாம். ஆனால் முக்கியமாக நாம் கவனத்தில் கொள்ள வேண்டியது யாதெனில், உண்மையாக இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டவர்கள் மட்டுமே இந்த சபையின் அங்கத்தினர்களாக இருக்கக்கூடும். இது ஒரு வளரும் சங்கமாகும்.

''இரட்சிக்கப் படுகிறவர்களை கர்த்தர் அனுதினமும் சபை யிலே சேர்த்துக்கொண்டு வந்தார்.'' (அப்போஸ்தலர் 2:47)

## நீங்கள் செய்ய வேண்டியது

1. கீழே காணப்படும் வசனங்களில், சபை எந்தெந்த பெயர்களால் குறிப்பிடப்பட்டுள்ளது.

   a) கொலோசேயர் 1:18............................................

   b) எபேசியர் 2:20–22 ............................................

   c) வெளிப்படுத்தல் 21:9 ............................................

## அதன் பிரமாணங்கள்

நோக்கம் 2 : *இரண்டு பிரமாணங்களை குறிப்பிடுதல்.*

சபை என்பது யார் என நாம் அறிந்திருக்கிறப் படியால் அதன் பிரமாணங்களையும் அறிய கடமைப் பட்டிருக்கிறோம். பிரமாணம் எனப்படுவது ஓர் அதிகாரத்தால் நியமிக்கப்பட்ட சட்டமாகும். சபையின் பிரமாணம் எனப்படுவது ஞானஸ் நானமும், திருப் பந்தி அல்லது இராபோஜனமும் ஆகும்.

இயேசு தாமே இவ்விரண்டு பிரமாணங்களையும் ஸ்தா- பித்தார். தமது சீஷர்களிடம் கடைசியாகச் சொன்னது, ஆகையால் நீங்கள் புறப்பட்டுபோய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுங்கள் (மத்தேயு 28:19) ஞானஸ்நானம் என்பது ஓர் விசேஷ முக்கியத்துவம் உடையதாயிருக்கின்றது.

ஞானஸ்நானத்திலே அவரோடு கூட அடக்கம் பண்ணப் பட்டவர்களாகவும் அதிலே அவரை மரித்தோரிலிருந் தெழுப்பின தேவனுடைய செயலின் மேலுள்ள விசுவாசத் திலே அவரோடே கூட எழுந்தவர்களாகவும் இருக்கி றீர்கள்.

நீ இயேசு கிறிஸ்துவில் புதிய வாழ்க்கை நடத்துகிறுய் என்பதை மற்றவர்களுக்கு சாட்சியாக அறிவிக்க இந்த ஞானஸ்நானத்தை நீயும் ஏற்றுக் கொள்ள விரும்புவாய். திருப்பந்தியிலும் பங்கெடுக்க நீ விரும்புவாய்.

இயேசுவானவர் கைது செய்யப்படுவதற்கு முன் தமது பனிரண்டு சீஷர்களுடன் திருப்பந்தி அல்லது இராபோஜனத்தில் பங்குக் கொண்டார். இயெசுவின் மரணத்தை ஞாபகப்படுத்தும்படி நாம் இப்பந்தியில் பங்கு சேருகிறோம். ''ஆகையால் நீங்கள் அப்பத்தைப் புசித்து, இந்தப்பாத்திரத்தில் பானம் பண்ணும்போதெல்லாம் கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தைத் தெரிவிக்கிறீர்கள்.
(I கொரிந்தியர் 11:26)

### நீங்கள் செய்ய வேண்டியது

2. சபைக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் இரண்டு பிரமாணங்கள் யாவை?

..............................................................................

..............................................................................

3. சரியான பதிலை தெரிந்தெடுத்து இச்சொற்றொடரை பூர்த்திச் செய்யவும். மத்தேயு 28:19-ன் படி ஞானஸ்நானம் ஏற்றுக் கொள்ள வேண்டியவர்கள்.

a) கிறிஸ்தவ குடும்பத்தில் பிறந்த யாராயினும்
b) இயேசு கிறிஸ்துவை விசுவாசித்து அவரை பின் பற்றுகிறவர்கள்.
c) சபையை சேர்ந்தவர்கள்.

### அதன் குறிக்கோள்

நோக்கம் 3. சபையின் குறிக்கோளை அறிந்துக் கொள்ளுதல்.

சபையின் நோக்கம் அல்லது குறிக்கோள் மனுகுலம் அனைத்திற்கும் சுவிசேஷத்தை பிரசங்கித்தலாகும். இயேசு வானவர் தாமே தாம் பரமேறுவதற்குமுன் இக்கட்டளையை அளித்துச் சென்றார்.

அப்பொழுது வேத வாக்கியங்களை அறிந்து கொள்ளும்படி அவர்களுடைய மனதை அவர் திறந்து அவர்களை நோக்கி, எழுதியிருக்கிறபடி கிறிஸ்து பாடுபடவும், மூன்றும் நாளில் மரித்தோரிலிருந்தெழுந்திருக்கவும் வேண்டியதாயிருந்தது. அன்றியும் மனந்திரும்புதலும் பாவ மன்னிப்பும் எருசலேம் தொடங்கிச் சகல தேசத்தாருக்கும் அவருடைய நாமத்தினாலே பிரசங்கிக்கப்படவும் வேண்டும். (லூக்கா 24:45-47)

## நீங்கள் செய்ய வேண்டியது

4. சரியான பதிலை தெரிந்தெடுத்து சொற்றொடரை பூர்த்திச் செய்யவும்? சபையின் குறிக்கோள் எனப்படுவது

   a) இயேசுவின் பாடுகளையும், மரணத்தையும் குறித்து அறிவித்தல்.

   b) மனந்திரும்புதல், பாவ மன்னிப்பை குறித்து பிரசங்கித்தல்.

   c) எங்கும் சென்று இயேசுவை குறித்து பேசுதல்.

## அதன் வருங்காலம்

நோக்கம் 4. *சபையின் வருங்காலத்தை குறிப்பிடுதல்.*

கிறிஸ்துவானவர் சபையை நேசித்ததினால் அதற்காக தமது ஜீவனை கொடுத்தார். எக்காரணத்தினால்?

தாம் அதை திருவசனத்தைக் கொண்டு தண்ணீர் முழுக்கினால் சுத்தீகரித்து, பரிசுத்தமாக்குகிறதற்கும், கறை திரை முதலானவைகள் ஒன்றும் இல்லாமல் பரிசுத்தமும் பிழையற்றதுமான மகிமையுள்ள சபையாக அதை தமக்கு முன் நிறுத்தி கொள்வதற்கும் தம்மை தாமே அதற்காக ஒப்புக் கொடுத்தார். (எபேசியர் 5:26-27)

சபையானது பரலோகத்திலும் பூமியிலும் தேவனை துதித்து கிறிஸ்துவோடு கூட ஆளுகைச் செய்யும்.

எங்கள் தேவனுக்கு முன்பாக எங்களை ராஜாக்களும் ஆசாரியர்களுமாக்கினீர்.... அப்பொழுது வானத்திலும் பூமியிலும் பூமியின் கீழுமிருக்கிற சிருஷ்டிகள் யாவும், சமுத்திரத்திலுள்ளவைகளும், அவற்றுளடங்கிய வஸ்துக்கள் யாவும்; "சிங்காசனத்தின் மேல் வீற்றிருக்கிறவரும் ஆட்டுக்குட்டியானவருக்கும் ஸ்தோத்திரமும் கனமும் மகிமையும் வல்லமையும் சதா காலங்களிலும் உண்டாவதாக என்று சொல்லக் கேட்டேன்!" (வெளிப்படுத்தல் 5:10–13

## நீங்கள் செய்ய வேண்டியது

சரியான விடையின் முன் காணப்படும் எழுத்தை சுற்றி வட்டமிடவும்.

a. நித்தியத்தில் (பரலோகத்தில்) நாம் ஒன்றுமே செய்ய வேண்டியதில்லை,

b. சபை நித்திய காலமாய் கிறிஸ்துவுடனே கூட காணப்படும்.

c. சபையானது ஆசாரியர்களாகவும் இராஜாக்களாகவும் தேவனுக்கு பணிவிடை செய்யும்.

## பாடம் 9

# ஆவியின் உலகம்

உலகத்திலிருக்கிறவனிலும் உங்களிலிருக்கிறவர் பெரியவர் (I யோவான் 4:4)

மேரி என்னும் வாலிபப் பெண் அசுத்த ஆவியினால் பிடிக்கப்பட்டாள். நான் அவளை சந்திக்கையில் அவளுக்கு 25 வயதுடையவளாய் பிசாசினாலும் அசுத்த ஆவியினாலும் பிடிக்கப்பட்டவளாய் காணப்பட்டாள். அவளோடும் அவளுடைய கணவரோடும் கூட நாங்கள் தங்கின மூன்று மாதங்கள் மிக கடினமான நாட்களாய் காணப்பட்டது.

ஒவ்வொரு மாலையிலும் அவள் தலைமேல் கை வைத்து ஜெபித்தோம். அசுத்த ஆவிகள் அவளை கொலைச் செய்து எங்களுக்கும் தீங்குச் செய்ய முயற்சித்தது. ஆனால் அம்முயற்சி பலிக்கவில்லை. நாங்கள் இயேசுவின் இரத்தத்தில் விசுவாசித்தவர்களாய் அவ்வசுத்தாவிகளை கடிந்து கொண்டோம். தேவனுடைய வல்லமையினால் அவளை அசுத்த ஆவியின் பிடியிலிருந்து விடுவித்தோம். இன்று அவள் சுதந்திரவாளியாய் காணப்படுகிறாள். இன்று அவளால் சொல்லக் கூடும்! "என் உள்ளத்தில் வசிப்பவர் இவ்வுலகத்திலுள்ளவனை விட பெரியவர்" என்று.

அங்ஙனம் மேரி தேவனுடைய குடும்பமாகிய சபையின் அங்கத்தினளாய் மாறினாள். இன்று தேவனுடைய ஆவியானவர் மேரியை நடத்துகிறார்.

ஒருவேளை நீங்களும் பிசாசின் கிரியைகளை கண்டிருக்கலாம். நீங்கள் அவனை குறித்து பயப்பட வேண்டியதில்லை. ஏனெனில் தேவனுடைய வல்லமை பெரியது. இந்த பாடத்தில் ஆவிகளின் உலகத்தின் வல்லமைகளை குறித்தும், கிறிஸ்தவ விசுவாசிகளாகிய நமக்கிருக்கும் பாதுகாப்பை குறித்தும் கற்றுக்கொள்ளுவோம்.



## இந்த பாடத்தில் நீங்கள் படிப்பது.

பிசாசும் அசுத்த ஆவிகளும்.
தேவ தூதர்கள்.

## இந்த பாடம் உங்களுக்கு செய்யும் உதவி

* பிசாசு யார் என்றும் அவனுடைய முடிவு என்னவென்றும் விளக்குதல்.
* நல்ல, தீய தூதர்களுக்கிடையே உள்ள வித்தியாசத்தை அறிந்து கொள்ளுதல்.
* நல்ல தூதர்களால் விசுவாசிகளுக்கு உண்டாகும் நன்மைகளை மனதில் கொள்ளுதல்.

### பிசாசும் அசுத்த ஆவிகளும்

நோக்கம் 1. *பிசாசு யார் என்றும் அவனுடைய அசுத்த ஆவிகளின் முடிவு என்னவென்றும் விவரித்தல்.*

தேவனை காட்டிலும் தன்னை பெரியவனுக்க முயன்றதி னல் பரலோகத்தினின்று கீழே தள்ளப்பட்டவன் தான் இந்த துன்மார்க்கனுன பிசாசு. ஏசாயா 14:14–15ல். நான் மேகங்களுக்கு மேலாக உன்னதங்களில் ஏறுவேன்; உன்னத மானவருக்கு ஒப்பாவேன் என்றும் நீ உன் இருதயத்தில் சொன்னுயே. ஆனுலும் நீ அகாதமான பாதாளத்திலே தள்ளுண்டுபோனுய்.

அவனை பின் பற்றின கெட்ட தூதர்களுடைய நிலையும் அங்கனமே ஆயிற்று. பாவஞ் செய்த தூதர்களை தேவன் தப்பவிடாமல், அந்தகார சங்கலிகளினுலே கட்டி நரகத்திலே தள்ளி நியாயத்தீர்ப்புக்கு வைக்கப் பட்டவர்களாக ஒப்புக் கொடுத்தார். (2 பேதுரு 2:4). இயேசு சொன்னுர். ''சாத் தான் மின்னலைப் போல வானத்திலிருந்து விழுகிறதைக் கண்டேன்''. (லூக்கா 10:18)

சாத்தானுனவன் (சில நேரங்களில் லூசிப்பர் அல்லது பிசாசு எனப்படுபவன்) மனிதர்கள் தேவனை பின்பற்றுவதிலி ருந்து அவர்களை திருப்பப் பார்ப்பான். 1 பேதுரு 5:8 நம்மை எச்சரிப்பது, ''தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருங்கள், விழித் திருங்கள்'' ஏனெனில் உங்கள் எதிராளியாகிய பிசாசான வன் கெர்ச்சிக்கிற சிங்கம் போல எவனை விழுங்கலாமோ என்று வகைத் தேடி சுற்றித்திரிகிருன்.

சாத்தானிடமிருந்து சோதனைகள் அல்லது ஆபத்தான சூழ்நிலைகளை நீங்கள் சந்திக்கநேரிடுகையில் சோர்ந்துபோகா மல் தைரியமாய் அவனுக்கு எதிர்த்து நில்லுங்கள். யாக் கோபு 4:7–ல் ''பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள். அப்பொ ழுது அவன் உங்களை விட்டு ஓடிப்போவான்.'' பிசாசை எதிர்த்து நிற்க கூடிய ஒரு விதமாவது சத்தமுயர்த்தி சொல் லுவதாகும். நீங்கள் இவ்வண்ணம் சொல்லலாம்; ''நான் பிசாசை எதிர்க்கிறேன். நான் தேவனுடைய பிள்ளையாக

இருப்பதினால் அவனுக்கு என் மேல் அதிகாரமில்லை. பிசாசையும் அவனது சகல தீய தூதர்களையும் மேற்கொண்ட இயேசுவின் இரத்த கோட்டைக்குள்ளே நான் மறைக்கப் பட்டிருக்கிறேன்''

''நமது சகோதரர்கள் ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினாலும் தங்கள் சாட்சியின் வசனத்தினாலும் அவனை ஜெயித்தார்கள்''. (வெளிப்படுத்தல் 12:11)

நீ ஒரு தேவப்பிள்ளையாக இருப்பின் எதை குறித்தும் பயப்பட வேண்டிதில்லை, ஏனெனில் உன்னை காக்கும்படியாக அவர் தமது தூதர்களுக்கு கட்டளையிடுவார். இதை குறித்து அடுத்த அதிகாரத்தில் இன்னுமதிகமாய் கற்றுக் கொள்ளுவோம்.

## நீங்கள் செயயய வேண்டியது

1. சரியான சொற்றொடருக்கு முன் காணப்படும் எழுத்தை சுற்றி வட்டமிடவும்.
   - a. சாத்தான் கெர்ச்சிக்கிற சிங்கம் போல கிறிஸ்தவ விசுவாசிகளை விழுங்கப் பார்க்கிறான்.
   - b. அசுத்த ஆவிகள் என்பது ஜனங்களுடைய அறியாமையினால் நினைக்கிற சில காரியங்களாகும்.
   - c. சாத்தானையும் அவனுடைய ஆவிகளையும் இயேசுவானவர் தமது சிலுவை மரணத்தால் மேற்க் கொண்டார்.
   - d, ஒரு விசுவாசி பிசாசுக்கு எதிர்த்து நிற்பானானால், அது அவனை ஒன்றும் செய்யாது.

2. வெளிப்படுத்துதல் 12:11-ன் படி நமது சகோதரர்கள் எங்கனம் பிசாசை ஜெயித்தார்கள் ?..................................
..........................................................................................

## தூதர்கள்

நோக்கம் 2. தூதர்களின் 3 விதமான செயல்களை சுட்டிக் காட்டுதல்.

தேவ தூதர் யார்? ''இரட்சிப்பை சுதந்தரிக்கப் போகிறவர்களினிமித்தமாக ஊழியஞ்செய்யும் படிக்கு அவர்களெல்லாரும் அனுப்பப்படும் பணிவிடை ஆவிகளாயிருக்கிறார்களல்லவா?

தற்காக்கும் தூதர்களை பற்றி கேள்விப்பட்டிருக்கிறீர்களா? அவர்கள் உண்மையானவர்கள். வேதம் சொல்லுகிறது, ''கர்த்தருடைய தூதன் அவருக்கு பயந்தவர்களை சூழப்பாளயமிறங்கி அவர்களை விடுவிக்கிறார். (சங்கீதம் 34:7)

தூதர்களுக்கு பல வேலைகள் உண்டு. முதலாவதாக தங்கள் சிருஷ்டிகராகிய தேவனுக்கு ஊழியஞ் செய்யுதல். துதர்கள் சதாகாலமும் தேவனை ஆராதித்து கொண்டிருப்பர். நெகேமியா 9:6-ன் படி ''வான சேனைகள் உம்மைப்பணிந்து கொள்ளுகிறது.'' அவைகள் தங்கள் சுயமாய் செயல்படாமல் கிறிஸ்துவின் அதிகாரத்துக்கு அடங்கி செயல்படுகின்றன. 1 பேதுரு 3:22 சொல்லுவது ''இயேசுவானவர் பரலோகத்திற்கு போய் தேவனுடைய வலது பாரிசத்தில் இருக்கிறார்; தேவ துதர்களும் அதிகாரங்களும் வல்லமைகளும் அவருக்குக் கீழ்ப்பட்டிருக்கிறது''

இயேசு இப்பூமியிலிருக்கையில் தூதர்கள் அவருக்கு பணிவிடை செய்தனர். லூக்கா 4:11-ல் இயேசு சோதிக்கப்படுகையில் தூதர்கள் அவருக்கு உதவிச் செய்ததாக காண்கிறோம், இயேசுவானவர் மனம் நொறுங்கினவராய் கெத்சமனே தோட்டத்தில் ஜெபிக்கையில் துதர்கள் அவருக்கு பணிவிடைச் செய்தனர்.

இந்த தூதர்கள் நமக்கும் உதவிச் செய்வதாக வேதம் கூறுகிறது. ஒருவேளை நாம் அவர்களை நமது மாம்சீக கண்ணினால் காணவிட்டாலும் அவர்கள் நம்மை எல்லா தீங்குக்கும் விலக்கி பாதுகாக்கின்றனர். நமக்கு நேரிடக் கூடிய விபத்துகளிலிருந்து அவர்கள் நம்மை தற்காக் கின்றனர்.

1 இராஜாக்கள் 19:5–ல் எலியாவை போஷக்கும் படியாக அவனுக்கு ஓர் தூதன் ஆகாரத்தை கொண்டு வந் தான் என காண்கிறோம். அப்போஸ்தலனாகிய பேதுரு சுவிசேஷத்தினிமித்தம் அடிக்கப்பட்டு சிறைச் சாலையில் இருக்கையில் தூதன் அவனை விடுவித்ததாக காண்கிறோம். (அப்போஸ்தவர் 12:7)

தூதர்களை நமது கண்களால் கண்டாலும், காணவிட் டாலும், அவர்களை நமது பணிவிடைக்காக தேவன் அனுப்பி யுள்ளார் என நாம் அறிகிறோம். தேவன் சொல்லுகிற வண்ணமாய் அவர்கள் செய்கிறார்கள் என்பது எத்தனை அருமையானது.

தெய்வீக அதிகாரமின்றி அவர்கள் ஒன்றுமே செய்வ தில்லை என்று நாம் கற்றோம். மேலும் துதியை அவர்கள் ஏற்றுக் கொள்ளுவதுமில்லை. பிரியமான யோவான் தூதன் கொடுத்த செய்தியை கேட்டு வியப்படைந்து அவனை வணங் கும்படி அவனுடைய பாதத்தில் விழுந்தான். ஆனால் துதன் அவனை தடுத்து. ''இப்படிச் செய்யாத படிக்குப் பார் உன்னோடும் இயேசுவை குறித்துச் சாட்சியிட்ட உன் சகோத ரரோடுங் கூட நானும் ஒரு ஊழியக்காரன். தேவனைத் தொழுதுக்கொள். (வெளிப்படுத்தல் 19:10)

நீங்களும் தூதர்களை வணங்கவேண்டியதில்லை. ஆனால் அவர்கள் களிகூர கூடிய வழி வகுக்கலாம். நீங்கள் உங்கள் வாழ்க்கையை இயேசுவிடத்தில் ஒப்படைத்திருந்தால் அதுவே அவர்களை களிகூரச் செய்யும். இயேசு சொன்னார், ''மனந்திரும்புகிற ஒரே பாவியினிமித்தம் தேவனுடைய தூதருக்கு முன்பாக சந்தோஷமுண்டாயிருக்கிறது. (லூக்கா 15:10) ஒரு தேவனுடைய பிள்ளை என்னும் நிலையில் தொடர்ந்து அவர்கள் உங்களுக்கு உதவிச் செய்வர். உன் வழிகளிலெல்லாம் உன்னைக் காக்கும் படி உனக்காக தம்முடைய தூதர்களுக்குக் கட்டளையிடுவார். (சங்கீதம் 91:11)

## நீங்கள் செய்ய வேண்டியது

3. சரியான சொற்றொடருக்கு முன் காணப்படும் எழுத்தை சுற்றி வட்டமிடவும். தூதர்கள்

   a) வணங்கப்பட வேண்டியவர்கள்.

   b) தேவனுடைய அதிகாரமின்றி பேசவும் கிரியைச் செய்யவும் கூடியவர்கள்.

   c) தேவனுடைய பணிவிடைக்காரராயிருந்து அவருடைய பிள்ளைகளுக்கு உதவிச் செய்கிறவர்கள்.

## பாடம் 10

# வருங்காலம்

எல்லாரும் தங்கள் வருங்காலத்தை குறித்து கரிசனை யுடையவர்களாயிருக்கின்றனர். என்ன நடக்க போகிறது என்னும் காரியங்கள் அடங்கிய அநேக புத்தகங்களை நாம் காணலாம். தேசத்திற்கு என்ன நிகழ போகிறது என்னும் கேள்விகளை விஞ்ஞானிகளிடத்திலும், அரசியல் தலைவர்களி டமும் கேட்கின்றனர்.

இன்னும் அநேகர் தங்கள் வருங்காலத்தை குறித்து அறிய ஜோசியர்களிடமும், மந்திரவாதிகளிடமும், கைரேகை பார்க்கிறவர்களிடமும் செல்லுகின்றனர். ஒரு நாள் ஓர் ஸ்திரீயானவள் என்னிடம் வந்து நான் உங்கள் கை ரேகை பார்த்து உங்கள் வருங்காலத்தை குறித்து சொல்லட் டுமா என்றாள். அவ்வமயம் எனது பதில் அவளை திடுக்கிடச் செய்தது. யாதெனில் என்னிடம் ஓர் சிறு புத்தகம் உண்டு. அதனுள் எனது வருங்காலமும் உனது வருங்காலமும் குறிக் கப்பட்டுள்ளது என்று சொல்லி ஒரு புதிய ஏற்பாட்டை அவ ளுக்கு கொடுத்தேன்.

வேதாகமம் மட்டுமே நமது வருங்காலத்தை குறித்து நிச்சயிக்கும் புத்தகமாகும். தமது வசனங்களின் மூலம் நமக்கு தேவையான ஆலோசனைகளை தேவன் தருகிறார். அதற்காக நாம் எந்த விதமான ஜோசியர்களிடமோ, மந்தி ரவாதிகளிடமோ செல்ல வேண்டியதில்லை. இவைகள் தேவ னால் அங்கீகரிக்க பட்ட முறைகளுமல்ல.

இயேசு வரும்போது என்ன சம்பவிக்கும் என நீ அறிந்து கொள்ள விரும்புவாயானால் இந்தப் பாடம் உன்னை உற்சாக

படுத்தும். வருங்கால நியாய தீர்ப்பை குறித்தும் ஆண்டவருடைய வருகையை குறித்தும் நாம் கற்று கொள்ளுவோம். நாம் கடந்த பாடத்தில் படித்த துதர்களும் கூட இயேசுவின் வருகை எப்பொழுது சம்பவிக்கும் என அறிய காத்திருக்கின்றனர். நமது வருங்காலத்தை குறித்து வேதம் என்ன சொல்லுகிறது என்று பார்ப்போம்.

## இந்த பாடத்தில் நீங்கள் படிப்பது

விசுவாசிகளின் எடுத்து கொள்ளப்படுதல்.

பூமியில் இயேசுவின் ஆளுகை

அவிசுவாசிகளின் நியாயதீர்ப்பு

## இந்த பாடம் உங்களுக்கு செய்யும் உதவி

* எப்பொழுது, யார் எடுத்துக் கொள்ளப்படுவர்
* ஆயிரமாண்டு அரசாட்சி, வெள்ளை சிங்காசன நியாயத் தீர்ப்பு இவைகளை ஆராய்ந்தறிதல்.
* கிறிஸ்துவோடுள்ள நித்தியத்திற்காய் வாஞ்சையோடு காத்திருக்க.

## விசுவாசிகளின் எடுத்து கொள்ளப்படுதல்.

**நோக்கம் 1.** எடுத்து கொள்ளபடுதலுக்கு முன் சம்பவிக்க வேண்டியவைகளை விளக்குதல்.

பாடம் ஐந்தில் எடுத்து கொள்ள படுதல் என்றால் என்னவென்று கற்று கொண்டோம். அதன் பொருள் வருங்காலத்தில் நிகழ இருக்கும் இயேசுவின் வருகையும், சபை அவரை மத்திய வானத்தில் சந்தித்தலுமாகும். இச்சம்பவம் எப்பொழுது சம்பவிக்கும் என பிதா அன்றி யாருமே அறியார்கள்.

அந்த நாளையும் அந்த நாழிகையையும் என் பிதா ஒருவர் தவிர மற்றொருவனும் அறியான்; பரலோகத்திலுள்ள தூதர்களும் அறியார்கள். (மத்தேயு 24:36)

ஆனால் இச்சம்பவம் வெகு சீக்கிரமாய் நிகழ போகிறது என சம்பவங்களெல்லாம் அறைகூவுகிறது. இயேசு சொன்னார், தமது வருகைக்கு சற்று முன் உலகத்துக்குரிய காரியங்களும், அக்கிரமமும், கொள்ளையும் அதிகாரிக்கும். கள்ள கிறிஸ்துக்களும், கள்ள தீர்க்கதரிசிகளும் எழும்புவர். யுத்தங்களும், யுத்தங்களின் செய்திகளையும் கேட்கலாம். மத்தேயு 24-லும் லூக்கா 21-லும் சொல்லப்பட்ட இச்செய்திகள் இன்று சம்பவித்து கொண்டிருக்கின்றன.

ஆயினும் எல்லாம் எதிர்மாறாக காணப்படாது. இச்சம்பவங்களின் மத்தியலேயும் அநேகர் தேவனை தேடி அவரை கண்டடைவர். யோவேல் 2:28–29 வசனங்கள் அதை நமக்கு விவரிக்கிறது.

அதற்கு பின்பு நான் மாம்சமான யாவர் மேலும் என் ஆவியை ஊற்றுவேன்; அப்பொழுது உங்கள் குமாரரும் குமாரத்திகளும் தீர்க்கதரிசனம் சொல்லுவார்கள். உங்கள் மூப்பர் சொப்பனங்களையும், உங்கள் வாலிபர் தரிசனங்களையும் காண்பார்கள், ஊழியக்காரர் மேலும் ஊழியக்காரிகள் மேலும், அந்நாட்களிலே என் ஆவியை ஊற்றுவேன்.

கிறிஸ்தவர்கள் தங்கள் எடுத்துக் கொள்ளப்படும் நாளுக்காய் மகிழ்ச்சியுடன் காத்திருக்கின்றனர். மரித்தவர்கள் உயிர்த்தெழுந்து, பின்பு உயிரோடிருக்கிறவர்கள் மறுரூபமடைவர். கர்த்தரை சந்திக்க அவர்கள் எடுத்து கொள்ளப்படுவர்.

இதோ, ஒரு இரகசியத்தை உங்களுக்கு அறிவிக்கிறேன்; நாமெல்லாரும் நித்திரையடைவதில்லை; ஆகிலும்

கடைசி எக்காளம் தொனிக்கும்போது, ஒரு நிமிஷத்திலே ஒரு இமைப்பொழுதிலே, நாமெல்லாரும் மறுரூபமாக்கப் படுவோம். எக்காளம் தொனிக்கும்போது மரித்தோர் அழி வில்லாதவர்களாய் எழுந்திருப்பர்; நாமும் மறுரூபமாக்கப் படுவோம். அழிவுள்ளதாகிய இது அழியாமையையும், சாவுக்கேதுவாகிய இது சாவாமையையும் தரித்துக்கொள்ள வேண்டும். (I கொரிந்தியர் 15:51-53)

எடுத்துக் கொள்ளப் பட்ட பின்பு கிறிஸ்தவர்கள், தாங் கள் எவ்விதம் கிறிஸ்துவிடத்தில் உண்மையுள்ளவர்களாயி ருந்தார்களோ, அவ்விதம் நியாயந்தீர்க்கப்படுவர். அதன் பி ற கு ஆட்டுக்குட்டியானவரின் கலியாணத்திற்கென, சபையை மணவாட்டியாக கிறிஸ்து ஏற்றுக் கொள்ளுவார்.

ஏனென்ருல், சரீரத்தில் அவனவன் செய்த நன்மைக்கா வது தீமைக்காவது தக்க பலனை அடையும்படிக்கு, நாமெல் லாரும் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக வெளிப் பட வேண்டும். (II கொரிந்தியர் 5:10)

நமது பாவங்களை இயேசுவானவர் தமது இரத்தத்தால் மூடி மறைத்தபடியால் அவைகளை குறித்து நாம் கணக்கு ஒப்புவிக்க வேண்டியதில்லை. ஆனல் நமது உண்மைக்கு தக்க வாறு நாம் பலனை அடைவோம். பிரச்சனைகள் நமக்கு எதி ராக வரும்போது அவைகளை எனது ஆண்டவர் அறிகிருர் என நாம் ஞாபகப்படுத்தி கொள்ளுவது நல்லது.

நாம் சந்தோஷப்பட்டு களிகூர்ந்து அ வ ரு க் கு துதி செலுத்தக் கடவோம். ஆட்டுக்குட்டியானவருடைய கலி யாணம் வந்தது. அவருடைய மனைவி தன்னை ஆயத்தம் பண்ணினுள் என்று சொல்லக் கேட்டேன். சுத்தமும் பிரகா சமுமான மெல்லிய வஸ்திரம் தரித்துக் கொள்ளும்படி அவ ளுக்கு அளிக்கப்பட்டது; அந்த மெல்லிய வஸ்திரம் பரிசுத்த வான்களுடைய நீதிகளே. (வெளிப்படுத்தல் 19:7–8)

## நீங்கள் செய்ய வேண்டியது

1. உலகத்தில் காணப்படும் எந்த சம்பவம் உங்களுக்கு கர்த்தருடைய வருகை அதிசீக்கிரம் என உற்சாகப் படுத்துகிறது.

........................ — ............................ — ........................ ......................

..........................................................................................................

## பூமியில் இயேசுவின் ஆளுகை

நோக்கம் 2. ''ஆயிரமாண்டு வாழ்க்கை'' என கிறிஸ்தவ வார்த்தை விவரிக்கும் சம்பவங்களை புரிந்து கொள்ளுதல்.

கர்த்தர் தாமே ஆயிரமாண்டு ஆட்சி செய்யும்படியாக தமது ஜனங்களுடனே கூட இப்பூமிக்கு இறங்கி வருவார். இந்த காலத்திற்கு ''ஆயிரமாண்டு வாழ்க்கை'' எனப்படும்.

இக்காலத்தில் மிகுதியான மகிழ்ச்சியும் சமாதானமும் காணப்படும் என்று வேதம் கூறுகிறது. யூதாவின் புத்தகத்தில் 15ம் வசனம் இவ்வாறு கூறுகிறது. ''ஆயிரமாயிரமான பரிசுத்தவான்களோடு கர்த்தர் வருகிறார்''.

முதலாம் உயிர்த்தெழுதலுக்கு பங்குள்ளவன் பாக்கியவானும் பரிசுத்தவானுமாயிருக்கிறான்; இவர்கள் மேல் இரண்டாம் மரணத்திற்கு அதிகாரமில்லை; இவர்கள் தேவனுக்கும் கிறிஸ்துவுக்கும் முன்பாக ஆசாரியராயிருந்து, அவரோடே கூட ஆயிரம் வருஷம் அரசாளுவார்கள்.

(வெளிப்படுத்தல் 20:6)

அப்பொழுது ஓனாய் ஆட்டிக்குட்டியோடே தங்கும், புலி வெள்ளாட்டுக் குட்டியோடே படுத்துக்கொள்ளும், கன்றுக்

குட்டியும், பாலசிங்கமும், காளையும் ஒருமித்திருக்கும்; ஒரு சிறு பையன் அவைகளை நடத்துவான். (ஏசாயா 11·6)

## நீங்கள் செய்ய வேண்டியது

2. சரியான சொற்றொடருக்கு முன் காணப்படும் எழுத்தை சுற்றி வட்டமிடவும்.

வேதாகமத்தில் ஆயிரமாண்டு வாழ்க்கை எனப்படுவது

a) பூமியில் கர்த்தருடைய ஆளுகை.

b) மகிழ்ச்சியின், சமாதானத்தின் காலம்.

c) எல்லா விசுவாசிகளும் கர்த்தருடனே ஆளுகை செய்யும் காலம்.

## அவிசுவாசிகளின் நியாயத்தீர்ப்பு

நோக்கம் 3. *பெரிய வெள்ளை சிங்காசன நியாயத்தீர்ப்பை விவரித்தல்.*

இயேசுவின் ஆயிரமாண்டு ஆளுகைக்குபின் மரித்து போன பாவிகள் நியாயத்தீர்ப்புக்காக தேவசமுகத்தில் நிற்கும்படியாக உயிர்த்தெழுவர். அதன் பின்பு பிசாசும், அவனது தூதர்களும், அக்கிரமக்காரர் ஏகமாய் நரகத்திற்குள் தள்ளப்படுவர். இந்த நியாயத்தீர்ப்பை வெள்ளை சிங்காசன நியாயத்தீர்ப்பு என அழைக்கிறோம். வெளிப்படுத்தல் 20-ம் அதிகாரம், பல வசனங்களில் இப்பெயரின் காரணத்தை காண்கிறோம்.

பின்பு நான் பெரிய வெள்ளை சிங்காசனத்தையும் அதின் மேல் வீற்றிருக்கிறவரையும் கண்டேன்; அவருடைய சமூகத்திலிருந்து பூமியும் வானமும் அகன்று போயின; அவைகளுக்கு இடங்காணப் படவில்லை. மரித்தோராகிய சிறியோரையும் பெரியோரையும் தேவனுக்கு முன்பாக நிற்கக்

கண்டேன். அப்பொழுது புஸ்தகங்கள் திறக்கப்பட்டது; அப்பொழுது அந்த புஸ்தகங்களில் எழுதப் பட்டவைகளின் படியே மரித்தோர் தங்கள் தங்கள் கிரியைகளுக்கு தக்கதாக நியாயத்தீர்ப்படைந்தார்கள். சமுத்திரம் தன்னிலுள்ள மரித்தோரை ஒப்புவித்தது; மரணமும் பாதாளமும் தங்களிலுள்ள மரித்தோரை ஒப்புவித்தன. யாவரும் தங்கள் தங்கள் கிரியைகளின் படியே நியாயத்தீர்ப்படைந்தார்கள். அப்பொழுது மரணமும் பாதாளமும் அக்கினிக் கடலிலே தள்ளப்பட்டன. இது இரண்டாம் மரணம். ஜீவ புஸ்தகத்திலே எழுதப்பட்டவனாகக் காணப்படாதவனெவனோ அவன் அக்கினிக் கடலிலே தள்ளப்பட்டான். (வெளிப்படுத்தல் 20: 11-15)

இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கிறவர்களுடைய பெயர்கள் மட்டுமே ஜீவ புஸ்தகத்தில் காணப்படும். அவர்கள் எதை குறித்தும் பயப்பட வேண்டியதில்லை, ஏனெனில் அவர்கள் கிறிஸ்துவுடனே கூட என்றென்றும் ஆட்சி செய்வர். வெளிப்படுத்தல் 21:2–3-ல் யோவான் கண்ட தரிசனத்தை வாசிக்கிறோம். யோவானாகிய நான், புதிய எருசலேமாகிய பரிசுத்த நகரத்தைத் தேவனிடத்திநின்று பரலோகத்தை விட்டு இறங்கி வரக் கண்டேன்; அது தன் புருஷனுக்காக அலங்கரிக்கப்பட்ட மணவாட்டியை போல ஆயத்தமாக்கப்பட்டிருந்தது. மேலும், பரலோகத்திலிருந்து உண்டான பெருஞ்சத்தத்தை கேட்டேன்; அது: இதோ மனுஷர்களிடத்திலே தேவனுடைய வாசஸ்தலமிருக்கிறது, அவர்களிடத்திலே அவர் வாசமாயிருப்பார். அவர்களும் அவருடைய ஜனங்களாயிருப்பார்கள். தேவன் தாமே அவர்களோடே கூட இருந்து அவர்களுடைய தேவனாயிருப்பார்.

பெரிய வெள்ளை சிங்காசன நியாயத்தீர்ப்புக்கு பின் தேவனுடைய ஜனங்கள் அவருடனே கூட வாசம் செய்வர்.

அவர்களுக்காக அவர் ஒரு புதிய வானத்தையும் பூமியையும் உண்டாக்குவார்.

## நீங்கள் செய்ய வேண்டியது

3. அவிசுவாசிகள் எவ்விதம் நியாயத் தீர்ப்படைந்தனர்.

..........................................................................................................

4. இச்சொற்றொடரை பூர்த்தி செய்யவும். தேவனோடு கூடிய நித்திய வாசமெனப்படுவது.

   a) கடந்த கால பாவ வாழ்க்கையை நினைத்து வருந்தி மனந்திரும்பும் காலமாகும்.

   b) சந்தோஷமாய் தேவனோடு கூட என்றென்றும் வாழ்க்கை நடத்துவதாகும்.

பாடம் 11

# தேவனுடைய நியாயப் பிரமாணம்

என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்க வேண்டாம்.
யாதொரு விக்கிரகத்தையாகிலும் நீ உனக்கு உண்டாக்க வேண்டாம்.
உன் தேவனாகிய கர்த்தருடைய நாமத்தை வீணிலே வழங்காதிருப்பாயாக.
ஓய்வு நாளை பரிசுத்தமாய் ஆசரிக்க நினைப்பாயாக.
உன் தகப்பனையும் தாயையும் கனம் பண்ணுவாயாக.
கொலை செய்யாதிருப்பாயாக.
விபசாரம் செய்யாதிருப்பாயாக.
களவு செய்யாதிருப்பாயாக.
பிறனுக்கு விரோதமாய் பொய்ச் சாட்சி சொல்லாதிருப்பாயாக.
பிறனுக்குள்ள யாதொன்றையும் இச்சியாதிருப்பாயாக.



பாடம் 10-ல் நமது வருங்காலத்தில் நாம் என்ன செய்வோம் என்று படித்தோம்; ஆனால் இந்த பாடத்தில் நாம் இப்பொழுது என்ன செய்ய வேண்டும் என படிப்போம். தேவன் தமது ஜனங்களுக்காக பத்துக் கட்டளைகளை கற்பலகையின் மேல் எழுதி தலைவனாகிய மோசேயினிடத்தில் ஒப்புவித்தார். அவைகள் ஒரு வேளை பழயவைகளாய் காணப்பட்டப் போதிலும் இன்றும் உபயோகிக்க கூடியவை.

## இந்த பாடத்தில் நீங்கள் படிப்பது

நியாயப் பிரமாணத்தின் பொருளும் அதன் குறிக்கோளும்.

நியாயப் பிரமாணத்திற்கு கீழ்ப்படிதல்.

## இந்த பாடம் உங்களுக்கு செய்யும் உதவி

* பத்து கட்டளைகளையும் விளங்கி கொள்ளுதல்.
* தேவன் நியாயப் பிரமாணத்தை அளித்ததின் காரணத்தை விளங்கி கொள்ளுதல்.
* அவருடைய நியாயப் பிரமாணத்திற்கு கீழ்ப்படியும் உனது கடமையை ஏற்றுக் கொள்ளுதல்.

## நியாயப் பிரமாணத்தின் பொருளும் அதன் குறிக்கோளும்

நோக்கம் 1. பத்துக் கட்டளைகளை ஒவ்வொன்றாய் குறிப்பிடுதல்.

கர்த்தர் மோசேயை நோக்கி: முந்தின கற்பலகைகளுக்கு ஒத்த இரண்டு கற்பலகைகளை இழைத்துக் கொள்; நீ உடைத்துப்போட்ட முந்தின பலகைகளில் இருந்த வார்த்தைகளை அவைகளில் எழுதுவேன். (யாத்திராகமம் 34:1)

யாத்திராகமம் 20-ம் அதிகாரத்தில் காணப்படும் பத்துக் கட்டளைகள் நமக்காக எழுதப்பட்டவை. தமது ஜனங்கள் பின்பற்றும் படியாக அவைகளை அவர் கொடுத்தார். ஒவ்வொன்றையும் தனித்தனியாய் பார்ப்போமாக.

*என்னையன்றி வேறே தேவர்கள் உனக்கு உண்டாயிருக்க வேண்டாம்.*

2-ம் பாடத்தில் நாம் படித்த வண்ணம் நமது வாழ்க்கையில் தேவனுக்கு முதல் இடத்தை கொடுக்க நாம் கடமைப் பட்டுள்ளோம். இதே கட்டளை மத்தேயு 4:10-ல் நாம் காணலாம். "உன் தேவனாகிய கர்த்தரை பணிந்து கொண்டு அவர் ஒருவருக்கே ஆராதனை செய்வாயாக."

*யாதொரு விக்கிரகத்தையாகிலும் நீ உண்டாக்க வேண்டாம்.*

நமது கடமை தேவனை சேவிப்பதே—இரண்டு மனதுடனே இதை செய்ய இயலாது. இயேசு சொன்னார், எந்த ஊழியக் காரனும் இரண்டு எஜமான்களுக்கு ஊழியம் செய்யக் கூடாது; ஒருவனை பகைத்து மற்றவனை சிநேகிப்பான், நாம் தேவனிடம் உண்மையுள்ளவர்களாயிருந்து, அவரை நம் முழு மனதுடன் நேசிக்க வேண்டும்.

*உன் தேவனாகிய கர்த்தருடைய நாமத்தை வீணிலே வழங்காதிருப்பாயாக.*

அநேகர் சாபத்தீடான வார்த்தைகளைச் சொல்லி, தேவனுடைய நாமத்தை வீணாய் உபயோகித்து இக்கட்டளையை முறிக்கின்றனர். எல்லா நாமத்திற்கும் மேலான நாமமாகிய இயேசுவின் நாமத்திற்கு நாம், கனம் மகிமை புகழ் செலுத்த வேண்டும்.

கெட்ட வார்த்தை ஒன்றும் உங்கள் வாயிலிருந்து புறப்பட வேண்டாம்; பக்திவிருத்திக்கு ஏதுவான நல்ல வார்த்தை உண்டானால் அதையே கேட்கிறவர்களுக்கு பிரயோஜனம் உண்டாகும்படி பேசுங்கள். (எபேசியர் 4:29)

*ஓய்வு நாளை பரிசுத்தமாய் ஆசரிக்க நினைப்பாயாக.*

புதியஏற்பாட்டில் குறிப்பிடப்படாத ஒரே ஒரு கட்டளை இதுவே. அநேகமாக கிறிஸ்தவர்கள் எபிரேய ஓய்வு நாளை ஆசரிப்பதில்லை. அதற்கு பதிலாக இயேசு உயிர்த்தெழுந்த தினமாகிய வாரத்தின் முதல் நாளாகிய ஞாயிற்றுகிழமையை ஆராதனை தினமாக ஆசரிக்கின்றனர். காத்தருடைய நாளாகிய அந்த நாள் நமக்கு உயிர்த்தெழுதலை ஞாபகப் படுத்துகிறது! நாம் ஒரு நாளை ஆராதனைக்கென ஒதுக்கி வைப்பது மிக முக்கியமானதாகும். ஆனால் எந்த நாள் என் பதல்ல முக்கியம். கொலோசேயர் 2:16-ல் ''ஆகையால், போஜனத்தையும் பானத்தையும் குறித்தாவது, பண்டிகை நாளையும் மாத பிறப்பையும் ஓய்வு நாளையுங்குறித்தாவது, ஒருவனும் உங்களை குற்றப்படுத்தாதிருப்பானாக'' என காண் கிறோம்.

அன்றியும், ஒருவன் ஒரு நாளை மற்றொரு நாளிலும் விசேஷமாக எண்ணுகிறான், வேறொருவன் எல்லா நாட்களையும் சரியாக எண்ணுகிறான்; அவனவன் தன் மனதிலே முழு நிச்சயத்தை உடையவனாயிருக்கக் கடவன். (ரோமர் 14:5)

*உன் தகப்பனையும் தாயையும் கனம் பண்ணுவாயாக.*

யாத்திராகமம் 20:12 கீழ்படிகிற பிள்ளைகளுக்கென ஓர் விசேஷ வாக்குத்தத்தத்தை அளித்துள்ளது. ''உன் தேவனாகிய காத்தர் உனக்கு கொடுக்கிற தேசத்திலே உன் நாட்கள் நீடித்திருப்பதற்கு, உன் தகப்பனையும் உன் தாயையும்

கனம் பண்ணுவாயாக''. புதிய ஏற்பாடு மறுபடியும் இதே கட்டளையை வலியுறுத்தியுள்ளது.

பிள்ளைகளே, உங்கள் பெற்றோருக்கு கர்த்தருக்குள் கீழ்ப்படியுங்கள், இது நியாயம். (எபேசியர் 6:1)

*கொலை செய்யாதிருப்பாயாக*

ஆபேலை [கொன்ற முதல் கொலையாளி காயீன், தன் செயலை யாரும் காணவில்லை என நினைத்திருக்கலாம். ஆனால் தேவன் அவனை கண்டார். அவர் காயீனிடம், ''என்ன செய்தாய்? உன் சகோதரனுடைய இரத்தத்தின் சத்தம் பூமியிலிருந்து என்னை நோக்கிக் கூப்பிடுகிறது'' (ஆதியாகமம் 4:10) கொலையை தொடர்ந்து, கொலை செய்தவருடைய குடும்பமும் நண்பர்களும் கொலை செய்யப்பட்டவருடைய குடும்பமும் நண்பர்களும் பாதிக்கப் படுகின்றனர். மட்டுமன்றி, மனிதன் தேவ சாயலிலே உண்டாக்கப்பட்ட படியினால் அவனை சிருஷ்டித்த தேவ னுக்கும் விரோதமான செயலாகும்.

*விபசாரம் செய்யாதிருப்பாயாக.*

விபசாரம் என்பது திருமண உறவை முறித்து, தனக்கு நியமிக்க படாத ஒருவரோடு பால் உறவு கொள்ளுவதாகும். எபிரேயர் 13:4-ல் விவாகம் யாவருக்குள்ளும் கனமுள்ளதா யும் விவாகமஞ்சம் அசுசி படாததாயுமிருப்பதாக; வேசிக் கள் ளரையும் விபசாரக் காரரையும் தேவன் நியாயந்தீர்ப்பார்.

*களவு செய்யாதிருப்பாயாக.*

நீங்கள் உங்களுக்குரியதல்லாத ஒன்றையும் எடுத்து கொள்ளலாகாது. ஒரு வேளை நீங்கள் எடுத்து கொள்ளும் பொருளுக்குரியவர் செல்வந்தனாகவும் அல்லது அப்பொருள் அவருக்கு உபயோகமற்றதாயிருப்பினும் கூட அதை எடுக் கலாகாது.

திருடுகிறவன் இனி திருடாமல், குறைச்சலுள்ளவனுக்குக் கொடுக்கத்தக்கதாகத் தனக்கு உண்டாயிருக்கும்படி, தன் கைகளினால் நலமான வேலைச் செய்து, பிரயாசப் படக் கடவன். (எபேசியர் 4:28)

*பிறனுக்கு விரோதமாய் பொய்ச் சாட்சி சொல்லாதிருப் பாயாக.*

வார்த்தையினாலோ கிரியையினாலோ பொய் சொல்லுவ தென்பது இந்த ஒன்பதாம் கட்டளைக்குள் அடங்கியுள்ளது. ''நல்ல'' பொய் என்றோ ''தீய'' பொய் என்றோ தேவன் பார்ப்பது கிடையாது. எல்லாவிதமான பொய் சாட்சியும் தவறு. சங்கீதம் 101:7-ல் ''கபடு செய்கிறவன் என் வீட்டுக்குள் இருப்ப தில்லை; பொய் சொல்லுகிறவன் என் கண் முன் நிலைப்ப தில்லை'' என காண்கிறோம்.

*பிறனுக்குள்ள யாதொன்றையும் இச்சியாதிருப்பாயாக.*

மற்றவர்களுக்குரிய பொருள் தனக்கு வேண்டுமென தவறாய் எண்ணுதலே இச்சையாகும். லூக்கா 12:15 இவ்வாறு சொல்லுகிறது. ''பொருளாசையை குறித்து எச்சரிக்கையாயிருங்கள்; ஒருவனுக்கு எவ்வளவு திரளான ஆஸ்தி இருந்தாலும் அது அவனுக்கு ஜீவன் அல்ல எனறார்.''

நல்லது இன்னதென்றும் தீயது இன்னதென்றும் நாம் பகுத்தறியும் படியாக தேவன் இவ்விதமான கட்டளையை கொடுத்தார்.

அப்படியானால் நியாயப்பிரமாணத்தின் நோக்கமென்ன? வாக்குத்தத்தத்தை பெற்ற சந்ததி வருமளவும் அது அக்கிரமங்களினிமித்தமாகக் கூட்டப்பட்டு தேவதூதரைக் கொண்டு மத்தியஸ்தன் கையிலே கட்டளையிடப்பட்டது. இவ்விதமாக, நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப் படுவதற்கு நியாயப்பிரமாணம் நம்மைக் கிறிஸ்துவிடத்தில் வழி நடத்துகிற உபாத்தியாய் இருந்தது. (கலாத்தியர் 3:19,24)

## நீங்கள் செய்ய வேண்டியது

1. மேற்கூறப்பட்ட 10 கட்டளைகளை மனப்பாடம் செய்து அவைகளை கீழே குறிப்பிடவும்.

a. முதல் கட்டளை ..............................................................

..............................................................

b. இரண்டு ..............................................................

..............................................................

c. மூன்று ..............................................................

..............................................................

d. நான்கு ..............................................................

..............................................................

e. ஐந்து ..............................................................

..............................................................

f. ஆறு ..............................................................

..............................................................

g. ஏழு ..............................................................

..............................................................

h. எட்டு ..............................................................

..............................................................

i. ஒன்பது ..............................................................

..............................................................

j. பத்து ..............................................................

..............................................................

## நியாயப் பிரமாணத்திற்கு கீழ்படிதல்

நோக்கம் 2. *தேவனுடைய நியாயப் பிரமாணமும் ஒரு விசுவாசியின் பொறுப்பும்.*

நாம் நியாயப்பிரமாணத்தை கிரியையில் மட்டும் கடை பிடிப்பதன்றி நமது குணாதிசயங்களாகிய அன்பு, மற்றவர் களை நம்மை விட உயர்ந்தவர்களாய் எண்ணுதல் போன்ற வற்றிலும் காட்ட வேண்டும் என தேவன் நம்மை குறித்து விரும்புகிறார்.

விபசாரம் செய்யாதிருப்பாயாக, கொலை செய்யாதிருப்பா யாக, களவு செய்யாதிருப்பாயாக, பொய்ச் சாட்சி சொல் லாதிருப்பாயாக, இச்சியாதிருப்பாயாக என்கிற இந்த கற்பனைகளும், வேறே எந்த கற்பனையும், உன்னிடத்தில் நீ அன்பு கூருகிறது போல பிறனிடத்திலும் அன்பு கூருவாயாக என்கிற ஒரே வார்த்தையிலே தொகை யாய் அடங்கியிருக்கிறது. (ரோமர் 13:9)

''நாம் தேவனுடைய கற்பனைகளை கைக்கொள்வதே அவரிடத்தில் அன்பு கூருவதாம். அவருடைய கற்பனைகள் பாரமானவைகளுமல்ல (I யோவான் 5:3)

கற்பனைகளை கைக்கொள்ளுவதன் மூலம் நாம் இரட்சிக்க பட மாட்டோம் என்பது நாம் அறிந்த உண்மையே நாம் கிருபையினாலே இயேசு கிறிஸ்துவின் மேலுள்ள விசுவாசத் தைக் கொண்டு இரட்சிக்கப் படுகிறோம். எபேசியர் 2:8-9 வசனங்கள் அவ்வுண்மையை உறுதி படுத்துகிறது.

கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப் பட்டீர்கள்; இது உங்களால் உண்டானதல்ல. இது தேவ னுடைய ஈவு, ஒருவரும் பெருமை பாராட்டாதபடிக்கு இது கிரியைகளினால் உண்டானதல்ல.

ஆயினும், நாம் அவருடைய பிள்ளைகளானபடியால் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை பிரீதிபடுத்தும் படியாக அவருடைய கட்டளைகளுக்கு கீழ்ப்படிகிறோம். அவருடைய கட்டளைகளில் ஒன்றில் நாம் மீறிவிடுவோமானால், உடனே அவரிடம் மன்னிப்பு கேட்போமெனில் அவர் நம்மை நமது மீறுதலின்று சுத்திகரிப்பார்.

என் பிள்ளைகளே, நீங்கள் பாவஞ்செய்யாதபடிக்கு இவைகளை உங்களுக்கு எழுதுகிறேன்; ஒருவன் பாவஞ்செய்வானானால் நீதிபரராயிருக்கிற இயேசு கிறிஸ்து நமக்காக பிதாவினிடத்தில் பரிந்து பேசுகிறவராயிருக்கிறார். நம்முடைய பாவங்களை நிவிர்த்திச் செய்கிற கிருபாதாரபலி அவரே; நம்முடைய பாவங்களை மாத்திரமல்ல, சர்வலோகத்தின் பாவங்களையும் நிவிர்த்தி செய்கிற பலியாயிருக்கிறார். (I யோவான் 2:1-2)

நீங்கள் சில நேரங்களில் சோர்ந்து போய் கீழ்படியாத நிலமை வரை சென்றதுண்டா? உங்களுக்கு தேவையான பெலனையும், உதவியையும் இயேசு அருள வல்லவராயிருக்கிறார். உங்கள் தலை வணங்கி இப்பொழுதே அவரிடம் ஜெபிக்க விருப்புகிறீர்களா?

பரலோக பிதாவே, உம்மை நேசிக்க வேண்டிய விதம் நேசிக்காமலிருந்தமையால் என்னை மன்னியும். உமக்கு விரோதமாய் பாவஞ்செய்து, கீழ்படியாமலிருந்தமையை என்னோடு மன்னியும்.

தேவனே உம்மை நேசித்து உமது நாமத்தை உயர்த்தும்படி எனக்கு உதவிச் செய்யும். உமது வல்லமையை எனக்கு தாரும். எனக்காக தமது ஜீவனை கொடுத்த இயேசுவின் நாமத்தில் வேண்டிக் கொள்ளுகிறேன், ஆமென்.

## நீங்கள் செய்ய வேண்டியது

2. எபேசியர் 2:8,9-ன் படி நாம் எங்கனம் இரட்சிக்க படுகிறோம்?

.................................................................................................

3. சரியான விடைக்கு முன் காணப்படும் எழுத்தை சுற்றி வட்டமிடவும்.

நாம் பாவம் செய்வோமானால், இயேசுவானவர்

a. அப்பாவங்களை பிதாவினிடம் எடுத்து சொல்லி கொண்ருப்பார்.

b. பிதாவினிடம் பரிந்து பேசி கொண்டிருப்பார்.

c. நம்மை கவனிக்கவே மாட்டார்.

பாடம் 12

# தேவனோடுள்ள நமது ஐக்கியம்

கிறிஸ்தவ விசுவாசிகளாயிருக்கிற நமது முதல் கடமை தேவனை நேசிப்பதே. பாடம் 11–ல் படித்த வண்ணம் நாம் அவரை நேசிக்கிற படியால் அவருடைய கற்பனைகளை கைக் கொள்ளுகிறோம். ஆகையால் கிறிஸ்துவோடுள்ள நமது உறவு அன்பினால் உண்டாக்கப் பட்ட ஒன்றாகும்.

ஒன்று கொரிந்தியர் 13-ம் அதிகாரம் அன்பை குறித்து வருணித்திருப்பதை காணமுடியும். 4 முதல் 8 வசனங்களில் அன்பு, நீடிய பொறுமையும், தயையும் உடையதாகவும் பொருமையற்றதாகவும், பெருமையற்றதாகவும், சுய நல னற்றதாகவும் காண்கிறோம். அது தீமைகளை குறித்து ஓர் பட்டியலை வைக்கவோ அல்லது தீமையில் களிகூரவோ செய் யாமல் உண்மையைகுறித்து களிகூரும். இது உண்மையான அன்பின் இயல்பை வரைந்து காட்டுகிறது. ஆனால் இங்கன முள்ள அன்பையே ஒவ்வொரு கிறிஸ்தவ விசுவாசியும் தனது தேவனோடும், மனிதனோடு உடையவனாயிருக்க வேண்டும். இங்கனமுள்ள நிபந்தனையற்ற அன்பையே தேவன் நம்மீது காட்டினார்.

13–ம் அதிகாரத்திற்கு முன்னும், பின்னும் காணப்படும் அதி காரங்கள் தேவனுடைய வரங்களை குறித்து சொல்லுவது தற்செயல் அல்ல. அன்பை குறித்த அதிகாரம் வரங்க ளோடு இணைக்கப்பட்டுள்ளது. ஏனெனில் அன்பு எனப்படுவ தும் ஓர் வரமாகும் அன்பும் கொடுத்தலும் ஒன்றோடொன்று இணைந்திருக்கின்றன, ஏனெனில் நாம் அன்பு கூருகிறவர்க ளுக்கு அவர்களை பிரியப்படுத்துபடியாக கொடுக்கவும் செய் வோம்.

## இந்த பாடத்தில் நீங்கள் படிப்பது

தேவன் நமக்கு தரும் வரங்கள்
நாம் தேவனுக்கு கொடுக்கும் ஈவுகள்

## இந்த பாடம் உங்களுக்கு செய்யும் உதவி

* தேவன் தமது பிள்ளைகளுக்கு கொடுத்திருக்கும் பல வரங்களில் மூன்றை விவரித்தல்,
* தேவனுக்குரிய அன்பின் ஈவுகளை நாம் அவருக்கு கொடுப்பதில் உண்மையாயிருத்தல்

## தேவன் நமக்கு தரும் வரங்கள் (ஈவுகள்)

நோக்கம் 1. *தேவன் தமது பிள்ளைகளுக்கு அளிக்கும் பல வரங்களை பகுத்தறிதல்.*

நாம் தேவனை ஏற்று கொள்ள தீருமானிக்கும்போது அவர் தரும் முதல் ஈவு தான் இரட்சிப்பு எனப்படுவது.

> கிருபையினலே விசுவாசத்தை கொண்டு இரட்சிக்கப் பட்டீர்கள். இது உங்களால் உண்டானதல்ல. இது தேவனுடைய ஈவு; ஒருவரும் பெருமை பாராட்டாத படிக்கு இது கிரியைகளினல் உண்டானதல்ல. (எபேசியர் 2:8-9)

நாம் விசுவாசிகளெனில் தேவன் நமது பரலோகப் பிதாவும், நாம் அவரது பிள்ளைகளுமாயிருப்போம். மத்தேயு 5:16–ல் தேவன் இந்த விலையேறப் பெற்ற பெயரால் அழைக்கப் படுகிருர். ''மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப் படுத்தும் படி, உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாக பிரகாசிக்கக்கடவது.'' நாம் நம்மை நேசிக்கிற ஓர் தகப்பனேடு உறவாடுவது போல நமது தேவனேடும் உறவாடும் சிலாக்கியம் எத்தனை மகத்துவமானது. அவரோடு உறவாடுகையில்

அங்கனம் பேசும்படியாக இயேசு நமக்கு கற்றுதந்தார். ''பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே: உம்முடைய நாமம் பரிசுத்தப் படுவதாக.'' (மத்தேயு 6:9)

தேவன் சிருஷ்டிகராய் காணப்பட்டப் போதிலும், தம்மை ஏற்று கொண்டவர்களுக்கு மட்டுமே அவர் பிதாவாய் காணப்படுகிறூர்.

தேவனுடைய பிள்ளைகள் இன்னுரென்றும் பிசாசின் பிள்ளைகள் இன்னுரென்றும் வெளிப்படும். நீதியைச் செய்யாமலும் தன் சகோதரனில் அன்பு கூராமலும் இருக்கிற எவனும் தேவனுல் உண்டானவனல்ல. (I யோவான் 3:10)

அவரது குடும்பத்தின் அங்கத்தினராய் நீங்கள் மாற விரும்புவீர்களெனில் தமது குமாரனுகிய இயேசுகிறிஸ்துவை சொந்த இரட்சகராய் ஏற்று கொள்ள வேண்டும். அப்பொழுது ஓர் புதிய வாழ்க்கை ஆரம்பமாகும். ''அவருடைய நாமத்தின் மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்று கொண்டவர்கள் தேவனுடைய பிள்ளைகளாகும் படி அதிகாரங் கொடுத்தார்.'' (யோவான் 1:12)

அன்புள்ள எல்லா தகப்பன்மார்களும் தங்கள் பிள்ளைகளுடைய தேவைகளை சந்திப்பதில் சந்தோஷமடைவர். நமது பரலோக பிதா நமது தேவைகள் அனைத்தையும் சந்திக்கிறூர். ''என் தேவன் தம்முடைய ஐசுவரியத்தின் படி உங்கள் குறைவையெல்லாம் கிறிஸ்து இயேசுவுக்குள் மகிமையிலே நிறைவாக்குவார். (பிலிப்பியர் 4:19)

நாம் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறபடியால் தேவன் நம்மை கவனிக்கிறூர். அவர் இரவும் பகலும் நம்மை பாது காக்கிறூர். ''உன் காலை தள்ளாடவொட்டார்; உன்னை காக்கிறவர் உறங்கார்.'' (சங்கீதம் 121:3) கர்த்தருடைய

கண்கள் நீதிமான்கள் மேல் நோக்கமாயிருக்கிறது. (சங்கீதம் 34:15) தேவன் நம்மை பாதுகாக்கும் இதை போன்ற அநேக வசனங்கள் சங்கீத புத்தகத்தில் நாம் காணலாம்.

நமது பிதாவானவர் தமது வசனத்தில் நமக்காக சில காரியங்களை செய்வேன் என சொல்லியுள்ள வசனங்களை நாம் வாக்குத்தத்தங்கள் என அழைக்கிறோம். வாக்குத்தத்தங்கள் தேவன் தரும் வரங்கள் அல்லது ஈவுகளாம். அவருடைய வசனங்களை விசுவாசிப்பதாலும் அவரிடம் மன்றாடுவதாலும் அவருடைய ஆசீர்வாதங்களையும். வாக்குத்தத்தங்களையும் நாம் பெற்று கொள்ள கூடும். ''நீங்கள் என் நாமத்தினாலே எதை கேட்பீர்களோ, குமாரனில் பிதா மகிமை படும்படியாக, அதை செய்வேன்'' என இயேசுவானவர் தாமே கூறியிருப்பதை யோவான் 14:13-ல் காணலாம்.

கிறிஸ்தவர்கள் மற்றவர்களுக்கு உதவி செய்வதின் மூலமாகவும் தேவ ஆசீர்வாதத்தை பெற்று கொள்ளலாம். சங்கீதம் 41:1-ல் ''சிறுமைப்பட்டவன் மேல் சிந்தையுள்ளவன் பாக்கியவான்; தீங்கு நாளில் கர்த்தர் அவனை விடுவிப்பார்'' என காண்கிறோம்.

நாம் அவரிடத்தில் நம்பிக்கையுள்ளவர்களாய் அநேக காரியங்களை கேட்டு பெற்று கொள்ளலாம். இத்தகைய நம்பிக்கையை விசுவாசம் என அழைக்கிறோம். அவர் மேல் வைத்துள்ள நமது விசுவாசம் அவரை பிரிய படுத்தி நமக்கு இரட்சிப்பையும் மற்ற மேற் கூறிய வரங்களையும் அளிப்பது மட்டுமன்றி, சவுக்கியத்தையும் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தையும் அளிக்க செய்கிறது.

விசுவாசமில்லாமல் தேவனுக்கு பிரியமாயிருப்பது கூடாத காரியம். ஏனென்றால், தேவனிடத்தில் சேருகிறவன்

அவர் உண்டென்றும், அவர் தம்மை தேடுகிறவர்களுக்குப் பெலன் அளிக்கிறவரென்றும் விசுவாசிக்க வேண்டும். (எபிரெயர் 11:6)

விசுவாசத்தினால் சுகமாக்கப்படுகிறோம் என்று யாக்கோபு 5:15ல் காண்கிறோம். ''விசுவாசமுள்ள ஜெபம் பிணியாளியை இரட்சிக்கும்; கர்த்தர் அவனை எழுப்புவார், அவன் பாவஞ் செய்தவனானால் அது அவனுக்கு மன்னிக்கப்படும்.

பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தையும் விசுவாசத்தின் மூலம் பெற்று கொள்ளுகிறோம்.

ஆபிரகாமுக்கு உண்டான ஆசீர்வாதம் கிறிஸ்து இயேசுவினால் புறஜாதிகளுக்கு வரும்படியாகவும், ஆவியைக் குறித்து சொல்லப்பட்ட வாக்குத்தத்தத்தை நாம் விசுவாசத்தினாலே பெறும்படியாகவும் இப்படியாயிற்று. (கலாத்தியர் 3:14)

எல்லாவற்றிற்கும் மேலான ஈவை ரோமர் 6:23-ல் காண்கிறோம். ''தேவனுடைய கிருபை வரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினால் உண்டான நித்திய ஜீவன்.''

''நன்மையான எந்த ஈவும் பூரணமான எந்த வரமும் பரத்திலிருந்துண்டாகி, சோதிகளின் பிதாவினிடத்திலிருந்து இறங்கி வருகிறது''. (யாக்கோபு 1:17)

### நீங்கள் செய்ய வேண்டியது:

1. மத்தேயு 5:16-ல் தேவன் யாராக குறிப்பிடப்பட்டுள்ளார்.

   ..........................................................................................

2. நீங்கள் தேவனிடத்திலிருந்து பெற்று கொண்ட மூன்று வரங்களையாவது குறிப்பிடவும் ..........................................

   ..........................................................................................

   ..........................................................................................

3. எல்லாவற்றிற்கும் மேலான ஈவு யாது ? அதனே உனது வாழ்க்கையில் பெற்று கொண்டுள்ளாயா ?

........................................................................................

........................................................................................

........................................................................................

## நாம் தேவனுக்கு கொடுக்கும் ஈவுகள்.

நோக்கம் 2. விசுவாசிகள் தேவனுக்கு கொடுக்க கூடிய ஆறு ஈவுகளே குறிப்பிடுதல்.

எல்லோமுடைய தேவனுக்கு நீங்கள் கொடுப்பதை குறித்து வியப்படைகிறீர்களா ? நாம் அவருக்கு எதை கொடுக்கலாம் என்று அவர் தாமே வசனத்தில் கூறியுள்ளார்.

நமது ஆராதனே அவருக்கு கொடுக்கலாம். சங்கீதம் 95:6 சொல்லுவது : ''நம்மை உண்டாக்கின கர்த்தருக்கு முன்பாக நாம் பணிந்து குனிந்து முழங்காற்படியிட கடவோம் வாருங்கள்.'' ஆராதனே அவருக்குகொடுப்பதென்ருல், அவரிடம் ஜெபிப்பதும், அவருடைய ஆசீர்வாதங்களுக்காய் நன்றி செலுத்தலும், அவரை துதித்து அவருடைய ஊழியத்துக்கென கொடுப்பதுமாகும்.

நமக்கென எதையும் ஒதுக்கி வைக்காமல் அவரிடம் நம்மை சமர்ப்பிப்பதும் ஒரு வித ஆராதனேயாகும்.

> அப்படியிருக்க, சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களேப் பரிசுத்தமும் தேவனுக்கு பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்கவேண்டுமென்று, தேவனுடைய இரக்கங்களே முன்னிட்டு உங்களே வேண்டிக்கொள்ளுகிறேன்; இதுவே நீங்கள் செய்யத் தக்க புத்தியுள்ள ஆராதனே. (ரோமர் 12:1)

நமது செல்வத்தை (பணம்) அவருக்கு கொடுப்பதின் மூலமும் நாம் அவரை ஆராதிக்கலாம். நாம் கொடுக்கும்

போது நாம் பெற்றும் கொள்ளுகிறோம். மல்கியா 3:10-ல் தேவன் வாக்கு பண்ணியிருப்பது.... தசமபாகங்களையெல்லாம் பண்டசாலையிலே கொண்டு வாருங்கள்; அப்பொழுது நான் வானத்தின் பலகணிகளை திறந்து, இடங்கொள்ளாமற் போகுமட்டும் உங்கள் மேல் ஆசீர்வாதத்தை வருஷிக்கமாட்டேனோவென்று அதினால் என்னை சோதித்துப் பாருங்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்.

தசமபாகம் என்பது உங்கள் வருமானத்தில் பத்தில் ஒரு பாகமாகும்.

கிறிஸ்தவர்களாகிய நாம் செய்வதெல்லாம் கர்த்தருக்காக செய்வதாக இருக்க வேண்டும். இயேசுவானவர் மத்தேயு 25–ம் அதிகாரத்தில், அவருக்கு ஆகாரத்தையும் தண்ணீரையும் மேலும் அவர் சிறைச் சாலையில் இருக்கையில் அவரை சந்தித்து அதன் மூலம் பலன்களை பெற்று கொண்டவர்களை குறித்து சொல்லுகிறார். அவர்கள் எப்பொழுது இவைகளை செய்தார்கள் என அவரிடம் கேட்கையில் அவர் சொன்னதாவது; ''மிகவும் சிறியவனாகிய என் சகோதரரான இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதை செய்தீர்களோ, அதை எனக்கே செய்தீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்கு சொல்லுகிறேன்''.

**நீங்கள் செய்ய வேண்டியது**

4. தசமபாகத்தை குறித்து மல்கியாவின் புத்தகத்தில் நாம் காணுவது யாது? ..........................................................................

..........................................................................

..........................................................................

5. எந்தெந்த முறையில் நாம் தேவனை ஆராதிக்கலாம்? அவைகளை உங்கள் வாழ்க்கையில் அனுபவமாக்கினதுண்டா? ..........................................................................

..........................................................................

..........................................................................

பாடம் 13

# மற்றவர்களோடுள்ள நமது ஐக்கியம்

ஒரு வேதாகம பாட சாலையில் சாட்சி பகரும் படியான நேரம் திங்கட்கிழமை காலையில் கொடுக்கப்பட்டது.

அங்கிருந்த மாணவர்களில் ஒருவனாகிய ராஜீ எழும்பி நின்றுஅதற்கு முன் தினம் நடந்த ஒரு சம்பவத்தை விவரிக்கலானான். அவனும் தனது நண்பன் ஒருவனுமாக சேர்ந்து அவ்வாலயத்தின் பக்கத்திலுள்ள தெரு ஒன்றில் வெளிக்கூட்டத்தை நடத்திக் கொண்டிருக்கையில் சில மதுபானிகள் கடந்து வந்து குழப்பமுண்டாக்கினர். குழப்பத்தின் மத்தியில் ஒருவன் தற்செயலாக தனது மகனையே கத்தியால் குத்தினான். அங்கு நின்ற அனைவரும் தங்கள் ஜீவனை காக்கும்படி ஓடினர். ஆனால் நான் அங்கு காயபபட்டு கிடக்கும் வாலிபனை அணுகி அவனுக்கு தேவையான எல்லா காரியங்களையும் செய்தேன். அவன் உயிர்பிழைக்கும்படியாய் ஜெபியுங்கள் என சொல்லி ராஜீ உட்கார்ந்தான்.

நாங்கள் தலைவணங்கி ஜெபிக்கையில் அந்த வாலிபனுக்காய் மட்டும் ஜெபிக்காமல், அவ்வுதவியை செய்து சாட்சி பகர்ந்த ராஜீக்காகவும் கர்த்தரை துதித்தோம். அவன் தனது எதிரிகளை குறித்தும் கரிசனையுடையவனாயிருந்தான்.

நாம் 12–ம் பாடத்தில் கற்ற உண்மையை அவ்வாலிபன் தனது நடைமுறை வாழ்க்கையில் அனுபவமாக்கியிருந்தான். மற்றவர்களுக்கு உதவி செய்வதின் மூலம் நமது அன்பை தேவனுக்கு வெளிப்படுத்தலாம். மற்றவர்களோடுள்ள நமது ஐக்கியத்தை குறித்து தேவனுடைய வசனம் சொல்லுவதை காண்போமாக.

## இந்த பாடத்தில் நீங்கள் படிப்பது

நமக்கு மேலுள்ளவர்கள்
நம்மை சுற்றியுள்ளவர்கள்
நமக்கு விரோதமானவர்கள்

## இந்த பாடம் உங்களுக்கு செய்யும் உதவி

* மற்றவர்களோடுள்ள ஐக்கியத்தில் உங்கள் கடமையை ஏற்றுக் கொள்ளுதல்
* எல்லா ஐக்கியத்தோடும் அன்பை உபயோகித்தல்.

## நமக்கு மேலுள்ளவர்கள்

நோக்கம் 1. *ஒரு விசுவாசி யாரை கனம் பண்ணி, கீழ்ப் படிய வேண்டும்.*

எல்லோரும் ஒரு வேளை அல்லது மற்றொரு வேளை மற்றவர்களுடைய அதிகாரத்திற்குட்பட வேண்டியவர்களாய் காணப் படுகின்றனர். பிள்ளைகளுக்கு பெற்றோர்களும், பெற்றோர்களுக்கு அரசியல் மற்றும் ஆவிக்குரிய தலைவர்களும் காணப் படுகின்றனர். அந்த தலைவர்களும் தாங்கள் எதை செய்ய வேண்டுமென மற்றவர்களால் போதிக்கப் படுகின்றனர். நமக்கு மேலுள்ளவர்களிடத்தில் நமது ஐக்கியம் எவ்விதம் இருக்க வேண்டும் என வேதாகமம் சொல்லுகிறது.

பெற்றோர்களை நாம் நேசிக்கவும், கனம் பண்ணவும் கீழ்ப்படியவும் கடமை பட்டவர்களாயிருக்கின்றோம். பாடம் 11-ல் இதை ஒரு கட்டளையாக நீங்கள் படித்ததை மறந்திருக்க மாட்டீர்கள். எபேசியர் 6: 1-3 வசனங்களில் பிள்ளைகளே, உங்கள் பெற்றோருக்கு கர்த்தருக்குள் கீழ்ப்படியுங்கள், இது நியாயம். உனக்கு நன்மை உண்டாயிருப்பதற்கும், பூமியிலே உன் வாழ்நாள் நீடித்திருப்பதற்கும் உன் தகப்பனையும் உன் தாயையும் கனம் பண்ணுவாயாக.

அதிகாரிகளாகிய போலீசார், நீதிபதிகள், மந்திரிகள், போன்றவர்களுக்கும் நாம் கீழ்ப்படிய கடமைப்பட்டவகளா-யிருக்கின்ருேம். ''எந்த மனுஷனும் மேலான அதிகாரமுள்ள வர்களுக்கு கீழ்ப்படியக்கடவன். ஏனென்றல் தேவனுலே யன்றி ஒரு அதிகாரமுமில்லே. உண்டாயிருக்கிற அதிகாரங் கள் தேவனுலே நியமிக்கப்பட்டிருக்கிறது. (ரோமர் 13:1)

விசுவாசிகளாகிய நமக்கு நமது போதகர் சபை மூப்பர்கள் ஞாயிறு வேதாகம பாடசாலே ஆசிரியர்கள் போன்றேர் தலே வர்களாக காணப்படுகின்றனர். அவர்களே நாம் மதிக்கவும் கனம் பண்ணவும் கடமைப் பட்டவர்களாயிருக்கின்ருேம்.

உங்களே நடத்துகிறவர்கள், உங்கள் ஆத்துமாக்களுக்காக உத்தரவாதம் பண்ணுகிறவர்களாய் விழித்திருக்கிறவர் களானபடியால், அவர்கள் துக்கத்தோடே அல்ல, சந் தோஷத்தோடே அதை செய்யும்படி, அவர்களுக்கு கீழ் படிந்து அடங்குங்கள்; அவர்கள் துக்கத்தோடே அப்படிச் செய்தால் அது உங்களுக்கு பிரயோஜனமாயிருக்க மாட் டாதே. (எபிரெயர் 13:17)

தேவனுடைய அதிகாரம் மட்டுமே நம் தலேவர்களின் அதிகாரங்களே விட உயர்ந்தது. தேவனுடைய திட்டத்திற் கும், சித்தத்திற்கும்மாருகசெல்லும்படியாகநம்மை அவர்ரள் வற்புறுத்தும்போது மட்டுமே அவர்களுக்கு நாம் கீழ்ப்படிய வேண்டுவதில்லே பிரசங்கிக்கலாகாது என பேதுருவிடமும், மற்ற அப்போஸ்தலரிடமும் அதிகாரிகள் கட்டளேயிடுகையில் இது நேர்ந்தது. எல்லாவற்றிற்கும் மேலாக தேவனுக்கு மட்டுமே கீழ்படிய வேண்டுமென பேதுரு அறிந்திருந்தான். அப்போஸ்தலர் 5:29-ல் பேதுரு : ''மனுஷருக்கு கீழ்படி கிறதைப் பார்க்கிலும் தேவனுக்கு கீழ்படிகிறதே அவசியமா யிருக்கிறது,'' என்ருன்.

## நீங்கள் செய்ய வேண்டியது

1. கீழ்படிதலே குறித்து எபேசியருக்கெழுதின நிருபத்தில் என்ன காண்கிறோம். நாம் எங்கனம் நமது பெற்றோருக்கு கீழ்படிய கடமை பட்டவர்களாயிருக்கின்றோம்.

.......................................................................................

.......................................................................................

.......................................................................................

2. கீழ்காண்பவர்களில் யாருக்கு நீங்கள் கீழ்படிய சற்று கடினமாய் தோன்றுகிறதோ அப்பெயரின் பக்கமாய் × என்னும் குறியிடவும்.

தகப்பன்............................சபை மூப்பர்............................

தாய்.....................................போலீஸ் .....................................

போதகர்..................................................

யாருக்கு பக்கமாய் குறியிட்டிருக்கிறீர்களோ, அவர்களை சரியாய் புரிந்து கொள்ளும்படி தேவனிடம் ஜெபிக்கவும். அவர் உங்களுக்கு உதவி செய்வார்.

### நம்மை சுற்றியுள்ளவர்கள்

நோக்கம் 2. *மற்றவர்களை நேசித்தல் என்பதை குறித்து வேதம் சொல்லுவதை சரியாய் புரிந்து கொள்ளுதல்.*

ஒரு நாள் நண்பர் ஒருவர் என்னிடம் "அவிசுவாசிகள் என்னை தவறாய் நடத்தினாலும் நான் அவர்களை நேசிப்பேன். ஆனால் வேறொரு கிறிஸ்தவன் அப்படி செய்வானென்றால் நான் பொறுத்து கொள்ள மாட்டேன். ஏனென்னில் அவர்கள் உண்மையை அறிந்தவர்கள்."

இயேசு இங்கனம் நினைத்திருப்பாரெனில் பேதுரு, மற்ற சீஷர்களின் நிலை என்னவாக மாறியிருக்கும். அவர்கள் உண்மையை நன்ருய் அறிந்திருந்தபோதிலும் அவரை கைது செய்து விசாரணைக்கு கொண்டு போகையில் அவர்கள் அனைவரும் அவரை விட்டு சென்றனர். அப்படியிருந்தும் அவர் உயிர்த்தெழுந்த பின் அவர்களுக்கு தம்மை வெளிப் படுத்தி தமது அன்பை உறுதிபடுத்தினர்.

நாம் அனேக முறை தேவனிடம் உண்மையற்றவர்க ளாய் காணப்பட்டபோதிலும் அவர் நம்மை நேசிக்கிருர்· நம்மை அவர் நேசிப்பது போலவே நாம் மற்றவர்களையும் நேசிக்க வேண்டுமென அவர் நம்மிடம் எதிர்பார்க்கிருர். ''நான் உங்களில் அன்பாயிருக்கிறது போல நீங்களும் ஒரு வரிலொருவர் அன்பாயிருங்கள்''. (யோவான் 13:34)

நம்மை மற்றவர்கள் எவ்விதம் நடத்த நாம் விரும்பு கிரேமோ அதை போலவே நாம் மற்றவர்களை நடத்த வேண்டும். லூக்கா 6:31-ல் ''மனுஷர் உங்களுக்கு எப்படிச் செய்ய வேண்டுமென்று விரும்புகிறீர்களோ, அப்படியே நீங்களும் அவர்களுக்கு செய்யுங்கள்'' என காண்கிரேம்.

இரட்சிக்கப்படாதவர்களிடத்திலும் நாம் அன்பாய் பழக வேண்டும் நமது நடக்கையின் மூலம் கிறிஸ்து நம்மில் வாசஞ்செய்கிருர் என அவர்கள் அறிந்து கொள்ள வேண் டும்.

தமது விசுவாசத்திற்காய் சிறைச்சாலையில் அடைக்கப் பட்ட ரிச்சார்ட் வும்ப்ராண்ட் (Richard Wurmbrand) என் னும் பெயருடைய ஓர் கிறிஸ்தவ போதகர் தன்னேடு கூட சிறையிலடைக்கப்பட்ட வேருெரு போதகரை குறித்து இங் கனம் சொல்லுகிருர். கிறிஸ்துவை போன்ற தனது வாழ்க் கையை பற்றி அங்குள்ள அனைவரும் அறிந்திருந்தனர்.

சில நாட்கள் கழிந்து ஒரு வாலிப பொது உடமைவாதி (Communist) இப்போதகர்கள் இருந்த அதே அறைக்கு கொண்டு வரப்பட்டான். அவர்கள் அவனிடம் இயேசுவை பற்றி கூறி அவரை தனது இரட்சகராக ஏற்றுக்கொள்ளும் படி அவனிடம் கேட்டு கொண்டனர். ஆனால் அவனோ மறுத்து விட்டான்.

ஒரு நாள் அந்த வாலிபன் அவர்களிடம் தர்க்கம்பண்ணி "நான் அறியாத ஒருவரை எங்கனம் எனது இரட்சகராய் ஏற்றுக்கொள்ள கூடும்; அவரை நான் சந்தித்ததுமில்லை, அவர் எப்படிப்பட்டவர் என்றும் எனக்கு தெரியாது" என்றான்.

உடனே அப்போதகர் அவனிடம் அவர் எப்படிப்பட்டவர் என நான் சொல்லுகிறேன். ''அவர் என்னை போன்றவர்'' என்றார்.

அவ்வாலிபன் உடனே எந்த தடையுமின்றி, ''அவர் உங்களை போன்றவரானால் அவரை என் இரட்சகராய் இப்பொழுதே ஏற்று கொள்ளுகிறேன்'' என்றான்.

அப்போதகருடைய சாட்சியின் வாழ்க்கை எத்தனை அருமையானது. இன்றைக்கு மிக குறைந்த விசுவாசிகளே இங்கனம் சொல்லக்கூடும். ஆனால் நம்மை குறித்தும் ஆண்டவர் விரும்புகிறதும் இங்கனமே. மற்றவர்கள் நம்மில்கிறிஸ்துவை கண்டடைய வேண்டும். மத்தேயு 5:16-ல் ''இவ்விதமாய், மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப் படுத்தும்படி, உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது''.

தேவனே ஒவ்வொரு நாளும் என்னை உம்மை போல மாற்றும் என நாம் ஜெபிப்போமாக. அதன் பின் நமது வார்த்தைகளை செய்கையில் காட்டுவோமாக.

## நீங்கள் செய்ய வேண்டியது

3. பின்வரும் சூழ்நிலைகளை பற்றி சிந்திக்கவும். நாம் படித்த உண்மைகளின் அடிப்படையில் விசுவாசிகளுக்கு ஏற்றவைகள் யாதென்றும் ஏற்காதவைகள் யாதென்றும் சரி அல்லது தவறு என்னும் வார்த்தைகளின் மூலம் குறிப்பிடவும்.

............ a. உங்களுடைய கிறிஸ்தவ நண்பன் ஒருவன் உங்களுக்கு விரோதமாய் அவதூறு பேசுகிருன். அவனை நீதி மன்றத்திற்கு கொண்டு செல்ல நீங்கள் நினைக்கிறீர்கள்.

............ b. உங்கள் அயலகத்தார் ஒருவர், "இனிமேல் நீ என்னிடம் கிறிஸ்துவை பற்றி சொல்ல வராதே!" ஆனுல் அடுத்த நாள் அவருடைய தேவையின் மத்தியில் நீங்கள் அவருக்கு உதவி செய்ய செல்லுகிறீர்கள்

............ c. உங்களுக்கு விருப்பமல்லாத ஒரு காரியத்தை குறித்து போதகர் பேசுகையில், நீங்கள் உடனே ஆலயத்தை விட்டு கோபத்தோடு வெளியே செல்கிறீர்கள்.

............ d. உங்களுடைய கிறிஸ்தவ நண்பர் ஒருவர் பின்மாறி பாவத்தில் விழுகிருர் அச்சம்பவத்தை அநேகரிடம் பறைச்சற்ருமல்அவரை தனிமையில் சந்தித்து மிண்டும் அவரை இயேசுவிடம் கொண்டுவர முயற்சிக்கிறீர்கள்

## நமக்கு விரோதமானவர்கள்

நோக்கம் 3. உங்கள் சொந்த வாழ்க்கையில் மற்றவர்களை நேசிப்பதை குறித்து வேதாகமத்தின் அடிப்படையில் ஒப்பிட்டு பார்த்தல்.

இப்பாடத்தின் ஆரம்பத்தில் ராஜீவை பற்றி நாம் படித்தது உங்கள் ஞாபகத்திலுண்டா ? தனக்கு விரோதமானவர்களை ராஜீ நேசித்தானு? அக்குழப்பமுண்டாக்கி காயப்பட்ட அந்த வாலிபனை தேவன் சுகமாக்கும்படி ஜெபிப்பதற்கு பதிலாக அவனை தண்டியும் ஆண்டவரே என்று அவன் ஜெபித்திருக்கலாம்.

அவ்வாறு ஜெபிப்பது கிறிஸ்துவின் குணுதிசயமாய் காணப்படுமா? ஒரு போதும் இல்லை. இயேசுவை கைது செய்த அந்த இரவில் பேதுரு தனது பட்டயத்தால் பிரதான ஆசாரியனுடைய வேலைக்காரனின் காதை வெட்டுகையில் அவர் என்னச் செய்தார். அவ்வேலைக்காரன் இயேசுவின் விரோதியாய் காணப்பட்டப்போதிலும் ''அவர் சொன்னது; இம்மட்டில் நிறுத்துங்கள் என்று சொல்லி அவனுடைய காதைத் தொட்டு, அவனைச் சொஸ்தப்படுத்தினுர்''. (லூக்கா 22:51)

தமது விரோதிகளை நேசித்து, மன்னித்த இயேசுவை போல நாமிருக்க வேண்டும். மத்தேயு 5:44-ல் அவர் சொன்னது : ''உங்கள் சத்துருக்களை சிநேகியுங்கள்;.... உங்களை நிந்திக்கிறவர்களுக்காகவும் உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களுக்காகவும் ஜெபம் பண்ணுங்கள் : மேலும் அவர் மத்தேயு 6:15-ல், ''மனுஷருடைய தப்பிதங்களை நீங்கள் அவர்களுக்கு மன்னியாதிருந்தால், உங்கள் பிதா உங்கள் தப்பிதங்களையும் மன்னியாதிருப்பார்'' என்று சொன்னுர்.

கிறிஸ்தவத்தின் மையப்பொருள் எனப்படுவது அன்பு. 1 கொரிந்தியர் 13:13 இங்ஙனம் சொல்லுகிறது ''இப்பொழுது விசுவாசம், நம்பிக்கை, அன்பு இம்மூன்றும் நிலைத்திருக்கிறது; இவைகளில் அன்பே பெரியது''.

கிறிஸ்தவர்கள் முதலாவதாக தேவனை நேசிக்க வேண்டும். அவ்வாறு செய்கையில், நாம் நமது நண்பர்களையும் விரோதிகளையும் நேசிக்கக்கூடிய அன்பை அவர் நம்மில் பகருவார். ''இயேசு அவனை நோக்கி : உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும் உன் முழு மனதோடும் அன்பு கூருவாயாக''.

''நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள்; நான் உங்களில் அன்பாயிருந்தது போல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள் என்கிற புதிதான கட்டளையை உங்களுக்கு கொடுக்கிறேன்'' (யோவான் 13:34). இவ்வசனங்களை மீண்டும் மீண்டும் வாசித்து மனம்பாடம் செய்து. தேவனையும் மனிதனையும் நேசிக்கக் கூடிய அன்பை எனக்கு தாரும் என தேவனை நோக்கி ஜெபிக்கவும்.

4. கீழ்க்காண்பவைகளுள் எவைகள் உங்கள் வாழ்க்கையில் உண்மையுள்ளதாய் காணப்படுகின்றன ?

a. உன் குடும்பத்தில் நீ நடத்தும் வாழ்க்கை குடும்பத்தாரை கிறிஸ்துவண்டை நடத்துகிறது.

b. உனது நடக்கையின் மூலம் உனது நண்பர்கள் கிறிஸ்துவை பின்பற்ற முன் வருகின்றனர்.

c. உன்னை காண்கிறவர்கள் உன்னில் கிறிஸ்துவை காண வேண்டுமென்று நீ ஜெபிக்கிறாய்.

d. மற்றவர்களை நேசிக்க பிரயாசப்படும் உனது நண்பர்களுக்காய் நீ ஜெபித்து கொண்டிருக்கின்றாய்.

பாடம் 14

# ஒரு கிறிஸ்தவனும் தனது வாழ்க்கையும்

உட்போர் நடந்து கொண்டிருந்த ஓர் சிறு தேசத்தில் தீவிரவாதிகள் எங்கும் போர் செய்து கொண்டிருந்தனர். ஒரு மனிதன் அவர்கள் கையில் அகப்பட்டவனாய், தனது கிறிஸ்துவின் மேலுள்ள விசுவாசத்தை புறக்கணியாவிடில் அவனை கொன்று விடுவோம் என அவர்கள் பயமுறுத்தினர்.

அவர்களுக்கு பயந்தவனாய் அவன் தனது விசுவாசத்தை புறக்கணித்து விட்டான். அத்தீவிரவாதிகள் தங்களுடன் இயங்கும்படி அவனையும் வற்புறுத்தினர். சில நாட்களுக்குள்ளாக அவன் அக்கூட்டத்தின் தலைவனாக மாற, தான் அறிந்த எல்லா கிறிஸ்தவ விசுவாசிகளின் வீடுகளுக்கும் நேராக அக்கொலையாளிகளை நடத்தினான்.

சில மாதங்களுக்குள் அவன் ஓர் போரில் ஈடுபட்டிருக்கையில் தன்னுடனிருந்த ஒருவனே அவனை கொன்று விட்டான். எத்தனை பரிதாபம்—இவ்வுலகத்திலும், மறு உலகத்திலும் அவனுக்கு எத்தனை பெரிய இழப்பு.

அவன் தனது விசுவாசத்திற்காய் நிலைத்திருந்தானாகில் எவ்வளவு நன்மையாயிருந்திருக்கும். அவன் தனது இவ்வுலக ஜீவனை இழந்திருக்கலாம். ஆனால் நித்திய ஜீவனை அடைந்திருப்பான். தேவனோடும் மற்றவர்களோடும் இருந்த தனது கடமையிலிருந்து அவன் தோற்று விட்டான். அது மட்டுமன்றி தனக்கு தானே இருந்த கடமையிலிருந்தும் அவன் தோற்று விட்டான்.

இப்பாடத்தில் நமக்கு நாமே செய்ய வேண்டிய கடமை என்னவென்றும், இவ்வுலகத்திலும் மறு உலகத்திலும் நாம் நன்மையடைய எவ்வாறு தேவனுக்கு கீழ்ப்படிந்திருக்க வேண்டும் எனவும் கற்று கொள்வோம்.

## இந்த பாடத்தில் நீங்கள் படிப்பது

நம்மையே வெறுத்தல்.

நம்மையே சுத்தீகரித்தல்.

## இந்த பாடம் உங்களுக்கு செய்யும் உதவி

* உங்களை வெறுப்பதின் மூலம் உங்களுக்குரிய நேர்த்தியான பலனை கண்டடையலாம்.
* ஏன் ஒவ்வொரு கிறிஸ்தவனும் தனது மனதிலும், சரீரத்லுதிம் சுத்தமுடையவனாய் காணப்பட வேண்டும்.

### நம்மையே வெறுத்தல்

நோக்கம் 1. *ஓர் கிறிஸ்தவனுடைய வாழ்க்கையில் தன்னையே வெறுப்பது என்றால் என்னவென்று கற்றுக் கொள்ளுதல்.*

ஒரு கிறிஸ்தவ விசுவாசியின் வாழ்க்கை என்பது தனக்குரியதல்ல. தேவன் தாமே தமது இரத்தத்தை கொடுத்து அதனை விலைக்கு வாங்கினபடியால் அவர் தாமே அதற்கு சொந்தமானவர்.

உன்னை விடுவிக்கும்படியாக அவர் என்ன விலை கொடுத்தார் என்பதை நீ அறிவாயா ?.... அழிவுள்ள வஸ்துக்களாகிய வெள்ளியினாலும் பொன்னினாலும் மீட்கப்படாமல் குற்றமில்லாத மாசற்ற ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்துவின் விலையேறப் பெற்ற இரத்தத்தினாலே மீட்கப்பட்டீர்களென்று அறிந்திருக்கிறீர்களே. (1 பேதுரு 1:18-19)

ஒன்று கொரிந்தியர் 6:20-ல் சிலுவையில் இயேசு எவ் வித பலியை செலுத்தினர் என காணலாம். ''கிரயத்துக்குக் கொள்ளப்பட்டீர்கள்; ஆகையால் தேவனுக்கு உடையவர்களாகிய உங்கள் சரீரத்தினலும் உங்கள் ஆவியினலும்தேவனை மகிமைப் படுத்துங்கள்''. அவர் நமக்காக கிரயத்தை (விலை) செலுத்தினபடியால் நாமும் ஓர் கிரயத்தை செலுத்த கடமைப்பட்டவர்களாயிருக்கின்றோம். ஒரு கிறிஸ்தவனயிருத்தல் என்றல் நம்மை மறந்து கிறிஸ்துவைப் பின்பற்றுதல் என வேதாகமம் சொல்லுகிறது. லூக்கா 9:23–ல்; ''பின்பு அவர் எல்லோரையும் நோக்கி : ஒருவன் என் பின்னே வர விரும்பினல் அவன் தன்னைத்தான் வெறுத்து தன் சிலுவையை அனுதினமும் எடுத்துக்கொண்டு, என்னைப் பின்பற்றக்கடவன்''.

நாம் நமது சித்தத்தை செய்வதற்கு பதிலாக தேவ சித்தத்தை செய்யும்போது நாம் நம்மையே மறந்து விடுகிறோம். இயேசு கிறிஸ்து தாமே நமக்கு மாதிரியாக இருப்பதை யோவான் 6:38–ல் காண்கிறோம். ''என் சித்தத்தின்படியல்ல, என்னை அனுப்பினவருடைய சித்தத்தின் படி செய்யவே நான் வானத்திலிருந்து இறங்கி வந்தேன்''.

பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின் படி செய்கிறவனே பரலோக ராஜ்யத்தில் பிரவேசிப்பானேயல்லாமல், என்னை நோக்கி; கர்த்தாவே ! கர்த்தாவே ! என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை.

நமது சித்தத்திற்கு மாருக காணப்பட்டபோதிலும் கிறிஸ்தவர்களாகிய நாம் நல்லதையே செய்ய தெரிந்து கொள்ள வேண்டும். ''துர் இச்சைகளுக்கு இடமாக உடலை பேணமலிருந்து, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை தரித்துக் கொள்ளுங்கள்''. (ரோமர் 13:14)

நம்மையே வெறுப்பது என்பது கடினமாய் தோன்று கிறதா ? ஒருபோதும் அங்கனம் நிளேக்கவேண்டியதில்லே. ஏனெனில் அதற்கு மேலான சில காரியங்களே வாக்கு பண்ணின பிறகு தான் அவர் நம்மை சில காரியங்கள் செய்யச் சொல்லுவார்.

என் நாமத்தினிமித்தம் வீட்டையாது, சகோதாரரையாவது, சகோதரிகளேயாவது, தகப்பனேயாவது, தாயையாவது, மனேவியையாவது, பிள்ளேகளேயாவது. நிலங்களேயாவது விட்டவன் எவனே, அவன் நூறத்தனேயாய் அடைந்து, நித்திய ஜீவனேயும் சுதந்தரித்து கொள்ளுவான். (மத்தேயு 19:29)

இயேசு வேறொரிடத்தில் இங்கனம் சொன்னர். "நானே அவைகளுக்கு ஜீவன் உண்டாயிருக்கவும், அது பரிபூரணப் படவும் வந்தேன்". (யோவான் 10:10)

ஆம், பரிபூரண ஜீவன் ! அதுவே இன்றைய உலகிற்கு தேவை. அது தேவனலெயன்றி ஒருவராலும் கொடுக்க இயலாது.

### நீங்கள் செய்ய வேண்டியது

1. இயேசு நமக்காக எவ்வித கிரயத்தை செலுத்தினர்.

   ..........................................................................

   ..........................................................................

2 நம்மையே வெறுத்தல் அல்லது நமது சிலுவையை நாமே சுமத்தல் என்றல்.

   a. உலகப்பிரகாரமான ஒன்றையும் உடைவர்களாயிருக் கலாகாது.

   b. நமக்குரிய அனேத்தையும் விற்று ஆலயத்திற்கு கொடுப்பது.

c. நமது சித்தத்திற்கு பதிலாக தேவ சித்தத்தை செய்தல்.

3. கீழ்காண்பவைகளுள் எவைகள் சரியானவை ?

a. இயேசு நமக்காக தமது ஜீவனை கொடுத்தது, நமது பாவ பாரத்தை நம்மிலிருந்து விலக்கி, நமது குற்ற உணர்விலிருந்து நம்மை விடுவிக்கவே.

b. பரிபூரண ஜீவனை கண்டு கொள்ளுவதென்றால் தேவனுடைய சுபாவத்தால் நிரப்பப்படுதல்.

c. நம்மையே வெறுத்தல் என்றால் நமது பாவ சுபாவங்களை குறித்து கரிசனையற்றிருத்தல்.

## நம்மையே சுத்தீகரித்தல்

**நோக்கம் 2.** *நமது சரீரமும் மனதும் சுத்தமாய் வைக்கக் கூடிய கிறிஸ்தவ நடக்கைகளை ஆராய்ந்தறிதல்.*

ஒரு கிறிஸ்தவன் தனது சரீரத்தையும், மனதையும் சுத்தமாய் வைக்க வேண்டும். ஏன் என வேதாகமம் சொல்லுகிறது.

உங்கள் சரீரமானது நீங்கள் தேவனாலே பெற்றும் உங்களில் தங்கியும் இருக்கிற பரிசுத்த ஆவியினுடைய ஆலயமாயிருக்கிறதென்றும், நீங்கள் உங்களுடையவர்களல்லவென்றும் அறியீர்களா? (1 கொரிந்தியர் 6:19)

புகை பிடித்தல், குடிப்பழக்கம், போதை வஸ்துக்கள் உபயோகித்தல் போன்ற பழக்கங்கள் நமது சரீரத்தையும் மனதையும் பாதித்து நமது ஆயுசையும் குறைக்கச் செய்யும். அவைகளை உபயோகிப்பவன் தான் நினைக்கிற நாளில் அப்பழக்கத்தை நிறுத்திவிடலாம் என எண்ணினாலும், அப்பழக்கம் அவனை மேற்கொண்டு அதற்கு அடிமையாகிறான்.

மரணத்துக்கேதுவான பாவத்துக்கானாலும், நீதிக்கேதுவான கீழ்ப்படிதலுக்கானாலும், எதற்கு கீழ்ப்படியும்படி உங்களை அடிமைகளாக ஒப்புக் கொடுக்கிறீர்களோ, அதற்கே கீழ்ப்படிகிற அடிமைகளாயிருக்கிறீர்களென்று அறியீர்களா? (ரோமர் 6:16).

சில நேரங்களில் சில சோதனைகள் உங்களை மேற்கொள்ளுகிறது. அந்நேரங்களில் தேவனுக்கு பிரியமில்லாத இடங்களுக்கு சென்று, கெட்ட புத்தகங்களை வாசித்து அவருடைய சமூகத்தில் வர முடியாதவனாய் மாறின அனுபவங்கள் உங்கள் வாழ்க்கையில் உண்டானதுண்டா? அவ்விதமான துர்குணங்களை தேவனுடைய உதவியினால் நாம் மேற்கொள்ள கூடும்.

உன் சுய முயற்சியினால் மேற் கொள்ள முடியாது. தேவனே எனக்கு உதவி செய்யும் என அவரிடம் ஜெபிக்கவும். உனது உள்ளான வாழ்க்கையில் ஒரு விடுதலைக்காக அவரிடம் மன்றாடவும். பிறகு இவ்வசனத்தை மனப்பாடம் செய்து, சோதிக்கப் படுகையில் அவ்வசனத்தை மீண்டும் சொல்லவும். என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையும் செய்ய எனக்குப் பெலனுண்டு. (பிலிப்பியர் 4:13)

உன் வழியை கர்த்தருக்கு ஒப்புவித்து
அவர் மேல் நம்பிக்கையாயிரு ;
அவரே காரியத்தை வாய்க்கப் பண்ணுவார்.
(சங்கீதம் 37:5)

## நீங்கள் செய்ய வேண்டியது

4. கீழ்காணும் சூழ்நிலைகளில் நீங்கள் என்ன செய்வீர்கள்? ஆம் அல்லது இல்லை என்னும் வார்த்தைகளை உபயோகித்து கீழ்காணும் கேள்விகளுக்கு பதிலை குறிப்பிடவும்.

.......... a. உங்கள் நண்பர் ஒருவர் (அவிசுவாசி) உங்களை ஓர் விருந்திற்கு அழைக்கிறார். அவ்விருந்தில் கிறிஸ்தவ அடிப்படை உபதேசத்திற்கு மாறான காரியங்கள் நடைபெறுகின்றன. அந்த சூழ்நிலையில் இந்த ஒருமுறை மாத்திரம் அவரை பிரியப்படுத்தலாம் என நீங்கள் அவ்விருந்தில் பங்கெடுப்பீர்களா?

.......... b. தேவனுக்கு பிரியமில்லாத என நீங்கள் அறிந்து ஓர் இடத்திற்கு செல்லும்படியாக உங்கள் சபையின் அங்கத்தினர் சிலர் உங்களை கேட்டுக் கொள்கின்றனர். அந்த சூழ்நிலையில் நான் பரிசுத்தவான் அல்ல எனக் காட்டும்படியாக நீங்கள் அங்கு செல்லுவீர்களா?

.......... c சில அவிசுவாசிகள் தங்கள் பண்டிகையில் பங்கு பெறும்படியாக உங்களை அழைத்து அவ்விடத்தில் உங்கள் மனந்திரும்புதலை குறித்து சொல்லும்படியாக கேட்டுக்கொள்வார்களெனில் அதனை ஓர் தருணமாக ஏற்றுகொண்டு அத்தருணத்தை பிரயோஜனப் படுத்துவீர்களா?

5. ஒரு புதிய கிறிஸ்தவன் (இயேசுவை சொந்த இரட்சகராய் ஏற்று கொண்டவன்) தன்னால் தனது புகைபிடித்தல் பழக்கத்தை நிறுத்த முடியவில்லை என்று உங்களிடத்தில் சொல்லுவானென்றால், கீழ்காணப்படுபவைகளில் எந்த ஆலோசனையை அவர்களுக்கு கொடுப்பீர்கள்·

a. நீ அப்பழக்கத்தை நிறுத்தும் வரை பரலோகம் செல்ல மாட்டாய் என அவனிடம் சொல்.

b. அந்த புதிய கிறிஸ்தவனுக்கு ஞானஸ்நானம் கொடுக்க கூடாது என உங்கள் போதகரிடம் சொல்லவும்.

c. அவன் அந்த பழக்கத்தை மேற்கொள்ளும்படியாகவும் தேவனுடைய வசனத்திற்கு கீழ்படிந்து தேவனுக்கு பிரியமான வாழ்க்கை நடத்த அவனோடு கூட சேர்ந்து ஜெபிக்கவும்.

பாடம் 15

# கிறிஸ்தவ ஜீவியம்

அநேக வருடங்கள் மிஷனரி பணியில் ஈடுப்பட்டிருந்த என் தந்தை பல விதமான சூழ்நிலைகளினூடாய் செல்ல வேண்டிய சந்தர்ப்பங்கள் நேரிட்டன. தனது விசுவாசத்திற் காய் அநேக முறை துப்பாக்கி முன் நிற்க வேண்டியதாயும் சிறைச்சாலையில் அடைக்கப்பட வேண்டிய சூழ்நிலைகளும் வந்தது. ஆனால் அவர் ஒருபோதும் அசையவில்லை. ஆனால் அவரது மிக இக்கட்டான ஓர் சூழ்நிலை உண்டாயிற்று.

தேவனுடைய விரோதியான ஒருவன் விசுவாசி என நடித்து கொண்டு என் தந்தைக்கு விரோதமாய் துரோகம் செய்து அவரை நிந்திக்க முற்பட்டான் அவரை குறித்து பல விதமான பொய்களை சொன்னான். இவைகளை எல்லாம் அறிந்தும் அவனை விரோதித்து நடவடிக்கை எடுக்காமல் அவனுக்காக ஜெபம் செய்து, அக்காரியங்களை தேவகரத்தில் ஒப்படைத்தார். சில மாதங்களுக்குள்ளாக அவன் சொல்லி கொண்டு திரிந்த குற்றங்களில் அவனே பிடிக்கப்பட்டவனாய் காணப்பட்டான்.

என் தகப்பனுக்கு நேரிட்ட இதே காரியம் இன்றும் அநேக விசுவாசிகளுடைய வாழ்க்கையில் நேரிடுகின்றன. அவர்களனைவரும் உறுதியான கிறிஸ்தவர்களாய் பிறந்ததினாலல்ல. ஆனால் தங்களுடைய வாழ்க்கை ஒவ்வொரு நாளும் தேவன் கிரியைச் செய்யும்படியாய் அனுமதித்ததே காரணம். உயர்ந்த மரங்களை போல, அவர்கள் தங்கள் வேரை ஆழத்தில் வைத்திருப்பதால் எவ்விதமான காற்று வந்த போதிலும் அது அவர்களை பாதிப்பதில்லை.

நீங்கள் உங்கள் வாழ்க்கையிலும் அவ்விதமாய் எந்த சூழ்நிலையின் மத்தியிலும் தேவன் பேரில் நம்பிக்கையாயிருக்கும் ஓர் நல்ல நபராய் காணப்பட விரும்புகிறீர்களா ? இது வரைக்குமாய் படித்த காரியங்களை நமது வாழ்க்கையில் கைக்கொண்டு மரத்தை போல "உயரமாய் வளருவோம்".

## இந்த பாடத்தில் நீங்கள் படிப்பது

பெற்று கொள்ளுதலும் பகருதலும்.

கிறிஸ்தவ வளர்ச்சி

சிந்தனையும் நடக்கையும்

சபை ஜீவியம்.

## இந்த பாடம் உங்களுக்கு செய்யும் உதவி

* வெற்றிகரமான கிறிஸ்தவ ஜீவியத்திற்கு நம்மை நடத்தும் கிறிஸ்தவ அடிப்படை தத்துவங்கள் கண்டுகொள்ளுதல்.
* அவைகளை உங்கள் தினசரி ஜீவியத்தில் கடைபிடிக்க ஒப்பு கொடுத்தவர்களாய் காணப்படுங்கள்.

## பெற்று கொள்ளுதலும் பகருதலும்

நோக்கம் 1. *கிறிஸ்தவ வளர்ச்சிக்கு தேவையான இரண்டு படிகளையாவது பகுத்தறிதல்.*

நித்திய ஜீவனை தருகிறவர் யார் என்றும் யார் அதனை பெற்று கொள்ளுவார்களென்றும் நாம் கற்று கொண்டோம், ஆனால் அவ்வாழ்க்கை மூலக்காரணர் இயேசு என்பதை மீண்டுமாய் ஞாபகப்படுத்திக் கொள்ளுவது நமது வாழ்க்கையில் இன்றியமையானது.

நான் கொடுக்கும் தண்ணீரை குடிக்கிறவனுக்கோ ஒரு காலும் தாகமுண்டாகாது; நான் அவனுக்கு கொடுக்கும் தண்ணீர் அவனுக்குள்ளே நித்திய ஜீவகாலமாய் ஊறுகிற நீரூற்றாயிருக்கும் என்றார். (யோவான் 4:14)

தேவனுடைய குடும்பத்தின் அங்கத்தினராய் இருப்பதென்றால் அது மிக பாக்கியம் பெற்ற ஓர் அனுபவமாகும். அவ்வனுபவம் நாம் மற்றவர்களிடத்திலும் பகிர்ந்து கொண்டு மற்றவர்களையும் அந்த அனுபவத்தை பெறும் படி செய்ய நம்மை ஊக்குவிக்கும். மத்தேயு 10:32-ல் இயேசு சொன்னார் ''மனுஷர் முன்பாக என்னை அறிக்கை பண்ணுகிறவனெவனோ அவனை நானும் பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் முன்பாக அறிக்கைப் பண்ணுவேன்.'' எத்தனை அருமையான வாக்குத்தத்தம் ?

கர்த்தராகிய தேவனை உங்கள் இருதயங்களில் பரிசுத்தம் பண்ணுங்கள்; உங்களிலிருக்கிற நம்பிக்கையை குறித்து உங்களிடத்தில் விசாரித்து கேட்கிற யாவருக்கும் சாந்தத்தோடும் வணக்கத்தோடும் உத்தரவு சொல்ல எப்போதும் ஆயத்தமாயிருங்கள். கிறிஸ்துவுக்கேற்ற உங்கள் நல்ல நடக்கையைத் தூஷக்கிறவர்கள் உங்களை அக்கிரமக்காரர் என்று உங்களுக்கு விரோதமாய் சொல்லுகிற விஷயத்தில் வெட்கப்படும் படிக்கு நல்ல மனசாட்சியுடையவர்களாயிருங்கள். (1 பேதுரு 3:15,16)

மற்றவர்களிடத்தில் இயேசுவை குறித்து சொல்ல வேண்டுமென வேதாகமம் உரைப்பதாலும், நாம் தாமே அதனை விரும்புவதாலும் நாம் மற்றவர்களிடத்தில் இயேசுவை குறித்த உண்மைகளை பகிர்ந்து கொள்கிறோம். கிறிஸ்துவுக்காக நாம் படியெடுத்து வைக்கும்போது நாம் அவரில் இன்னும் உறுதியாய் வளருகிறோம்.

இயேசு கிறிஸ்துவை குறித்து வெளியரங்கமாய் சாட்சி சொல்லும் வேருெரு முறை என்பது தண்ணீர் முழுக்கிஞல் ஞானஸ்நானம் எடுப்பதாகும். ஞானஸ்நானம் என்பது கிறிஸ்தவ வளர்ச்சியின் ஓர் அடிப்படை சத்தியமாகும் இயேசுவுக்கு ஞானஸ்நானம் தேவையில்லாமலிருந்தும், ஞானஸ்நானம் ஏற்றுக் கொண்டு நமக்கு மாதிரியாக மாறிஞர். அதனைகுறித்து மத்தேயு 3–ம் அதிகாரத்தில் வாசிக்கலாம்.

> ஆகையால் நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுங்கள். (மத்தேயு 28:19)

ஒரு சபையின் அங்கத்தினன் ஆவதிஞலோ, அல்லது ஒரு ஸ்தல சபையின் அங்கத்தினன்ஆவதிஞலோ நாம் இரட்சிக்கப்பட முடியாது. ஆஞல் அங்கனம் ஓர் சபையின் அங்கத்தினன் ஆவதின் மூலம் கிறிஸ்தவ குடும்பத்துடன் நாம் அதிகம் ஐக்கியம் கொண்டு நமது கிறிஸ்தவ வாழ்க்கை அதிக வளர்ச்சியடையும். நம்மை சூழ உள்ளவர்களை குறித்து கரிசனையுடையவர்களாய் காணப்படுவோம். இயற்கையான ஓர் குடும்பமெனப்படுவது தேவனுடைய திட்டமாய்க் காணப்படுவதை போலவே ஆவிக்குரிய குடும்பமும் தேவனுடைய திட்டமாகும்—அதன் மூலம் நாம் அதிகமாய் கற்றுக்கொள்ளவும், பகிர்ந்து கொள்ளவும் கூடும். அப்போஸ்தலர் 2:47–ல் இரட்சிக்கப் படுகிறவர்களை கர்த்தர் அனுதினமும் சபையிலே சேர்த்துக் கொண்டு வந்தார் என காண்கிரேும்.

## நீங்கள் செய்ய வேண்டியது

1. இயேசு கொடுக்கும் தண்ணீரை குடிக்கிறவனுடைய வாழ்க்கையில் சம்பவிப்பது யாது? ........ ..........................

.........................................................................................

2. கீழ்காணும் சொற்றொடர்களுள் சரியானவை யாவை?

   a. தண்ணீர் முழுக்கு ஞானஸ்நானம் என்பது வெளியரங்கமாய் சாட்சி பகருதலின் ஓர் முறையாகும்.

   b. இயேசு கிறிஸ்துவை குறித்து மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ள வேண்டியதில்லை. நாம் இரகசிய கிறிஸ்தவர்களாக இருந்தாலும் போதும்.

   c. கிறிஸ்தவ நண்பர்கள் நமக்கும் நாம் அவர்களுக்கும் உதவி செய்ய முடியும்.

## கிறிஸ்தவ வளர்ச்சி

நோக்கம் 2. *கிறிஸ்தவ வளர்ச்சிக்கு உதவியாயிருக்கும் இரண்டு செயல்களை பகுத்தறிதல்.*

பல விதமான வாஞ்சைகள் (ஏக்கங்கள்) மனிதனுடைய வாழ்க்கையில் நாம் காணலாம். தூரச் சென்ற ஒருவருடைய செய்தியை அறிய அல்லது புதிய சந்தர்ப்பங்களுக்காக நாம் காத்திருக்கலாம். அன்பிற்காகவும் பராமரிப்புக்காகவும் காத்திருக்கும் அநேக வாழ்க்கைகளை நாம் காணலாம். இவ்வுலகம் தரக்கூடியதற்கும் மேலான காரியங்களுக்காக நமது இருதயமும் ஆத்துமாவும் வாஞ்சிக்கிறது.

நீங்கள் இரட்சிக்கப்பட்டப் பின் உங்கள் வாழ்க்கையில் வேறொரு விதமான பசியை உணருவீர்கள். அதுவே தேவனுடைய வசனத்திற்காயுள்ள பசியாகும். "நீங்கள் வளரும்படி, புதிதாய் பிறந்த குழந்தைகளைப் போல, திருவசனமாகிய களங்கமில்லாத ஞானப்பாலின் மேல் வாஞ்சையாயிருங்கள். (1 பேதுரு 2:3) இயேசு சொன்னார் "மனுஷன் அப்பத்தினாலே மாத்திரமல்ல; தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான்". (மத்தேயு 4:4)

ஒரு கிறிஸ்தவன் ஒவ்வொரு நாளும் தனது வேதாக மத்தை வாசிக்க வேண்டும். இஸ்ரவேலின் ராஜாவாகிய தாவீது ஓர் நல்ல மாதிரியை வைத்து சென்ருன். அவன் சொல்லும்போது, ''துன்மார்க்கருடைய ஆலோசனையில் நடவாமல்.... கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான்.'' (சங்கீதம் 1:1-2) 'உமது வேதத்தில் எவ்வளவு பிரியமாயிருக்கிறேன்! நாள் முழுதும் அது என் தியானம். (சங்கீதம் 119:97)

தேவனுடைய வசனத்தை வாசிப்பது மட்டுமன்றி அவ் வசனங்களை மனப்பாடம் செய்து நம் இருதயத்திற்குள் வைத்திருப்பது மிக முக்கியமானதாகும். நமது தேவையின் மத்தியில் – ஆலோசனை தேவையான நேரத்தில் பரிசுத்த ஆவியானவர் அவ்வசனங்களை நமது ஞாபகத்தில் கொண்டு வந்து நமக்கு உதவி செய்வார்.

என் நாமத்தினலே பிதா அனுப்பப்போகிற பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனே எல்லாவற்றையும் உங்களுக்குப் போதித்து, நான் உங்களுக்குச் சொன்ன எல்லாவற்றையும் உங்களுக்கு நினைப்பூட்டுவார். (யோவான் 14:26)

நமது தினசரி வேதவாசிப்பை தொடர்ந்து ஜெபம் இருக்க வேண்டும். பரலோகத்தின் மகிமையை அறிந்த இயேசு இப்பூமிக்கு வரும்முன் ஜெபத்தின் முக்கியத்துவத்தை அறிந்திருந்தார். அவர் தமது சீஷர்களை தெரிந்தெடுப்பதற்கு முன் இரவு முழுவதும் ஜெபித்தார். (லூக்கா 6:12) பவுலும் சீலாவும் தாங்கள் ஜெபம் செய்து, தேவனை துதித்து பாடுகையில் அவர்களை அடைத்திருந்த சிறைச்சாலை கதவுகள் தனியாகவே திறக்கப்பட்டு அவர்கள் விடுதலையானார்கள். (அப்போஸ்தலர் 16) இயேசு தமது சீஷர்களை நோக்கி ''கேளுங்கள் அப்பொழுது உங்களுக்கு கொடுக்கப்படும்;

தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்; தட்டுங்கள் அப்பொழுது உங்களுக்கு திறக்கப்படும். (லூக்கா 11:9)

ஒன்று தெசலோனிக்கேயர் 5:17-ல் ''இடைவிடாமல் ஜெபம் பண்ணுங்கள்''. நாம் ஒருவேளை பள்ளிகூடத்தில் பல விதமான வேலையுடையவர்களாயிருந்தாலும், அல்லது தொழிற்சாலையில் வேலை செய்து கொண்டிருந்தாலும் ஜெப சிந்தையுடன் இருக்க கூடும். இக்கட்டான சூழ்நிலைகள் நமது வாழ்க்கையில் எப்பொழுது, எங்கு நேரிட்டாலும் நாம் தேவனை கூப்பிடுவது போலவே, எல்லா நேரங்களிலும் அவருடன் தொடர்பு கொண்டவர்களாய் காணப்படலாம்.

## நீங்கள் செய்ய வேண்டியது

3. எந்த இரண்டு காரியங்கள் ஓர் விசுவாசியை வளர்ச்சியடையச் செய்யும் ?

..............................................................................................

..............................................................................................

## சிந்தனைகளும் கிரியைகளும்

நோக்கம் 3. *ஒரு விசுவாசியினுடைய சிந்தனைகளை எங்கனம் அடக்கி பாதுகாக்க கூடும் என அறிந்து கொள்ளுதல்.*

எல்லா காவலோடும் உன் இருதயத்தைக் காத்துக் கொள், அதினிடத்தினின்று ஜீவ ஊற்று புறப்படும். (நீதிமொழிகள் 4:23)

நமது சிந்தனைகளை அடக்கும்படியாக தேவன் நமக்கு உதவிச் செய்வார். பிலிப்பியர் 4:7 சொல்லுவது, ''அப்பொழுது எல்லா புத்திக்கும் மேலான தேவ சமாதானம் உங்கள் இருதயங்களையும் உங்கள் சிந்தனைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக காத்து கொள்ளும்.''

கடைசியாக, சகோதரரே, உண்மையுள்ளவைகளெவைகளோ, ஒழுக்கமுள்ளவைகளெவைகளோ, நீதியுள்ளவைகளெவைகளோ, கற்புள்ளவைகளெவைகளோ, அன்புள்ளவைகளெவைகளோ, நற்கீர்த்தியுள்ளவைகளெவைகளோ, ....அவைகளையே சிந்தித்துக் கொண்டிருங்கள். (பிலிப்பியர் 4:8)

நமது சிந்தனைகளை அடக்கி தேவனுக்கு பிரியமான வாழ்க்கை மட்டுமே செய்ய வேண்டுமேயானால் நாம் நமது மனதை சரியான முறையில் கட்டுப்படுத்த வேண்டும். இவ்வுலகிலிருக்கும்வரை நமக்கு பிரச்சனைகள், சோதனைகளை நேரிட வேண்டியிருக்கும். ஆனால் தேவனுடைய உதவியினால் சோதனைகளை நாம் மேற்கொள்ள கூடும். ஓர் பழைய பழமொழி இவ்வாறு சொல்லுகிறது. ''பறவைகள் நமக்கு மேலாக பறந்து செல்லும், ஆனால் அவைகள் நமது தலையில் கூடு கட்ட நாம் இடங்கொடுக்க வேண்டியதில்லை''. மற்றொரு ரீதியில் சொல்லுவோமென்றால், சோதனைகள் நம்மை சூழ இருந்தாலும் அவை நமது வாழ்க்கையில் பாவமாக மாற நாம் அதற்கு வழங்க கூடாது.'' நமது மனதையும், சிந்தனையையும் சுத்தமாக வைக்கக் கூடிய நேர்த்தியான முறை யாதெனில், நாம் பார்க்கிற, கேட்கிற காரியங்களில் கவனமாயிருந்து ஆகாதவைகளை செய்யாமலிருப்பதாகும்.

நீ பார்க்கிறவைகளை குறித்து கவனமாயிரு. ''கண்ணானது சரீரத்தின் விளக்காயிருக்கிறது; உன் கண் தெளிவாயிருந்தால், உன் சரீரம் முழுவதும் வெளிச்சமாயிருக்கும்.'' (மத்தேயு 6:22)

நாம் கேட்கிறவைகளும் நமது சிந்தனையை கவரச் செய்யும். மாற்கு 4:24-ல், ''நீங்கள் கேட்கிறதை கவனியுங்கள்!'' நீ ரசித்து கவனிக்கும் சம்பாஷணைகள் கேட்கும் பாடல்கள் உனக்கு தேவனை இன்னும் அதிகமாய் நேசிக்க

உதவுகிறதா? அவைகள் நல்ல சிந்தனைகளை உருவாக்குகின்றனவா? உங்கள் பதில் தோல்வியின் பதிலாய் காணப்படுமெனில் அவைகளை சீர்திருத்தும்படியாய் தேவனிடம் மன்றாடவும்.

கேட்குதல் என்று சொல்லும்போது நமது வார்த்தைகளும் மற்றவர்களுடைய வார்த்தைகளும் அதனுள் அடங்கியுள்ளது. நாம் பேசும் வார்த்தைகள் நன்மையையும் தீமையையும் விளைவிக்கக்கூடும். யாராவது நமக்கு தீங்கு செய்வார்களெனில் அவர் மறுமொழியாக நாம் கோபித்து எதையும் சொல்லாவிட்டால், அக்காரியத்தை மிக எளிதில் மறந்துவிடலாம். நீதிமொழிகள் 15:1 சொல்லுவது "மெதுவான பிரதியுத்தரம் உக்கிரத்தை மாற்றும்; கடுஞ்சொற்களோ கோபத்தை எழுப்பும்". நமது குறிக்கோள் நீதிமொழிகள் 25:11-ஐ நிறைவேற்றுதலாயிருக்க வேண்டும்– "ஏற்ற சமயத்தில் சொன்ன வார்த்தை வெள்ளித்தட்டில் வைக்கப்பட்ட பொற்பழங்களுக்கு சமானம்."

ஓர் கிறிஸ்தவன் தனது கிரியைகளிலும் கவனமாயிருக்க வேண்டும். ஏனெனில் தான் செய்கிற எல்லாவற்றிலும் நன்மையானவைகளை மாத்திரமே செய்ய வேண்டுமென தேவன் விரும்புகிறார்.

> மனுஷனே, நன்மை இன்னதென்று அவர் உனக்கு அறிவித்திருக்கிறார்; நியாயஞ்செய்து இரக்கத்தை சிநேகித்து உன் தேவனுக்கு முன்பாக மனத்தாழ்மையாய் நடப்பாயாக. (மீகா 6:8)

### நீங்கள் செய்ய வேண்டியது

4. நாம் படித்த இப்பாகத்திலிருந்து வசனங்களை எடுத்து சரியான விடைக்கு நேராய் எழுதவும். நமது சிந்தனைகள்

a. சரியான காரியங்களை சார்ந்திருக்க வேண்டும்........

b. தேவ சமாதானத்தால் கட்டுப்படுத்தப்பட்டவை களாய் இருக்க வேண்டும் ....... ..................................

c. வாழ்க்கையை சரிப்படுத்துகிறவைகளாய் காண வேண்டும்..........................................................................

d. தேவனுக்கு பிரியமானதாய் இருக்க வேண்டும் ........ ..............................................................................

5. மீகா 6:8–ஐ மனப்பாடம் செய்யவும்.

## சபை ஜீவியம்

நோக்கம் 4. *சபை கூடிவருதலும் கார்த்தருடைய வேலைக்கென கொடுப்பதின் முக்கியத்துவத்தை குறித்து விளங்கி கொள்ளுதல்.*

நாம் கற்று கொண்டவண்ணமாக நாம் அறிந்த நற்செய்தியை நாம் நமது நண்பர்களுடன் பகிர்ந்து கொள்ள வேண்டும்- ஒரு வேளை அவர்கள் கிறிஸ்தவர்கள் அல்லாதவர்கள் ஆயினும் கூட. ஆனல் நமது உற்ற நண்பர்களை தெரிந்தெடுப்பதில் நாம் கவனமாயிருக்க வேண்டும். நமது நண்பர்களுடன் செலவிடும் நேரங்கள் நம்மையும் நமது நண்பர்களையும் கிறிஸ்துவில் வளரச் செய்ய வேண்டும்.

துன்மார்க்கருடைய ஆலோசனையில் நடவாமலும், பாவிகளுடைய வழியில் நில்லாமலும், பரியாசக்காரர் உட்காரும் இடத்தில் உட்காராமலும் கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து, இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிறவன் பாக்கியவான். (சங்கீதம் 1:1–2)

நாம் தனியாகவும் கிறிஸ்தவ நண்பர்களுடைய உதவி யினுலும் வேதாகமத்தை படிக்க வேண்டும். மட்டுமன்றி கிறிஸ்தவ பிரசங்கத்தையும் கேட்கவேண்டும். 'ஆதலால் விசுவாசம் கேள்வியினுலே வரும், கேள்வி தேவனுடைய வசனத்தினுலே வரும். (ரோமர் 10:17)

சபை கூடிவருதலை சிலர் விட்டுவிடுகிறது போல நாமும் விட்டு விடாமல், ஒருவருக்கொருவர் புத்தி சொல்லக்கட வோம். நாளானது சமீபித்து வருகிறதை எவ்வளவாய்ப் பார்க்கிறீர்களோ அவ்வளவாய் புத்தி சொல்ல வேண்டும். (எபிரேயர்10:25)

விசுவாசிகள் ஒருமித்து கூடிவருகையில் அவர்கள் ஒருவரையொருவர் உற்சாகப்படுத்துகிறவர்களாய் காணப்பட வேண்டும். ஒருமித்து ஐக்கியமாய் தேவனை துதித்தலிலும், பாடுதலிலும் வல்லமையுண்டு.

சரீரத்திலே பிரிவினையுண்டாயிராமல், அவயவங்கள் ஒன்றைக் குறித்து ஒன்று கவலையாயிருக்கும்படிக்கு, தேவன் கனத்தில் குறைவுள்ளதற்கு அதிக கனத்தைக் கொடுத்து, இப்படி சரீரத்தை அமைத்திருக்கிருர், ஆதலால் ஒரு அவயவம் பாடுபட்டால் எல்லா அவயவங்களும் கூடப்பாடு படும் ஒரு அவயவம் மகிமைப்பட்டால் எல்லா அவயவங்களும் கூடச் சந்தோஷப்படும். (1கொரிந்தியர் 12:25,26)

நாம் நமது ஸ்தல சபைக்கு பணம் கொடுத்து உதவும் அதே நேரத்தில், மற்றவர்களுக்கும் உதவிச் செய்தல் வேண்டும் என தேவன் விரும்புகிருர். எபிரேயர் 7:2-9-ல் ஆபிரகாம் தனது வருமானத்தில் பத்தில் ஒன்றை (தசமபாகம்) தேவனுக்கென்று கொடுத்ததாக வாசிக்கிரேம். ஆயினும் தசமபாகம் கொடுப்பது மட்டும் போதாது.

மதத்தலைவர்களாகிய பரிசேயர் கூட இயேசு இப்பூமியிலிருக்கையில் தசமபாகம் கொடுத்து வந்தார்கள். ஆனால் நம்மிடம் இயேசு உரைக்கையில் உங்கள் ஈகை அவர்களுடையதை விட அதிகமாய் காணப்பட வேண்டுமென்றார். அவர் சொன்னது; நீங்கள் ஒற்தலாமிலும், வெந்தையத்திலும் சீரகத்திலும் தசமபாகம் செலுத்தி, நியாயப் பிரமாணத்தில் கற்பித்திருக்கிற விசேஷித்தவைகளாகிய நீதியையும், இரக்கத்தையும் விசுவாசத்தையும் விட்டு விட்டீர்கள். (மத்தேயு 23:23) நாம் எல்லாவற்றிலும் உண்மையுள்ளவர்களாயிருக்க வேண்டுமென இயேசு சொன்னார்.

## நீங்கள் செய்ய வேண்டியது

6, தசமபாகம் என்றால் என்ன ?

..............................................................................

7. எபிரேயர் 10:25–ன் படி நாம் மற்ற விசுவாசிகளுடன் கூடி வருவதன் நோக்கம் ..............................................

..............................................................................

8. சங்கீதம் 1:1–2–ஐ மனப்பாடம் செய்யவும். ....................

பாடம் 16

# ஆவியினால் நிரப்பப்பட்ட ஜீவியம்

ஒவ்வொரு விசுவாசியினுடைய ஜீவியத்தின் குறிக்கோளும் ஆவியினால் நிரப்பப்பட்ட வாழ்க்கையாயிருக்க வேண்டும். ஒவ்வொரு கிறிஸ்தவனுடைய வாழ்க்கையிலும் தனது ஆவிக்குரிய நிலையில் ஒருபடி முன்னேறி செல்லும் அனுபவம் தான் தேவனுடைய ஆவியினால் நிரப்பப்பட்ட வாழ்க்கை எனப்படுவது. ஓர் ஆவியினால் நிரப்பப்பட்ட வாழ்க்கை என்பது முற்றிலுமாய் தேவனுக்கென சமர்ப்பிக்கப்பட்ட வாழ்க்கையாகும்.

இயேசு தாம் பிதாவினிடத்தில் சென்ற பின் தேற்றரவாளனாகிய பரிசுத்த ஆவியை அனுப்புவேன் என தமது சீஷர்களிடம் வாக்குபண்ணியிருந்தார்.

நான் பிதாவை வேண்டிக் கொள்ளுவேன், அப்பொழுது என்றென்றைக்கும் உங்களுடனே கூட இருக்கும் படிக்கு சத்திய ஆவியாகிய வேறொரு தேற்றரவாளனை அவர் உங்களுக்கு தந்தருளுவார். உலகம் அந்த சத்திய ஆவியானவரை காணாமலும் அறியாமலும் இருக்கிறபடியால் அவரைப் பெற்றுக் கொள்ள மாட்டாது; அவர் உங்களுடனே வாசம் பண்ணி உங்களுக்குள்ளே இருப்பதால், நீங்கள் அவரை அறிவீர்கள் .(யோவான் 14:16 17)

இந்த பரிசுத்த ஆவியானவரின் வருகை பெந்தேகோஸ்தே நாளன்று நிறைவேறிற்று. அதை குறித்து நாம் அப்போஸ்தலர் 2–ம் அதிகாரத்தில் வாசிக்கலாம். அன்றிலிருந்து ஒவ்வொரு விசுவாசியும், ஆவியினால் நிரப்பப்பட்ட வாழ்க்கை நடத்த இயலுகிறது.

இந்த பாடத்தில் ஆவியினல் நிரப்பப்பட்ட ஜீவியம் செய்தல் என்னவென்று நாம் கற்றுகொள்வோம். பரிசுத்த ஆவியினல் நிரப்பப்பட்ட வாழ்க்கை நடத்துபவர்களுக்கு உண்டாகும் பலனை குறித்தும் நாம் படிப்போம்.

## இந்த பாடத்தில் நீங்கள் படிப்பது

ஆவியினல் நிரப்பப்படுதல்

ஆவியினல் காக்கப்படுதல்.

## இந்த பாடம் உங்களுக்கு செய்யும் உதவி

* ஆவியினல் நிரப்பப்பட்ட வாழ்க்கை என்ருல் என்ன என்று விவரித்தல்.
* உனது வாழ்க்கையில் காணப்படும் காரியங்களினல் உன் ஜீவியம் ஆவியினல் நிரப்பப்பட்டதாய் காணப்படுகிறதா என சோதனை செய்து பார்க்கவும்.

## ஆவியினல் நிரப்பப்படுதல்

நோக்கம் 1. *ஆவியினல் நிரப்பப்பட்ட வாழ்க்கையில் காணவேண்டிய சில குணதிசயங்களை பகுத்தறிதல்.*

எபேசியர் 5:18–ல் ''ஆவியினல் நிறைந்திருங்கள்'' என வாசிக்கிரேம். இவ்வனுபவம் நாம் இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராய் ஏற்று கொண்டு பரிசுத்த ஆவியினல் அபிஷேகம் பெறும்போது நிகழ்கிறது. இயேசு தமது சீஷர்கள் பெறப்போகும் அந்த அருமையான அனுபவத்தை குறித்து பேசுகையில் அவர், *பரிசுத்த ஆவியினல் நிரப்பப்படுதல்* என்னும் வார்த்தைகளை உபயோகித்தார். அவர் அப்போஸ்தலர் 1:4–ல் இவ்வாறு சொன்னர், ''யோவான் ஜலத்தினலே ஞானஸ்நானங் கொடுத்தான்; நீங்கள் சில

நாளுக்குள்ளே பரிசுத்த ஆவியினுலே ஞானஸ்நானம் பெறு வீர்கள்.''

விசுவாசிகளாகிய நாமும் கூட அந்த சீஷர்கள் பெற்ற அதே அனுபவத்தை பெற்றுக் கொள்ளக்கூடும். இயேசு சொன்னபடியே அவர்கள் அவருடைய வார்த்தைக்கு கீழ் படிந்தார்கள். என் பிதா வாக்குத்தத்தம் பண்ணினதை, இதோ நான் உங்களுக்கு அனுப்புகிறேன். நீங்களோ உன்னதத்திலிருந்து வரும் பெலனுல் தரிப்பிக்கப்படும் வரைக் கும் எருசலேம் நகரத்தில் இருங்கள் என்ருர்.'' (லூக்கா 24:49).

நாம் பரிசுத்த ஆவியினுல் நிரப்பப்பட்டிருக்கிருேமா என் பதை அறிந்து கொள்ளுவது, பெந்தேகோஸ்தே நாளில் அவர்கள் பெற்ற அனுபவத்தை நாமும் பெற்று கொள்ளுவ தின் மூலமாகும். நாம் கற்றிராத பாஷைகள் மூலம் பரி சுத்த ஆவியானவர் நம் மூலமாய் பேசுவார். ''அவர்களெல் லாரும் பரிசுத்த ஆவியினுலே நிரப்பப்பட்டு ஆவியானவர் தங்களுக்கு தந்தருளின வரத்தின்படியே வெவ்வேறு பாஷை களிலே பேசத் தொடங்கினுர்கள். (அப்போஸ்தலர் 2:4)

ஆவியினுல் நிரப்பப்பட்ட வாழ்க்கைகள் அதன் கனிகளை கொடுக்க வேண்டும். ''ஆவியின் கனியோ, அன்பு, சந் தோஷம், சமாதானம், நீடிய பொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம் என்பவைகளே.'' (கலாத்தியர் 5:22)

நாம் ஆவியினுலே நிரப்பப்பட்டிருக்கிருேம் என எண் ணிக் கொண்டு மேற்கூறப்பட்ட கனிகள் நமது வாழ்க்கை யில் காணுவிட்டால், நான் எங்கு தவறிவிட்டேன் என தேவ னிடம் விசாரிக்கவும். இவ்விதமான கனிகள் நமது வழ்க் கையில் இல்லாவிடில் பரிசுத்த ஆவியானவர் நமது வாழ்க் கையில் கிரியை செய்ய கூடாதவண்ணம் நாம் தடை செய்கி றவர்களாய் காணப்படுவோம்.

அன்றியும் நீங்கள் மீட்கப்படும் நாளுக்கென்று முத்திரையாக பெற்ற தேவனுடைய பரிசுத்த ஆவியைத் துக்கப்படுத்தாதிருங்கள். (எபேசியர் 4:30)

தேவனுடைய சித்தத்திற்கு கீழ்ப்படிந்தவர்களாய் நாம் நடக்கும்போது ஆவியினால் நிரப்பப்பட்ட ஜீவியம் செய்யக் கூடும்.

துன்மார்க்கத்திற்கு எதுவான மதுபான வெறிகொள்ளாமல், ஆவியினால் நிறைந்து; சங்கீதங்களினாலும், கீர்த்தனைகளினாலும் ஞானப்பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் புத்திச்சொல்லிக்கொண்டு, உங்கள் இருதயத்தில் கர்த்தரைப் பாடிக் கீர்த்தனம் பண்ணி, நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்திலே எப்பொழுதும் எல்லாவற்றிற்காகவும் பிதாவாகிய தேவனை ஸ்தோத்தரியுங்கள். (எபேசியர் 5:18–20)

இந்த மேற்கூறப்பட்ட வசனங்கள் ஆவியினால் நிரப்பப்பட்ட வாழ்க்கை நடத்துதல் என்றால் என்னவென்று நமக்கு தெளிவாக விளக்கி காட்டுகிறது. நமது வாழ்க்கை நடத்தும்படியாக பரிசுத்த ஆவியானவருக்கு நாம் அனுமதி கொடுக்கும்போது அவர் நம்மை சரியான கிறிஸ்தவ வாழ்க்கை நடத்த உதவிச் செய்கிறார் (கலாத்தியர் 5:16). நாம் உற்சாகமுடையவர்களாகவும், ஜீவனுடையவர்களாகவும் காணப்பட பரிசுத்த ஆவியானவர் நமக்கு உதவிச் செய்வார். நாம் அவருடைய ஊழியத்தை செய்ய பெலனுடையவர்களாய் காணப்படுவோம். இதை குறித்து இரண்டு கொரிந்தியர் 4:16-ல் நாம் வாசிக்கலாம், ''எங்கள் புறம்பான மனுஷனானது அழிந்தும், உள்ளான மனுஷனானது நாளுக்கு நாள் புதிதாக்கப்படுகிறது.

## நீங்கள் செய்ய வேண்டியது

1. சரியான சொற்றொடருக்கு முன் காணப்படும் எழுத்தை சுற்றி வட்டமிடவும். ஒரு விசுவாசி பரிசுத்த ஆவியினால் நிரப்பப்படும்போது

   a) தான் அறியாத பாஷையில் பேசுவான்.

   b) கலாத்தியர் 5-ம் அதிகாரத்தில் குறிப்பிட்டிருக்கும் கனிகளை கொடுக்கிறவனாயிருப்பான்.

   c) ஆவிக்குரிய ரீதியில் வளருவான்.

   d) ஆவியானவர் தனது வாழ்க்கை நடத்த அனுமதிப்பான்.

2. எபேசியர் 5:18–20 மீண்டும் வாசிக்கவும். இவ்வசனங்களின் படி ஓர் விசுவாசியினுடைய வாழ்க்கையில் காணப்பட வேண்டிய மூன்று கிரியைகளையாவது குறிப்பிடவும்.

   ..............................................................................

   ..............................................................................

   ..............................................................................

3. கலாத்தியர் 5:16–ன் படி, ஆவியின்படி ஜீவிக்க நாம் செய்ய வேண்டியது என்ன ?

   ..............................................................................

## ஆவியினால் காக்கப்படுதல்

**நோக்கம் 2.** *ஓர் விசுவாசியை எங்ஙனம் ஆவியானவர் காத்து நிலை நிற்க செய்கிறார் என்றும் ஆவியின் வரங்கள் கிறிஸ்தவ குணாதிசயத்தோடு எங்ஙனம் இணைந்திருக்கிறது என்றும் பகுத்தறிதல்.*

நமக்கு உதவிச் செய்யும்படியாக பரிசுத்த ஆவியானவர் அனுப்பப்பட்டார். அவருடைய பல பெயர்களில் ஒன்று தேற்றரவாளன் என்பதாகும். யாராவது நம்மை தேற்று வார்களெனில் அவர்கள் நமது வாழ்க்கையை சுலபமாக்கு வர். நாம் தாங்கமுடியாத இக்கட்டான சூழ்நிலேயில் அவர் நம்மை தாங்குவார். ஆவியினுல் காக்கப்படுதல் என்ருல் நாம் இவ்வித செயலேயே குறிப்பிடுகிறேம்.

பரிசுத்த ஆவியானவர் நம்மை காக்கின்ருர். நமது கிறிஸ்தவ வாழ்க்கையின் ஒவ்வொரு பகுதிகளிலும் அவர் நமக்கு உதவிச் செய்கிருர். நமது ஜெப ஜீவியத்தில் பரிசுத்த ஆவியானவர் உதவி செய்கிருர். ''நாம் ஏற்றபடி வேண்டிக் கொள்ள வேண்டியதென்னவென்று அறியாமலிருக்கிற படி யால், ஆவியானவர் தாமே வாக்குக்கடங்காத பெருமூச்சுக ளோடு நமக்காக வேண்டுதல் செய்கிருர்.'' (ரோமர் 8:26)

பரிசுத்த ஆவியானவர் நம்மை நடத்துகிறவராகவும் காணப்படுகிருர். ரோமர் 8:14-ல் ''எவர்கள் தேவனுடைய ஆவியினுலே நடத்தப்படுகிருர்களோ, அவர்கள் தேவனு டைய புத்திரராயிருக்கிருர்கள்'' என காண்கிரேம்.

பரிசுத்த ஆவியானவர் சத்திய ஆவியாக இருந்து நம்மை சத்தியத்திற்கு நேராய் நடத்தும் ஒப்பற்ற ஆசிரிய ராகவும் காணப்படுகிருர். ''என் நாமத்தினுலே பிதா அனுப் பப்போகிற பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனே எல்லா வற்றையும் உங்களுக்குப் போதித்து, நான் உங்களுக்குச் சொன்ன எல்லாவற்றையும் உங்களுக்கு நினேப்பூட்டுவார்.'' (யோவான் 14:26) ''சத்திய ஆவியாகிய அவர் வரும்போது சகல சத்தியத்திற்குள்ளும் உங்களே நடத்துவார்.'' (யோவான் 16:13)

ஆவியினுல் நிரப்பப்பட்ட வாழ்க்கையின் பலன்களாக காணப்படுவது தான் ஆவியின் வரங்கள். இவ்வரங்கள் நாம்

தேவனுடைய பணியை செய்யும்படியான உபகரணங்களாய் காணப்படுகிறது. இவைகளில் முதலாவதாக காணப் படுவது தான் பெலன்.

பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெல னடைந்து, எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரி யாவிலும் பூமியின் கடைசி பரியந்தமும் எனக்கு சாட்சி களாயிருப்பீர்கள் என்ருர். (அப்போஸ்தலர் 1:8)

கிறிஸ்தவ வாழ்க்கைக்கு தேவையான விசேஷ வரங் களை பரிசுத்த ஆவியானவர் அருளுகிருர். ''வரங்களில் வித் தியாசங்கள் உண்டு, ஆவியானவர் ஒருவரே.'' (1 கொரிந் தியர் 12:4) 1 கொரிந்தியர் 12:8–11-ல் குறிப்பிடப்பட்டி ருக்கும் ஆவியின் வரங்களாவன: ஞானத்தை போதிக்கும் வசனம், அறிவை உணர்த்தும் வசனம், விசுவாசம், குண மாக்கும் வரம், அற்புதங்களைச் செய்யும் சக்தி, தீர்க்கதரி சனம் உரைத்தல், ஆவிகளை பகுத்தறிதல், பற்பல பாஷைகளை பேசுதல், பாஷைகளை வியாக்கியானம் பண்ணுதல் என் பவைகளே.

நமக்கு அருளப்பட்ட கிருபையின்படியே நாம் வெவ் வேறன வரங்களுள்ளவர்களான படியினலே, நம்மில் தீர்க்கதரிசனஞ் சொல்லுகிற வரத்தையுடையவன் விசுவா சப் பிரமாணத்துக்கேற்றதாகச் சொல்லக்கடவன். ஊழி யஞ் செய்கிறவன் ஊழியத்திலும் போதிக்கிறவன் போதிக் கிறதிலும், புத்தி சொல்லுகிறவன் புத்திசொல்லுகிறதி லும் தரித்திருக்கக்கடவன். (ரோமர் 12:6–8)

பரிசுத்த ஆவியானவர் தேவனுடைய பிள்ளைகளுக்கு ஆசீர்வாதத்தையும், மகிமையையும் கொடுக்கிருர்.

நாம் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறேமென்று ஆவி யானவர் தாமே நம்முடைய ஆவியுடனேகூட சாட்சி கொடுக்கிருர். நாம் பிள்ளைகளாளுல் சுதந்தரருமாமே;

தேவனுடைய சுதந்தரரும், கிறிஸ்துவுக்கு உடன் சுதந்த தருமாமே; கிறிஸ்துவுடனே கூட நாம் மகிமைப் படும் படிக்கு அவருடனே கூட பாடுப்பட்டால் அப்படியாகும். (ரோமர் 8:16-17)

கடந்த காலங்களில் தேவனுடைய ஆவியானவர் எங் கனம் ஊற்ற பட்டாரோ அங்கனமே அவர் இன்றும் தமது ஆவியை பொழிந்து கொண்டிருக்கிருர். அநேக கிறிஸ்தவர் களை தேவன் இன்றும் அபிஷேகித்து கொண்டு வருகிருர் உங்கள் சபையிலுள்ள, போதகர், மூப்பர் மற்றும் அனைவ ரும் தேவனுடைய ஆவியினுல் அபிஷேகம் பண்ணப்பட்டு தேவனுக்கென்று அதிகமாய் ஊழியஞ்செய்ய நீங்கள் அவர் களுக்காய் ஜெபிக்கவும்.

நமது வாழ்க்கையிலே எந்த சூழ்நிலையிலும் நம்மை நிலை நிற்க செய்வது இந்த ஆவியினுல் நிரப்பப்பட்ட வாழ்க்கை யாகும். ''.... உபத்திரவமோ, வியாகுலமோ, துன்பமோ, பசியோ, நிர்வாணமோ, நாசமோசமோ, பட்டயமோ? இவைகளெல்லாவற்றிலேயும் நாம் நம்மில் அன்பு கூருகிற வராலே முற்றும் ஜெயங் கொள்ளுகிறவர்களாயிருக்கிரேம். (ரோமர் 8:36-37)

## நீங்கள் செய்ய வேண்டியது

4. பரித்த ஆவியானவர் நம்மை காக்கிருர் என்கையில் நாம் பொருள் கொள்வது அவர் ..................................
.........................................................................

5. பரிசுத்த ஆவியானவருக்கு கொடுக்கப்பட்டிருக்கும் ஐந்து பெயர்கள் அவர் எந்தெந்த முறைகளில் நமக்கு உதவி செய்கிருர் என வெளிப்படுத்துகிறது. அவரு டைய ஐந்து வெவ்வேறு பெயர்களாவன ......................
.........................................................................

............................................................................................

............................................................................................

6. கீழ்காணும் சூழ்நிலைகளுள் எந்தெந்த சூழ்நிலைகளில் நீங்கள் பரிசுத்த ஆவியானவரின் வரங்களை உபயோகப் படுத்துகிறீர்கள் ?

   a) ஓர் தேவை நிறைந்த குடும்பத்திற்கு உதவி செய்தல்

   b) ஞாயிறு பாட சாலை வகுப்பை எடுக்க ஏற்று கொள்ளுகையில்.

   c) தாய் சுகமற்றிருக்கையில் அவர்களுடைய பிள்ளைகளை கவனிப்பது.

   d) சிறைசாலை சந்திக்கும் தருணம் கிடைக்கையில்.

   e) உனது தொழிற்சாலையில் வேலையிலிருக்கையில்.

# பாராட்டுகள் !

இந்த பாடத்தை நீங்கள் பூர்த்தி செய்தபடியினால் நாங்கள் உங்களை பாராட்டுகின்றோம். இப்பாடம் உங்களுக்கு மிகுந்த ஆசீர்வாதத்தை அளித்திருக்கும் என நாங்கள் நம்புகிறோம். பாடங்களை மீண்டும் மீண்டும் வாசித்து, கற்றுகொண்ட காரியங்களை நடைமுறை வாழ்க்கையில் செயல்படுத்தவும். இந்த பாடங்களை நீங்கள் படிப்பதின் மூலம், மனிதனை பாவத்திலிருந்து மீட்டு இரட்சிக்க வந்த உலகத்தின் இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவை உங்கள் சொந்த இரட்சகராய் ஏற்று கொள்ள வேண்டுமென்பதே எங்கள் நோக்கமும் ஜெபமும் ஆகும். அதற்கென தேவன் தாமே உங்களுக்கு உதவி செய்வாராக.

We Believe—Final Questions (Tamil)

**From**

NAME ..................................................................

ADDRESS ..................................................................

..................................................................

..................................................................

No .................. Date..................

---


ICI Nearest Centre

ICI UNIVERSITY

1ST FLOOR, 1/62/14 RAVI COLONY, ST. THOMAS MOUNT, CHENNAI - 600016

PHONE : +91-44-4351 9774

Email : iciuniversitymdrs@gmail.com

# நாம் விசுவாசிப்பது

## இறுதி வினாத்தாள்

W.B.Q. Sheet.

குறிப்புகள் :

* இக்கேள்விகளுக்கு விடையளிக்கும் முன் புத்தகத்தி லுள்ள எல்லா கேள்விகளுக்கும் விடையளிக்க கவனிக் கவும்.

* சரியான விடைகளுக்கு மட்டும் அடியில் கோடுபோட்டு, இக்கேள்வித் தாளை மட்டும் எங்களுக்கு அனுப்பவும். புத்தகம் அனுப்ப வேண்டாம்.

1. வேதாகமம் தெய்வீக ஏவுதலினால் எழுதப்பட்டது என நாம் கூறும்போது அது;
   a. பழைய ஏற்பாட்டை மட்டுமே குறிப்பிடும்.
   b. புதிய ஏற்பாட்டை மட்டுமே குறிப்பிடும்.
   c. இரண்டையும் குறிப்பிடும், (பழைய, புதிய)

2. வேதாகமம் நமக்கு அளிக்கப்பட்டதின் முக்கிய நோக்கம்,
   a. நமது சரீர வளர்ச்சிக்காக.
   b. நமது ஆவிக்குரிய வளர்ச்சிக்காக.
   c நமது பாவத்தை எடுத்துக்காட்டும்படியாக.

3. நாம் தேவனை தொழுது கொள்ள வேண்டியது,
   a அழகான ஆலயத்தில்.
   b. ஆவியிலும் உண்மையிலும்.
   c. நாம் விரும்பும் விதத்தில்.

4 தேவன் மனிதனை உண்டாக்கினது,
   a. தமது சாயலில்.
   b. பாவ சுபாவத்தோடு.
   c. ஆவியில் பலவீனனாக.

5 பாவத்தின் பலன் (விளைவு) என்ன ?

a. மரணம் b. ஜீவன் c. எந்த விளைவுமில்லை

6. மற்றவர்களை நாம் பகைப்போமெனில் அது,

a. நமக்கே கெடுதி உண்டாக்கும்

b. தேவ கட்டளைக்கு கீழ்ப்படியாமையாகும்.

c. நமக்கு ஒன்றும் நேரிடுவதில்லை.

7. பாவத்தின் பிடியிலிருந்து விடுதலை பெற நாம் செய்ய வேண்டியது,

a. ஆலயத்திற்கு காணிக்கை செலுத்துதல்.

b. இயேசு கிறிஸ்துவை நமது சொந்த இரட்சகராய் ஏற்று கொள்ளுதல்.

c. ஜெபங்களை மீண்டும் மீண்டுமாக உருவிடுதல்,

8. கிறிஸ்து என்னும் பதத்தின் பொருள்,

a. இரட்சகர். b. தேவ குமாரன்.

c. அபிஷேகம் பண்ணப்பட்டவர்

9. இரட்சிப்பு என்றால்,

a. நாம் நம்பியிருப்பது எது ஆனாலும் அதலே உண்மையாயிருத்தல்

b. இயேசு கிறிஸ்து மூலம் பாவத்திலிருந்துள்ள விடுதலை.

c. தருமம் செய்தல்.

0. பரிசுத்த ஆவியானவர்

a. பிதாவினால் உண்டாக்கப்பட்டவர்.

b பிதாவை போலவே நித்தியர்.

1. வேதாகமத்தில் சபை குறிப்பிடப்பட்டிருப்பது,

a. சரீரமாகிய கிறிஸ்துவின் தலையாக.

b. கிறிஸ்துவின் மணவாட்டியாக.

c. கட்டிடத்தின் மூலைக் கல்லாக.

12. தூதர்கள்:

a. வணங்கப் பட வேண்டியவர்கள்.

b. தேவனுடைய அதிகாரமின்றி பேசவும் கிரியைச் செய்யவும் கூடியவர்கள்.

c. தேவனுடைய பணிவிடைக் காரராயிருந்து அவருடைய பிள்ளைகளுக்கு உதவிச் செய்கிறவர்கள்.

13. வெள்ளை சிங்காசன நியாயத்தீர்ப்பு எப்பொழுது நிறைவேறும் ?
   a. இயேசுவின் ஆயிரமாண்டு ஆளுகைக்கு முன்.
   b. ஆயிரமாண்டு ஆளுகை காலத்தில்.
   c. ஆயிரமாண்டு ஆளுகைக்கு பின்

14. தேவன் நியாயப் பிரமாணத்தை அளித்ததின் நோக்கம்:
   a. மனிதன் சந்தோஷமுடையவனாயிருக்கலாகாதென
   b. மனிதனை பாவத்திலிருந்து இரட்சிக்க.
   c. நன்மை தீமை மனிதனுக்கு காட்டும்படியாக.

15. எபேசியர் 2:8–9ன் படி நாம் இரட்சிக்க படுவது :
   a. நமது நற்கிரியைகளினால்.
   b. நமது ஜெபத்தினால்.
   c. கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு.

16. ஒரு கிறிஸ்தவன்
   a. தனக்கென சுய தீருமானங்களை எடுக்க உரிமையுடையவன்.
   b. பரிசுத்தத்தை குறித்து சற்றேனும் கவலைப்பட வேண்டியதில்லை.
   c. தன்னை விட கிறிஸ்துவையே பிரியப்படுத்துவான்.

17. தண்ணீர் முழுக்கு ஞானஸ்நானம் என்பது
   a. சரீரத்தின் அழுக்கை அகற்றுதலாகும்.
   b. வெளியரங்கமாய் சாட்சி பகருதலின் ஒர் முறையாகும்.
   c. தண்ணீர் தெளித்தலாகும்.

18. ஆவியின் கனிகள் எனப்படுவது.
   a. சந்தோஷம், சமாதானம், சாந்தம், தாழ்மை.
   b. தீர்க்க தரிசனம், விசுவாசம், அற்புதங்கள்.
   c. இச்சையடக்கம், அன்பு, நற்குணம், பொறுமை.